Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 வெள்ளி - 05 26 - 01 - ஏப்பிரல் - 2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 26 . 03 . 2004
மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

# மக்களின் உரிமைக்கு எத்தனைத் தடைகள்...

தேர்தலில இந்தத்தடவையும் வடக்கு கிழக்கு மக்களின் வாக்குரிமை கேள்விக்குறியாக இருப்பதாக கவலை தெரிவித்துள்ளது, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு என்ற 'பவ்ரல்' தேர்தல் கண்காணிப்புக்குழு முதல் தடவையாக வட-கிழக்கில் இம்முறை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இருந்து கணிசமான அளவு வாக்காளர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்தி நடக்கவிருக்கும் தேர்தலில் வாக்களிப்பில் ஈடுபடத் தயாராகின்றனர்.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து வாக்களிக்கச்செல்லும் வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் வரையறுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் வாக்களிக்கச்செல்லும் போதான இராணுவ சோதனைச்சாவடி நடைமுறைகள் குழப்பம் நிறைந்ததாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தேர்தல் தொகுதியில் வாக்களிக்கவேண்டிய விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள 64287 வாக்களர்களும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து முகமாலை இராணுவச்சோதனைச்சாவடியில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்க செல்லத்தக்க எட்டு உள்நுழைவு நிரைகளை உருவாக்கவே படைதரப்பு சம்மதித்துள்ளது. இது வாக்களிப்பு நடைபெறும் குறித்த தினத்தில், வாக்களிக்க வரும் எல்லா வாக்காளர்களையும் வாக்குச்சாவடிகளினுள் இட்டுச்செல்லப் போதுமானதுமானதா என்பது கேள்விக்குறியே.

அதேவேளை, மறுபுறத்தே புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து புளியங்குளம் சோதனைச்சாவடியூடாக ஓமந்தை மகாவித்தியாலயச் சூழலில் அமைக்கப்படவிருக்கும் வாக்களிப்புக் கொத்தணிச் சாவடிகளுக்கு செல்லவேண்டிய வாக்காளர்கள் புளியங்குளம் சோதனைச்சாவடியில் ஆள் அடையாள அட்டை முதலான, தேவையான ஆவணங்களை பதிவு செய்து சோதனைக்குட்படுத்தப்பட்டதன் பின்னரே வாக்களிப்பு நிலையம் செல்ல அனுமதிக்கப்படுவர் என இராணுவ தரப்பினரால் வன்னித்தெரிவத்தாட்சி அலுவலருக்கு கூறப்பட்டிருப்பதாகவும் அதன் பிரகாரம் அடையாள அட்டையுடனேயே வாக்களர்கள் வாக்களிப்புக்கு செல்லவேண்டியும் ஏற்பட்டுள்ளது.

இது இலங்கையின் தேர்தல் நடைமுறைக்கு முற்றிலும் மாறானதொன்று.

தொடர்ந்த போர் காரணமாகவும் இடப்பெயர்வுகள் காரணமாகவும் தொடர் அவலப்பட்டிருக்கும் வன்னி மக்கள், இன்று தமது வாக்கினை அளிப்பதற்காக தமது அடையாள அட்டைகளையும் தேடவேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாக்கியுள்ளனர். ஏனைய பகுதிகளில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை மட்டுமன்றி வாக்காளர் அட்டையே தேவையற்ற நிலை காணப்படும் போது, புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வாக்கு சாவடிகளுக்கு வரும் மக்களிடம் அடையாள அட்டை பரிசோதனையை மேற்கொள்வது எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாத செயலே.


எல்லாவற்றிற்கும் மேலாக, விடுதலைப்புலிகள் தமது முன்னணி நிலைகளை ஒரு கிலோமீற்றர் வரை பின்தள்ள தயார் என கூறியிருந்தும், நாகர் கோயில் போன்ற பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி வாக்காளர்களுக்கான மேலதிகமான வாக்களிப்பு நிலையங்களாக உருவாக்கி, முழு அளவிலான புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்களின் வாக்களிப்பு சாத்தியமாவதை படைதரப்பு தடுத்தே வருகின்றது.

புலிகளின் கட்டுபாட்டுப்பகுதியில் இருந்து பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்கவேண்டிய நிலை இருப்பினும், புலிகள் தம்மால் இயன்ற உதவிகளை - முன்னணி நிலைகளை பின்வலிக்கச்-செய்ய ஒப்புக்கொண்டிருப்பினும் படைதரப்பு புலிகளின் பகுதி மக்களின் வாக்களிப்பை குறைப்பதற்கான நடவடிக்கைகளையே, மேலதிகசாவடிகளை அமைக்கவிடாது-மக்களை ஒரேநேரத்தில் இராணுவகட்டுப்பாட்டு பகுதிகளினுள் உள்நுழைவதற்கான வழிகளை, வரிசை நிரைகளை ஏற்படுத்தாது-சோதனை நடவடிக்கைகள், அடையாள அட்டை பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் சாதித்துவிட முயல்கின்றது.

இது எம்மக்களிற்கு தெரியாததொன்றல்ல, இந்தவகை இழுத்தடிப்புகளினதும் - தடைப்படுத்தல், தடங்கல் ஏற்படுத்தல், அச்சுறுத்தல் மேற்கொள்ளல் என்பவற்றினதும் காரணம் புரியாததுமல்ல.

எல்லாவகையிலும் தமக்கிருக்கும் அனைத்து தடைகளையும் தாண்டி ஈழத்தமிழரின் தேசிய விடுதலையில் மிக கூர்மையான இந்தக்கட்டத்தில் தமது ஆணையை தமிழ் மக்கள் தமது ஏக தலைமைக்கும், தமது விடுதலை பயணத்தின் தடை நீக்கிகளுக்கும் வழங்குவதற்காக முன்வரவேண்டும்; முன்வந்துவிட்டனர் என்பதே மெய்யான நிலையாகும். இந்நிலையே இன்று அவர்களுக்கெதிரான தடைகளை உடைத்தெறியும் மெய்யான தடையுடைப்பாகும்.

புகழ்



# மாமனாரின் தவறுக்கு மருமகளின் பரிகாரம்



கடந்த 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது கண்டி உடத்தலவின்னவில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் மாமனாரும், முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த அரசியல் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் உத்தரவின் பேரில் சுட்டுக்கொல்லப்பட்ட பத்து முஸ்லிம் இளைஞர்களுக்காக சனாதிபதி சந்திரிகா மன்னிப்புக் கோரியுள்ளார்.

சந்திரிகாவின் அராஜக ஆட்சிக் காலத்தில் சனநாயக ரீதியில் நடைபெற வேண்டிய தேர்தலை தான்தோன்றித்தனமாக அதிகாரங்களைக் கையிலெடுத்து வெறித் தனமாடிய ரத்வத்தவின் வீர பிரதாபங்களுக்கு பலியானவர்களே இந்த பத்து அப்பாவி முஸ்லிம் இளைஞர்களாகும்.

ஒரு நாட்டின் குடிமக்களையும், நாட்டையும் பாதுகாக்க வேண்டியமுக்கிய பொறுப்புக்களில் ஒன்றான பாதுகாப்பு அமைச்சின் பிரதி அமைச்சராக இருந்த ஜெனரல் ரத்வத்தவின் இந்தச் செயலுக்கு அவர்மட்டுமல்ல குற்றவாளி ஒரு நாட்டின் சனாதிபதி என்ற வகையிலும், அதேநேரத்தில் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் சந்திரிகாவுக்கும் இதில் பாரிய பங்குண்டு.

அத்தோடு சந்திரிகாவின் இந்த மன்னிப்பு வெளிவந்த காலப்பகுதி இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனென்றால் இந்த மன்னிப்பினை சந்திரிகா ஒரு தேர்தல் காலத்தில் அல்லாமல் ஒரு பொதுவிலான ஒரு காலத்தில் மன்னிப்பு கேட்டிருப்பாராகில் அது ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளலாம். பதிலாக சந்திரிகா பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில் அதுவும் சந்திரிகா அமைத்திருக்கும் கூட்டு தொடர்பாக பல்வேறு விதமாக ஐயங்களை எழுப்பியிருக்கும் நிலையில் இது ஒரு கேலிக்கூத்தாகவே இருக்கிறது.

பொதுவாகவே இம்முறை நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளின்படி எந்தவொரு கட்சியும் தனித்து அறுதிப்பெரும்பான்மையை பெறாது என கருத்துக்கணிப்புக்கள் கூறியிருக்கும் நிலையில் முஸ்லிம்களின் வாக்கைப்பெற்றுக்கொள்வதற்காக ஒரு வகையில் முஸ்லிம்களை ஏமாற்றும் விதமாக சந்திரிகா வடிக்கும் நீலிக் கண்ணீரே சந்திரிகாவின் இந்த மன்னிப்பு.

அவ்வாறு இல்லாது சந்திரிகா தவறை உணர்பவராக இருந்தால் நாட்டின் குடிமக்களில் பத்து அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டதற்காக இவர் பதவியைத் துறந்திருக்க வேண்டும் அவ்வாறு சந்திரிகா செய்வாரா?

சந்திரிகா ஒரு உண்மையான மக்களினதும் நாட்டினதும் விசுவாசியாக இருப்பரானால் இத்தகைய தொரு முடிவையே எடுத்திருக்க வேண்டும்.

பதிலாக சந்திரிகா இந்த தேர்தலில் தானும் தனது கட்சியும் வெற்றிபெறவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு மன்னிப்பு கோரி நிற்கிறார்.

அத்தோடு சந்திரிகாவின் ஆட்சிகாலத்தில் தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட கொடிய யுத்தத்தின் எத்தனை ....அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள், எத்தனை தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கொல்லப்பட்டும் காணாமற் போயும் உள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்றுகூட பதில் அளிக்க மறுத்துவரும் சந்திரிகாவின் இந்த போக்கை எதனோடு ஒப்பிடமுடியும்.


வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் இன்னும் எத்தனையோ பெற்றோரும், கணவனை இழந்த மனைவிமாரும் காணாமற் போனோர் சங்கத்தில் அங்கத்தவர்களாகி பதாகைகளுடன் அலைகின்றார்கள். இவர்களுக்கு சந்திரிகா கூறிய அல்லது கூறும் பதில்தான் என்ன?

'அரியாலை செம்மணி என சந்திரிகாவின் அனுமதியின் அடிப்படையில் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றியபோது அவரின் படைகளால் கொல்லப்பட்டும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும் புதைக்கப்பட்ட செயல்கள் நீதியின் முன்கொண்டுவரப்பட்ட போதும் இதே சந்திரிகா என்ன செய்தார்.

இவை எவற்றையும் மதிக்காத அல்லது இவைபற்றி சிந்திக்காத சந்திரிகா இப்போது மட்டும் அந்த பத்து முஸ்லிம் இளைஞர்களுக்காக கண்ணீர் வடிப்பதை பார்க்கும் போது சந்திரிகாவின் செயல் ஒரு கோரத்தனமானதாகக் காணப்படுகின்றது.

மக்களின் உணர்வுகளையோ நாட்டின் எதிர்கால சுபிட்சத்தையோ கவனத்தில் எடுக்காத ஒரு சனாதிபதியிடம் அறிவுள்ள எந்த மக்களும் எதிர்பார்க்கமாட்டார்கள் என்பதே உண்மை.

ஆனால், சனாதிபதி சந்திரிகா தன்னையும் தன்னுடைய சகபாடிகளினதும் அடாவடித்தனங்களையும் அராஜகங்களையும் மறப்போம் மன்னிப்போம் என கனவு காண்பதுதான் இன்னும் மகாமோசமான செயலாக உள்ளது.



பணமும் இங்கித நடத்தையும் ஒரு கனவானை உருவாக்குகின்றன. - தாமஸ் ஃபுல்லர்

# கருணாவின் முன்னால் உள்ள தெரிவுகள்

கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் *சுவர்னவாகினி* தொலைக்காட்சிச்சேவையில் *வசங்வாதய* என்றொரு நிகழ்ச்சி உண்டு இது இரவு 9.30 மணியிலிருந்து நடு இரவு தாண்டி ஒரு மணிவரை நீடிப்பதுண்டு. இதில் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள். அண்மையில் இந்த நிகழ்ச்சியில் யு.எம்.பி.ப்பிரமுகர் ராஜிதசேனாரட்ண கலந்துகொண்டார். அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது "கடந்த இரண்டு வருடகால சமாதானத்தால் நீங்கள் சாதித்தது என்ன?" என்று அதற்கவர் சொன்னாராம்.... வடக்கையும் கிழக்கையும் பிரித்ததுதான் என்று. அதாவது சமாதான காலத்தில் தற்சமயம் கிழக்கில் தோன்றியிருக்கும் பிரச்சினைகளைக் கருதியே அவர் இப்பிடிச் சொன்னாராம். இது முதலாவது.

இரண்டாவது, அண்மையில் திருமலையில் *கிழக்குமக்கள் அமைப்பு* என்ற பெயரில் ஒரு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதாம். இது ஜே.வி.பி.யினுடைய வேலை என்று கூறப்படுகிறது. அந்தப்பிரசுரத்தில் வந்திருந்த விபரங்களின் ஒருபகுதியின் சாராம்சம் வருமாறு.... இலங்கைத்தீவில் அரசபடைகளுடன் தமிழர்கள் யுத்தம் செய்யமுன்பே ஒரு யுத்தம் இருந்தது. அது கிழக்குப்பகுதி தமிழர்களுக்கும் வடக்குப்பகுதி தமிழர்களுக்கும் இடையில் நடந்தது. ஈழப்போர் தொடங்கியபின் அது வெளித்தெரியவரவில்லை. இப்பொழுது அது வெளியில் வந்துவிட்டது.... என்று.

இந்த இரண்டு விசயங்களும் ஒன்றை உணர்த்துகின்றன. அண்மையில் மட்டு.அம்பாறைப்பகுதிகளில் தோன்றியுள்ள பிரச்சினைகளைக் குறித்து கொழும்பு மையச் சிங்களக் கட்சிகள் உள்ளூர என்ன நினைக்கின்றன என்பதே அது.

அவர்கள் வெளிப்படையாக உத்தியோகபூர்வமாகக் கதைக்கும் போதெல்லாம் கனவான் அரசியலுக்கேயான தொனியுடன் அது புலிகளின் உள்வீட்டுப்பிரச்சினை என்று கூறிவிடுகிறார்கள். ஆனால், உள்ளூர அவர்கள் என்னவிரும்புகிறார்கள் என்றால், இந்தப்பிரச்சினைகள் முற்றிமுடிவில் வடக்கும் கிழக்கும் பிரிந்துவிடவேண்டும் என்றே. அதாவது, பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட கூறுவதுபோல இந்தப்பிரச்சினை புலிகளின் உள்வீட்டுப்பிரச்சினை என்பதற்குமப்பால் முழு இலங்கைத் தீவினதும் பிரச்சினை என்ற அர்த்தத்தில்.

இதில் முதலில் அவர்கள் ஒன்றைத்தெளிவாகப்புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். அதாவது இந்தப்பிரச்சினையில் திருகோணமலை மாவட்டம் உள்ளடங்கவில்லை என்பது. இதில் மட்டு. அம்பாறை மாவட்டங்களே சம்பந்தப்படுகின்றன. எனவே இதை முழுக் கிழக்கிற்கும் உள்ள ஒரு பிரச்சினையாகக் காட்டுவதே பிழை. இது மட்டு. அம்பாறை மாவட்டங்களில்தோன்றியிருக்கும் ஒரு பிரச்சினையே.

மற்றது, இந்தப்பிரச்சினைகளின் இறுதிவிளைவாக வடக்கும் கிழக்கும் பிரியும் ஒரு நிலைவரலாம். அதாவது, தமிழர்களின் பலம் உடையும் ஒரு நிலைவரலாம் என்பது அவர்களுடைய விருப்பமும் கனவும் மட்டுமே. யதார்த்தத்தில் அப்படியேதும் நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவே.

உடனடியாக சில பின்னடைவுகள், தடங்கல்கள் உண்டாகலாம்தான். ஆனால், நீண்டகால நோக்கில் இது வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் ஒன்றாக வளர்வதற்கான களயதார்த்தம் பலவீனமாய் உள்ளது என்பதே சரி. இது எப்படி என்று பார்ப்போம்.

கிழக்கில் இதற்கு முன்பு பிரதேசவாதத்திற்கு மிகத் தீவிரமாகத் தலைமைதாங்கிய எவருமே அதன்பின் தமிழ்த்தேசிய அரசியலுக்குத் திரும்பிவரமுடிந்ததில்லை. அவர்களுடைய தீவிரபிரதேசவாதம் ஒரு கட்டத்தில் அவர்களை தமிழ் தேசிய அரசியலுக்கு விரோதமான கொழும்புமையக் கட்சிகளுடன் கூட்டுச்சேர வைத்துவிடுகிறது. பிரமுகர்கள் கொழும்புமையக்கட்சிகளின் கருவிகளாகமாறி அமைச்சர் பதவிகளையோ அல்லது வெளிநாட்டுத்தூதுவர் பதவிகளையோ பெற்றுக்கொண்டு தமிழ்த்தேசிய அரசியல் அரங்கிலிருந்து மங்கி மறைந்துபோய்விடுகிறார்கள்.

இதுதான் இராசதுரைக்கும் தேவநாயகத்துக்கும் நடந்தது. இப்பொழுது மட்டக்களப்பில் அதிகம் பிரதேசவாதத்தைக்கக்கும் ஒரு அரசியல் பிரமுகர் முன்பு யு.என்.பி.ப் பிரமுகராய் இருந்தவர் என்பதை அப்பிரதேச வாசிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பிரதேசவாதம் எப்பொழுதும் தேசிய ஐக்கியத்தை உடைக்கப் பார்க்கிறது. பிரதேச வாதமும் தேசிய ஐக்கியமும் ஒன்றாய் இருக்கமுடியாத இரு விவகாரங்கள். இதன் அர்த்தம் ஒரு பலம்வாய்ந்த பிரதேசம் பலம் குன்றிய பிரதேசத்தை விழுங்கலாம் என்பதோ அல்லது அதற்கெதிராக பலம் குன்றிய பிரதேசம் போராடக் கூடாதோ என்பதோ அல்ல.

மாறாக பிரதேசங்களுக்கிடையில் உயர்வுச் சிக்கல் மற்றும் தாழ்வுச்சிக்கல்களின் பிரகாரம் பிரச்சினைகள்தோன்றும்போது அவை சினேக முரண்பாடுகளாய்த்தான் கையாளப்படவேண்டும். தவிர நிச்சியமாக பகைமுரண்பாடுகளாய் அல்ல. மெய்யான தேசிய ஐக்கியம் என்று வரும்போது பொதுத்தேசிய அக்கறையோடு பரஸ்பரம் விட்டுக் கொடுத்து சில சமயங்களில் சில பிரச்சினைகளை ஒத்திப்போட்டு அல்லது ஆகக்கூடியபட்சம் சகிப்புத்தன்மையோடு நிலைமைகள் கையாளப்படவேண்டும்.

இதெல்லாம் பிரதேச நலன்கள் பிரதேசவாதமாக மாறாதவரை தான். ஆனால் பிரதேச அபிமானம் பிரதேச வாதமாக விகாரமடையும் ஒரு நிலைவருகிறது என்றால், அங்கே தேசிய ஐக்கியம் கைவிடப்படுகிறது என்றே அர்த்தம். அதாவது தேசியப் பொறுப்புணர்ச்சி, தேசியச் சகிப்புத் தன்மை, போன்றவை கைவிடப்படுகின்றன என்பதே அர்த்தம்.




எனவே, பிரதேசவாதத்திற்கு தலைமைதாங்கும் ஒருவர் தேசிய அரசியல் அரங்கில் அதிககாலம் நின்றுபிடிக்கமுடியாது. அவர் பகைவருடன் கூட்டுச்சேர்வதைத்தவிர வேறுவழியுமிருக்காது.

இப்படிக்கூட்டுச்சேரும் போது அவர் காலப் போக்கில் தேசிய அரசியல் அரங்கிலிருந்து மங்கி மறைந்து போய் விடுகிறார்.

தற்சமயம் கருணாவின் முன்னாலுள்ள தெரிவுகளும் இத்தகையவைதான்.

சமாதானத்தில் அவரை ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்ள இனிவரப்போகும் எந்தவொரு அரசாங்கமும் தயக்கம் காட்டும். ஏனெனில் அவரை ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்வது என்பது புலிகளை சீண்டக்கூடியது. இது ஒட்டுமொத்த சமாதான முயற்சிகளையே அசைத்துவிடும் புலிகளைப்பற்றி நன்கு தெரிந்துவைத்திருக்கும் எந்தவொரு அரசாங்கமும் சமாதானத்தை முறிப்பது என்று முடிவெடுத்தாற்தான் கருணாவை ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்ளமுடியும். எனவே, கருணாவை ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்வதில் இனிவரும் அரசாங்கம் எதற்கும் அடிப்படைப்பிரச்சினைகள் உண்டு.

அதேசமயம் கருணாவால் சண்டையைத்தொடங்கவும் முடியாது. ஏனெனில், அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தை தொடர்ந்தும் தக்கவைப்பதாயிருந்தால் படைத்துறைப் புவியியல்நோக்கில் பலபிரச்சினைகள் உண்டு.

இது குறித்து இரு கிழமைகளுக்கு முன்பு வீரகேசரி வார இதழில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல மீடியாக்காரர் சிவராம் எழுதியிருந்ததை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

வன்னீப் பின்தளத்துடனான தனது தொப்புள்க்கொடி உறவை அறுத்துக்கொண்ட பின்பு மட்டக்களப்பில் ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை வைத்திருப்பதில் இருக்கக்கூடிய வரையறைகளை வைத்துப்பார்க்கும்போது கருணாவுக்குள்ள ஒரே தெரிவு அரசபடைகளுடன் நெருங்கிவருவதுதான். இதன்மூலம்தான் பின்தள வசதிகளற்ற அவருடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஓரளவுக்கேனும் தக்கவைக்கமுடியும்.

ஆனால், அப்படியொரு முடிவெடுத்தால் அதற்குப்பின் அந்தப்பிரதேசத்தை ஒரு விடுதலைப் பிரதேசம் என்று சொல்லிக்கொண்டிருக்கமுடியாது.

எனவே, சமாதானத்திலும் ஒரு தரப்பாக நிற்கமுடியாது. சண்டைக்கும் திரும்பிச் செல்லமுடியாது. இப்படிப்பார்த்தால் கருணாவின் முன்னால் உள்ள தெரிவுகள் மிகக் குறைவே.

ஒரு புறம் அவர்தலைமை தாங்கிக்கொண்டிருக்கும் தீவிர பிரதேசவாதம் அவரை தமிழ்த்தேசிய அரசியலிலிருந்து அதிகம் அந்நியப் படவைக்கிறது. இன்னொருபுறம் வன்னித் தாய்த்தளத்துடன் தனது தொடர்புகளைத் துண்டித்துவிட்ட ஒரு நிலையில், அவருடைய கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசத்தை தக்கவைப்பதற்காக அவர் தமிழ்த்தேசிய

**நிலாந்தன்**

அரசியலுக்கு விரோதமான சக்திகளுடன் கூட்டுச்சேரவேண்டியிருக்கிறது.

எனவே, எப்படிப்பார்த்தாலும் அவர் தெரிந்தெடுத்திருக்கும் பாதை அவரை தமிழ்த்தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து தனிமைப்படும் ஓரிடத்துக்கே இட்டுச்செல்லவல்லது.

இந்நிலையில் தனது இனத்தின் தேசிய அரசியலில் தனக்குரிய பாத்திரத்தை இழந்துவரும் ஒருவர், தனது பிரதேசத்தை ஏனைய பிரதேசங்களிலிருந்து பிரிக்கமுயலும் பெரிய இனமொன்றின் பேராசைகளுக்கு நீண்டகாலம் உதவிக் கொண்டிருக்கமுடியாது.

அதாவது, வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு கருணாவை ஒரு கருவியாகப்பயன்படுத்துவதில் கொழும்புமையத் தலைமைகளுக்கு அடிப்படை வரையறைகள் உண்டு என்டதே. ●

## ஒகோ! அப்படியா!



சனாதிபதி சந்திரிகா, ஊடகங்களுக்கு.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.மு.வை வெற்றிபெறச்செய்வதற்கு பலவெளிநாடுகள் நிதி உதவி.

### ஒகோ! அப்படியா!



ஊடகத்துறைஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கொழும்பில்நடைபெற்ற கருத்தரங்கொன்றில்.

பயங்கரவாதத்திற்கு எதிரானபோருக்கு அமெரிக்கா தலைமைதாங்கவேண்டும்.

### ஒகோ! அப்படியா!



அமைச்சர் ரவிக்கருணாயக்கா, சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு.

தேர்தல் பிரசார நடவடிக்கையை பொலிஸ் அதிகாரி குழப்புகிறார்.

### ஒகோ! அப்படியா!



யாதிகஹெலஉறுமயவின் தேசிய அமைப்பாளர்வணஹெலனாவ சிறிசுமங்கலதேரர். குருநாகலில்நடைபெற்ற கூட்டமொன்றில்.

இலங்கையில் பௌத்த இராட்சியம் அமைக்கவே பிக்குகளை நாடாளுமன்றம் அனுப்புகிறோம்.

### ஒகோ! அப்படியா!



முன்னாள் பிரதி அமைச்சர்அதாவுல்லா, ஏறாவூரில்நடைபெற்ற கூட்டத்தில்.

எந்தக்கட்சி ஆட்சியமைத்தாலும் புலிகளுடன் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தவேண்டும்.

### ஒகோ! அப்படியா!




அமைச்சர் இராஜிதசேனாரட்ண, ஊடகவியலாளர் மத்தியில்.

ஜே.வி.பி. ஆயுதங்களை வைத்துள்ளது.

# நறுக்கென...

## ஏறிக்களைத்த குதிரையிலிருந்து இறங்க மறுக்கும் அமெரிக்கா



எல்லாரும் ஏறிக்களைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறி......

மிகுதிப் பழமொழியை நீங்களே முடித்துப்பாருங்கள்.

முடியாவிட்டால் 'சறுக்கிவிழுந்தாராம்' என்று இணைத்துப்பாருங்கள்.....

எதற்காக இந்த எடுப்பு என யோசிக்கிறீர்களா?

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் முன்னாள் பிரதித் தூதுவரும் இலங்கைக்கான முன்னாள் தூதுவருமான பீற்றர் போலிக் கூறிய ஒரு கருத்தினைப் படித்தபோது இந்தப் பழமொழி நினைவுக்கு வரவே செய்தது.

விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்திப் பலவீனப்படுத்தும் முயற்சிக்கு அமெரிக்கா சர்வதேச ரீதியில் தலைமைதாங்கும் என்று அதற்கான செயற்பாடுகளை அது முனைப்புடன் ஆரம்பித்துள்ளது என்றும் அந்த அமெரிக்க சீமான் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

அதுமட்டுமல்லாது தென்னாசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்தவும் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் வெற்றிகாணவும் புலிகளைத் தனிமைப்படுத்தி ஓரங்கட்ட வேண்டியது அவசியம் என்றும் அருள்வாக்குக் கூறியுள்ளார்.

பேரினவாதத்தில்தான் 'கருணா'வின் துரோகத்தின் பின்னணியில் அமெரிக்காவின் 'கை' உள்ளதாக விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான கரிகாலன் கூட்டமொன்றில் கூறியபோது உடனடியாகத் துடித்துப் பதைத்து அதனை மறுத்த அமெரிக்க அதிகாரவர்க்கம், கருணாவை யாரென்றே தமக்குத் தெரியாதெனக் கரடிவிட்டது நினைவிருக்கலாம்.

உண்மையில் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்த, தனிமைப்படுத்த முடியுமானால் முற்றாகவே அழிக்க, சிறிலங்கா அரசுக்குப் பன்முகப்பட்டவகையில், அரசியல் ராஜதந்திர ரீதியிலும் இராணுவ மூலோபாய ரீதியிலும் உதவிய அயலக, சர்வதேச வல்லாதிக்க சக்திகளைத் தமிழினம் நன்றாகவே, கடந்தகால சம்பவங்களின் அடிப்படையில் புரிந்துகொண்டேயுள்ளது.

தமிழின அழிப்பினை மேற்கொள்ள, சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்திற்கு ஆதரவாக, அதன் முப்படைகளுக்கும் அமெரிக்கா வழங்கிய கர்ண கடூரமான பயிற்சிகளை 'கிறீன் பாரட்ஸ்' (அமெரிக்காவின் புகழ்பெற்ற இராணுவ நடவடிக்கைப் பயிற்சி அணியினர்) பயிற்சியாளர்கள் மட்டுமல்லாது தமிழ் மக்களும் நன்கு அறிவர்.

இதனை அமெரிக்கா தனக்குச் செய்த துரோகமாகவே தமிழ் மக்கள் தம் நெஞ்சில் பதிவுசெய்துகொண்டுள்ளனர்.


விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பட்டியலிட்டுவிட்டு அரச பயங்கரவாதத்தை சனநாயகவாதிகளின் பண்பாகக் கௌரவிக்கும் அமெரிக்க அணுகுமுறையின் அசிங்கம் உலகமறியாத ஒன்றல்ல.

ஆனால், விடுதலைப்புலிகள் என்பது ஒரு அமைப்பல்ல என்பதையும் அது ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்தை உள்ளடக்கிய ஒரு தேசியக் கட்டமைப்பு என்பதையும் அமெரிக்க அதிகார வர்க்கம் விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்த நினைப்பதை அதன் சர்வதேசப் பொலிஸ்காரத்தனமாகவே கருத வைக்கிறது.

அமெரிக்க முன்னாள் தூதரின் இந்தக் கருத்துக்கள் கரிகாலன் கூறிய வார்த்தைகள் குறித்து மிகவும் ஆழமாகவே யோசிக்க வைக்கிறது.....

உங்களை நீங்களே இனம்காட்டிக்கொள்கிறீர்கள் மிஸ்டர் பீற்றர் போலிக்.

## சந்திரிகா எள் என்பதற்குள் எண்ணெயுடன் வரும் சந்தகிரி



போர்த் தயாரிப்பு நிலைகுறித்து ஆராய சிறிலங்கா கடற்படைத் தளபதி தயாசந்தகிரி வடபகுதி கடற்படைத் தளங்களுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு மதிப்பீடு செய்துள்ளாராம்....

சிறிலங்காவில் சமாதான முயற்சிகளை ஆரம்பம் முதலே குழப்பிவருவதில் மூர்க்கத்தனமாக முனைந்து செயற்படுவர். சனாதிபதியின் அபரிமிதமான ஆசீர்வாதத்திற்கும், நம்பிக்கைக்கும் உரியவரான சந்தகிரிதான்...

சனாதிபதி 'எள்' ஏன்றால் சந்தகிரி 'எண்ணெ'யாகிச் செயற்படும் ஒருவர்.

தேர்தல் நடைபெறவுள்ள இந்தச் சூழ்நிலையில்-தேர்தலுக்கு பின்னால் ஏற்படக்கூடியதான ஆபத்தான சூழல் ஒன்றிற்கான சமிக்ஞையாக சந்தகிரியின் இந்த விஜயத்தைக் கருதலாமா?

வடபகுதியில் இருநாள் தரித்து நின்று சகலகடற்படைத் தளங்களுக்கும் சென்று மதிப்பீடு செய்யவேண்டிய திடீர் அவசியம் ஏற்பட்டுள்ளதன் காரணம்தான் என்ன?

முப்படைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சனாதிபதியின் உத்தரவின் பிரகாரம் இதனை மேற்கொண்டாரா? அல்லது சுயேச்சையாக இதனை மேற்கொண்டாரா?

இதனை ஒரு வழமையான நடவடிக்கையாக அவர் காட்டி விளக்கமளிக்க முனையலாம்.

எதுவானாலும்-போருக்கான தயார்நிலையில் கடற்படையினர் இருக்கிறார்களா என்பதை மதிப்பீடு செய்வதே அவரது விஜயத்தின் முக்கிய நோக்கம் என ஊடகங்கள் தெரிவிப்பதை நிராகரித்துவிட முடியாது.

அவர் தன்னுடன் இந்த விஜயத்தின் போது ஏனைய உயர்மட்டத் தளபதிகளையும் அழைத்துவந்து ஆய்வினை மேற்கொண்டமையானது வழமைக்கு மாறான அம்சமாகும்.

தேர்தலில் தனது கட்சி தோல்வியுற்றால் சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்படு மென்றும் யுத்த சூழ்நிலை மீண்டும் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடுமென்றும் ரணில் விக்கிரமசிங்க பிரசாரம் செய்துவருவதை இங்கே கவனத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும்.

கடந்த இரண்டாண்டு காலச் சமாதானச் சூழலில் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறி, அந்த உடன்பாடு முறிவு காணக்கூடிய தன்மைகொண்ட 'போர்' முனைப்புக்கொண்ட நடவடிக்கைகளை, பொய்யான காரணங்களைக் கூறி மேற்கொண்ட கடற்படையினரின் செயற்பாடுகள் எவையுமே சமாதானத்தை நிராகரிப்பவையேயாகும்.

சந்தகிரியின் இந்தத் தளபதிகள் புடைசூழமேற்கொள்ளப்பட்ட விஜயம் மிக இரகசியமாக மேற்கொள்ளப்பட்டமையானது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது.


எந்தவகையிலும் சந்தகிரி என்பவர் கடற்படையை நவீனப்படுத்தி அதன் போரிடும் வலுவை அதிகரிப்பதன் மூலம் கடற்புலிகளை-அவர்களின் தாயக கடற்பகுதி மீதான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அழிக்கவேண்டுமென்ற வெறிகொண்ட ஒருவர்தான் என்பதில் முரண்பட்ட கருத்தே கிடையாது.

அத்துடன் சனாதிபதியின் ஆணையைச் சிரமேற்கொண்டு செயற்படுத்துவதிலும் பேரார்வம் கொண்டவர்.

இல்லையேல் அவருக்கு மூன்றாண்டு சேவை நீடிப்பை முன்னர் ஒரேயடியாகச் சந்திரிகா வழங்கியிருப்பாரா?

சந்திரிகாவின் சமாதானத்திற்கான போரை மீண்டும் தொடர, சந்தகிரி தயாராகிறாரா? தேர்தல் முடிந்தபின் தெரியும்.

## ஆவிகளைத் தேடும் சங்கரியார்



தேர்தல் வந்தால் வேட்பாளர்களுக்குப் பழைய உறவுகளின் ஞாபகம் பொத்துக்கொண்டு வரும் என்பது உண்மைதான் அதுவும் மலரும் நினைவுகளுடன்-பொங்கும் பாசத்துடன் வரும் ஞாபகங்கள் அவர்களை வீடு தேடிப் போகச் செய்யும் அக்கறையோடு சுகசேமங்களை விசாரிக்கச் செய்யும். உதவிகள் செய்ய வேண்டுமா என்று அக்கறையுடன் கேட்கச் செய்யும். அரவணைத்து முத்தமிட்டுவேண்டுமானால் கையெடுத்துக் கும்பிட்டோ, ஆரும் சுற்றிவர இல்லாவிட்டால் காலில் விழுந்து வணங்கி, மெய்விதிர்த்துப் புல்லரித்து நின்று வாக்குக்காக யாசிக்கச் செய்யும்.

இதுவும் சிறிலங்காவின் சனநாயகத்தில் ஒரு வழமையான அம்சம்தான்.....

ஆனால், சங்கரியாரின் அணுகுமுறையோ வன்னிப் பகுதியில், அதுவும் தன்னால் உருவாக்கப்பட்டதாக தம்பட்டமடிக்கும் கிளிநொச்சிப் பகுதியில் உள்ள பழம் பெரும் மனிதர்கள் சிலருக்கு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது....

அவர் மலரும் நினைவுகள் உந்த, கடந்த இரு தசாப்தத்திற்கும் முந்திய தொடர்புகள் சிலவற்றைப் புதுப்பித்துக்கொள்ளுமாப் போன்று தனிப்பட்ட கடிதங்களை எழுதியுள்ளாராம்.

சுகசேம விசாரிப்புகளுடன், அவர்கள் நினைவுடன் வாழ்வதான, தொனிப்பட எழுதப்பட்ட கடிதத்துடன் அன்பளிப்புகளும் (விளக்கமாகச் சொல்வதானால் லஞ்சமும்) அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஆயிரம் ரூபாய் முதல் ஆளின் தன்மைக்கும் தகைமைக்கும் ஏற்ற இந்தப் பணம் 5000 வரை அனுப்பப்பட்டுள்ளதாம்.

இதனை அன்பளிப்போ-லஞ்சமோ என்று எவரும் கருதாமல் இருக்க, வன்னியிலிருந்து வாக்களிக்கச் சென்றுவருவதற்கான செலவுக்காக.... என்று இந்தப் பணத்தை அவர் குறிப்பிட்டுள்ளாராம்....

ஆ...! என்ன பொறுப்பு.... என்ன அக்கறை.... எல்லாவற்றையும் இந்தத் தள்ளாத (பதவியைக்கூட) வயதிலும் என்ன ஞாபகம்....

சங்கரியார் சாமானிய ஆளல்லதான்...!

இன்னொரு முக்கியமான விடயம்

சில காலஞ்சென்ற நபர்களுக்கும் கூடக் கடிதமும் பணமும் வந்துள்ளதாம்....

ஆவிகளிடம் வாக்குக் கேட்க முயற்சிக்கிறாரா? அல்லது இல்லாதோரின் வாக்குக்களையும் தனக்கு அளிக்குமாறு கேட்கிறாரா?

யாரோ அவருக்குத் தேர்தலுக்கென அள்ளிக்கொடுத்திருக்க வேண்டும். இவர் அதில் கிள்ளிக்கொடுக்கிறார் அவ்வளவுதான்.

இன்னொரு முக்கிய விடயம், தான் அனுப்பியுள்ள கடிதத்தில், எக்காரணம் கொண்டும் தாயக விடுதலைக்கு விரோதமாகவோ, முரண்பாடாகவோ தானோ தனது குழுவைச் சேர்ந்தவர்களோ நடக்கப்போவதில்லை என்று சத்தியப்பிரமாணமும் செய்துள்ளாராம்!

ஐயா சங்கரியாரே இந்தத் தேர்தலைத் தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டுமென விடுதலைப்புலிகளே கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அதற்கு மாறாக, எதிராக, ஒருமைப்பாட்டைக் குலைக்கும் வகையில் யார்யாரோ கொடுத்த அழுத்தத்திற்கும் அறிவுறுத்தலுக்கும் அடிபணிந்து சுயேட்சைக்குழு அமைத்துத் தேர்தலில் போட்டியிட முனைந்தது தாயக விடுதலைக்கு முரணான நடவடிக்கையில்லாமல் வேறென்னவாம்?

இறந்தவர்களுக்குக் கடிதம் எழுதும் சங்கரியாருக்கு இதெல்லாம் எங்கே புரியப்போகிறது....?

## புத்தம் சரணம் கச்சாமி தேர்தல் சரணம் கச்சாமி



தேர்தல் காலத்தில் நகைச்சுவையாகவும் கோமாளித்தன மாகவும் பேசி 'ஜோக்கடிக்கும்' கட்சிகளும் வேட்பாளர்களும் அதிகமாக உலாவருவது வழக்கம்.

இந்த முறை இந்த கோமாளிகள் ஜாதிக ஹெலஉறுமய என்ற: 'பிக்குகளின்' கட்சியில் மிக அதிகமாகவே காணப்படுகின்றனர் என்றால் அது மிகையில்லை.

முதலில் திடீரென ஒரு நாள் இரவிரவாக ஒரு குழுவினர் (பிக்குகள்தான்...) யாழ்குடாநாட்டுள் குதித்து தேர்தலில்போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்தபோதே புத்தபகவானைத்தவிர எல்லோரும் வியப்போடு பார்த்துச்சிரித்துக்கொண்டார்கள்.

அரச பீடத்தில் இருந்து இறங்கி மதபீடத்தில் அமர்ந்து ஞானோபதேசம் செய்த புத்தபகவானின் சீடர்கள் மதபீடத்திலிருந்து இறங்கி அரசபீடத்தில் ஏறி அமர நினைத்தது சிறிலங்காவுக்கு ஏற்பட்டுள்ள ஒரு பாரிய கலாசாரச் சரிவு என்று சிங்கள ஊடகவியலாளர் கூறியதை நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

கோமாளிகள் எங்குதான் இல்லை...?

பௌத்தபீடங்களும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை ஜாதிகஹெலஉறுமயவினர் நிரூபித்துள்ளனர்.

சில நாட்களின் முன்னர்தான் ஜாதிகஹெலஉறுமயக்காரர்களில் ஒருவரான தேரோஒருவர் சிறிலங்காவில் பௌத்தசிங்கள ஆட்சியை அதாவது ஒரு அரசை நிறுவுவதற்காகவே தாங்கள் தேர்தலில் போட்டியிடுவதாகக்கூறி ஏற்கெனவே சிறிலங்கா பௌத்த சிங்கள சோசலிசம்குடியரசை நிறுவியதாக தம்பட்டமடித்து வரும் பண்டாரநாயக்கா சேனநாயக்கா மற்றும் ஜெயவர்த்தனா பரம்பரையினரை தூக்கித்தூரவீசினார்.

அவர்களின் பௌத்த சிங்கள பேரினவாதமே சிறிலங்காவை இந்த அவலநிலைக்குள் தள்ளிவிட்டதென்றால் இனி இவர்கள் கூறும் பௌத்த சிங்கள ஆட்சி வந்தால்...

சிறிலங்காவின் எதிர்காலம் என்னவாகும் என்ற அச்சம் எழுவது வியப்பில்லைத்தான்.

பிக்குமார் மட்டுமல்ல ஒட்டுமொத்த சிறிலங்காவே திருவோடு தூக்கி தெருவோடு போகவேண்டியதுதான்.

என்னடா? இந்த சிறிலங்காவுக்கு வந்தசோதனை?

அது கிடக்கட்டும்.

ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான வண(?) உடுவேதம்மலோகதேரோ என்பவர் அடித்த'ஜோக்'கை கேழுங்கோ...

'நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின்பின் அமையவுள்ள அரசு எதுவென நாம் தான் தீர்மானிக்கப்போகிறோம்.' - இதுவே அவரது 'ஜோக்'

எல்லோரும் ஒருதடவை நல்லாக் கைதட்டிச் சிரியுங்கோவன்...!'

தங்களின் வெற்றிபெறும் (!?) உறுப்பினர்கள் சிறிலங்காவை பௌத்த ராச்சியமாக மாற்றஉதவும் அரசுக்கு ஆதரவை வழங்குவார்களாம்!

அது சரி, ஹெலஉறுமயக்காரரே உங்களின் அரசியல் நீரோட்டத்தில் கலக்கும் தீர்மானத்தை அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதிகள் கடுமையாக கண்டித்து விமர்சித்திருக்கிறார்களே! இதற்குநீங்கள் ஆட்சிக்கு வந்தும் என்ன செய்யப்போகிறீர்கள்?

அது கிடக்கட்டும் உங்களின் கம்பஹா மாவட்ட வேட்பாளரான பிக்கு ஒருவருக்கு கடுமையா'சாத்து' நடந்ததாக ஒரு செய்திவந்துள்ளதே...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அந்த அரசியல்வாதப்பிக்குவுக்கு எமது அனுதாபங்கள்...

புத்தம் சரணம் என்று சொல்லவேண்டியவர்கள் தேர்தல் சரணம் என்று கோஷமெழுப்பினால்... வாக்கு விழுந்துதோ இல்லையோ அடிவிழும் என்பது தெரிகிறதல்லவா!?

செங்குட்டுவன்

# கைகளில் ஏந்தும் தராசு

**சிறி. இந்திரகுமார்**

இது ஒரு தேர்தல் காலம் என்பதால் இலங்கையின் அரசியல் சந்தையில் பிரபல்யம்மிக்க தலைவர்களில் சிலர் கடந்தகால சில நினைவுகளை மறந்து போய் உண்மைகளைக் கொட்டிவிடுவதுண்டு.

இவ்வாறு அவர்கள் கொட்டும் உண்மைகள் நிகழும் நடைமுறையில் மாற்றங்களைக்கொண்டு வருபவையல்ல. ஆனால், அந்த உண்மைகளை எம்மைப் போன்ற விடுதலைக்கான பேச்சு அரங்கில் நிற்கும் இனங்கள் அவற்றை நினைவுபடுத்தவேண்டிய தேவைகள் உண்டு.

ஏனென்றால், அந்த இனத்தின் ஆத்மார்த்தமான விடுதலையின் மீதான, சமாதானத்தின் மீதான, பற்றுறுதிகளைப் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

இவ்வாறு இந்தப் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரங்களின் போது சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பின்வருமாறு ஒரு பிரச்சா ரத்தை மேற்கொண்டுள்ளார்.

அதாவது நாட்டில் நிலவும் சமாதானத்தினையும், யுத்தநிறுத்தத்தையும் ஏற்படுத்தியவர்கள் புலிகளே. அவர்களே முதலில் இதனை ஏற்படுத்தினார்கள். இதனை ரணில்தான் ஏற்படுத்தியதாக ஒருபோதும் கூறமுடியாது என்றவாறான தனது தேர்தல் பிரச்சாரத்தினை மேற்கொண்டுள்ளார்.

இது ரணிலுக்கெதிரான சந்திரிகாவின் ஒரு பிரச்சாரமாக மட்டும் உள்ளடக்கிவிடமுடியாது. ஏனென்றால் புலிகள் இயக்கம் யுத்தத்தின் மீது மட்டுமே நம்பிக்கைகொண்ட ஒரு இயக்கம் என்றும் அந்த இயக்கம் இப்போதும் பேச்சுக்களில் நம்பிக்கை கொண்டதொரு இயக்கம் இல்லை என்ற கருத்தும் புலிகள் இயக்கம் நோர்வேயின் மத்தியஸ்த்தத்துடன் ஆறு சுற்றுப் பேச்சுக்களில் கலந்துகொண்ட பின்னும் இறுதியில் தமிழர் தாயகத்திற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான ஒரு திட்டவரைபினைச் சமர்ப்பித்த பின்னும் மேற்கூறிய கருத்தை வலுப்படுத்துவதில் சிறிலங்காவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டன.

ஆனால், உண்மையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழர் தாயகத்திற்கான ஒரு பொருத்தமான அல்லது உருப்படியான தீர்வுகள் எதனையும் சிங்களக் கட்சிகள் முன்வைக்கத்தயாரில்லாத நிலையிலேயே தனது பேச்சுக்களை முறித்துக்கொள்ளும் நிலைக்குச் சிங்கள அரசுகளால் தள்ளப்பட்டது.

மற்றும்படி புலிகள் இயக்கம் சமாதானத்திற்கும், அமைதிக்குமான தன்னுடைய பேச்சு முயற்சிகளின்போதெல்லாம் அதிகமான நல்லெண்ண முயற்சிகளையும், விருப்புக்களையும் செய்தே வந்துள்ளது.

இதனடிப்படையிலான புலிகள் இயக்கத்தின் ஒரு முயற்சியின் உண்மையான பங்கை சனாதிபதி சந்திரிகா தன் திருவாயால் மலர்ந்துள்ளார்.

இதனடிப்படையில் நாம் தற்போதைய கட்சிகளின் கூட்டு மற்றும், அவற்றின் எதிர்கால அரசியல் திட்டங்கள், மற்றும் தமிழ் மக்கள் என்றுமில்லாதவாறு ஒருகுடையின் கீழ் தமிழ் தேசியத்தின் ஒற்றுமைக்காகத் தமிழ் மக்களிற்கான அரசியல் பலத்தின் ஆதாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்தப்பதின் மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் நிற்பதனையும் வைத்து, எதிர்கால நகர்வினைக் கணிப்பீடு செய்வது மிக அவசியம்.


இலங்கையில் நடந்தேறிய எல்லாத் தேர்தல்களின் முதலீடுகளிலும் சமாதானத்தின் பங்கு குறித்த அளவு அதிகமாகவே இருந்து வந்துள்ளது.

இதில் ஒன்று ஆட்சியின் அதிகார மையத்திலிருந்துகொண்டு போரிட்டுக் களைத்த நிலையிலிருக்கும் ஒரு கட்சிக்கு எதிராக எதிரணி சமாதானத்தின் பங்கை மக்கள் அரங்கில் நுட்பமாக நுழைக்கும் இதுவே எல்லாத் தேர்தல்களிலும் வழமை. சமாதானத்தின் பங்கு என்பது கட்சியின் வெற்றிக்கான ஒரு முதலீடு மட்டுமே.

இதன்மூலம் பெறப்படும் ஆதரவின் மூலம் கட்சி சார்ந்த அரசியல் ஸ்திரத்தன்மைக்காக அந்த அரசியல் தலைமைகள் போராடும்.

இதன் விளைவாக மக்கள் முன் சொல்லாடல்களாலும்,' பொருளாடல்களாலும் மக்களை ஒரு மயக்கத்திற்குள் தள்ளி நாட்டில் ஒரு போருக்கான வாசலை திறந்து விடுவதுண்டு.

இதற்கு பிரதான காரணம் நாட்டினதும், மக்களினதும் எதிர்காலம் என்பதை விட இனங்களுக்கான முதன்மை என்ற கோதாவில் ஏற்படுத்தப்படும் இனவாதற்திற்கான அதிக முக்கியத்துவம்.



பொதுவாக மேற்குலகில் ஆட்சிகளுக்காக களத்தில் இறங்கும் கட்சிகளைப் போன்று தெளிவான கொள்கைகளை இந்த கட்சிகளால் வரையறுக்க முடிவதில்லை. அப்படி அவை வரையறுத்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதிக அக்கறைகளை காட்டுவதில்லை. அல்லது மேற்குலகின் சக்திவாய்ந்த நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களால் நாட்டின் நன்மைகருதி வகுக்கப்படும் கொள்கைகளைப்போன்று இந்த நாடுகளில் தெளிவான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இதற்குப் பதிலாக இவை அரசியல் போட்டிச் சந்தையில் விரைவாகவும், இலகுவாகவும் ஆட்சியினை கைப்பற்றக் கூடியவகையில் இனங்களை சிறுபான்மை இனங்கள் எனவும் பெரும்பான்மை இனம் எனவும் வரையறுத்துக் கொள்ளும். இவர்கள் இனங்களுக்கிடையிலான பூசல்களை அதிக கொதிநிலையில் வைத்திருப்பது உண்டு.

இது பொதுவாக அதிகமான மூன்றாம் மண்டல நாடுகளில் நடைமுறையிலிருக்கும் மூன்றாம்தர அரசியல் முதலீடாக இருக்கிறது.

இதன் விளைவு இந்த நாடுகளுக்குள் இருக்கும் சிறுபான்மை இனங்களுக்குள்ளிருக்கும் பெரும்பான்மை இனங்கள் இதனை சகித்துக்கொள்வதில்லை.

அதாவது, இலங்கையைப் பொறுத்தவரை சிங்களவர்களுக்கு அடுத்தபடியாக இருக்கும் தமிழினம் போன்ற இனங்கள் சகித்துக்கொள்வதில்லை.

காரணம் பூர்வீக அடிப்படையில் பெரும்பான்மையாக இருக்க வேண்டிய ஒரு இனத்தை திட்டமிட்ட இன அழிப்பின் ஊடாக சிறுபான்மை இனமாக்கப்பட்ட துயரத்தை புரிந்துகொண்ட இனம் என்பதலாகும்.

இதனை புரிந்துகொள்வதாயின் தமிழர்கள் சிங்களவர்களாக்கப்பட்டதும், ஆதி தமிழ்க் குடிகளை குழு ரீதியாக திட்டமிட்டு அழிக்கப்பட்டதும் என நீளும் தமிழின அழிப்பினூடாக நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.



இதனை மறுதலிக்கப்படுமாயின் இலங்கையில் விஜயனின் வருகைக்கு முதலே பூர்வீகக் குடிகளாக இருந்த தமிழர்கள் எவ்வாறு சிறுபான்மை இனமாக்கப்பட்டார்கள் என்ற கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கப்படவேண்டியிருக்கும்.

இப்போது எமது தேடல் இதுவல்ல. தமிழ்மக்களைப் பொறுத்தவரை சந்திக்கப்போகும் காலங்களை எதிர்கொள்ளும் வகையில் நிலைமைகளை மதிப்பீடு செய்வதே.

இவ்வாறாயின் தேர்தல் முடிவின் பின் கொழும்பு மைய அரசியலை எந்தக் கட்சி அலங்கரித்தாலும் யதார்த்தத்தில் புலிகளோடு பேசியே ஆக வேண்டும் என்ற சமகால நிலைமைக் காணப்படுகிறது. ஆனால் இதற்கு மாறாக புலிகள் மீதான ஒரு போரையோ அல்லது பேச்சு மேலாண் மையையோ எந்தக் கட்சிகளாவது திணிக்கமுற்படுமா என்பதை நாம் அலட்சியம் செய்துவிடமுடியாது.

ஏனென்றால், இத்தகையதொரு நிலை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாக இருக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரு ஐயத்தை நாம் கொள்வதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

பொதுவாகவே சிறிலங்கா அரசு முதல் இந்திய அரசுவரை புலிகள் தொடர்பான தமது மதிப்பீடுகளில் பலமுறை தவறான மதிப்பீடுகளை மேற்கொண்டு அதன் விளைவாக மேற்கொண்ட நகர்வுகள் யாவற்றின் முடிவுகள் போராக மாறி அவற்றில் பலமுறை தோல்வியையும் தழுவியுள்ளன.

இத்தகையதொரு தவறான மதிப்பீட்டினை மீளவும் தேர்தலில் வெற்றி பெறும் சிறிலங்கா அரசு மேற்கொள்ளாது எனக்கூறமுடியாது.

ஏனெனில், அண்மைய அவதானிப்புக்களின்படி சந்திரிகா கிழக்கில் கருணாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நெருக்கடியை தமக்குச்சார்பான போக்கிலும், புலிகள் இயக்கம் எதிர்கொள்ளும் இராணுவ ரீதியிலான பலவீனம் என்ற வகையிலும் நோக்குவதாகவே தகவல்கள் வெளிவருகின்றன.

இதனை உறுதி செய்யுமாற் போன்றே கருணாவோடு சிறிலங்கா இராணுவத்தளபதி லயனல் பலகல்ல தலைமையிலான இராணுவத்தரப்பும் சந்திரிகாவின் விசேட பிரதிநிதிகளும் தொடர்புகளை ஏற்படுத்துவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதன் ஒருபடியாக சிறிலங்கா கடற்படையின் தளபதி சந்தகிரி தனது ஏனைய தளபதிகளுடன் கடற்படைத் தளங்களுக்கான ஒரு விஜயத்தை மேற்கொண்டு போருக்கான தயார்நிலை தொடர்பான ஒரு மதிப்பீட்டினை மேற்கொண்டு சென்றுள்ளார்.

இத்தகையதொரு நிலையில் சிறிலங்கா அரசு ஒரு எதிர்மாறான முடிவை எட்டுமாக இருந்தால் அவர்கள் இதன் அடிப்படையில் தோல்வியைச் சந்திப்பார்களாக இருந்தாலும் அதற்கு முதல் தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக எட்டிவிடவேண்டிய ஒரு இலக்கு உண்டு என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனென்றால், இந்தமுறை தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான ஒரு கூட்டும், சுதந்திர ஐக்கிய முன்னணி கூட்டும் பிரதானமாக போட்டியிட்டாலும் இவற்றிற்கு நிகரான தீர்மானகர பலத்தைக்கொண்ட ஒரு கூட்டாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் உண்டு என்பதை மனதில் நிறுத்த வேண்டும்.

இந்தக் கூட்டு இந்த இரண்டு பிரதான கட்சிகளின்கூட்டினை குலைக்கவும் அதேநேரத்தில் ஒரு முடிவை எட்டக் கூடிய ஒரு வலு நிலையைப் பெறக்கூடிய ஏதுநிலை உண்டு.

இத்தகையதொரு நிலை ஏற்படுத்தப்படுமாயின் சில வேளைகளில் சந்திரிகா தலைமையில் புலிகள் மீது ஒரு பலவீனமான முடிவினை எட்டும்போது தமிழ்மக்களின் கரங்களில் ஒரு அரசியல் வெற்றி இருக்கும் அதேசமநேரத்தில் புலிகள் இயக்கம் அதிகவலுவுடன் கூடிய அரசியல் மற்றும் இராஜதந்திர வெற்றியை தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கமுடியும்.

இதற்கு தமிழ் மக்கள் இந்த தேர்தலில் அதிகப்படியான வீச்சுக் கொண்ட ஒரு வெற்றியை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும்.

இந்த வெற்றியின் மூலம் தமிழர் தாயகமும் தமிழ்மக்களும் எதிர்கொள்ளும் எல்லா நெருக்குவாரங்களையும் இலகுவில் வெற்றிகொள்ளமுடியும்.

ஆகவே தமிழ் மக்கள் இந்த தேர்தலை தமிழ்மக்களுக்கான ஒரு முதுசத்திற்கு இடப்படும் ஒரு முதலீடு என்பதை மனதில் நிறுத்தி தேர்தலில் வாக்களிக்கவேண்டும்.

# பயங்கரவாதமும்-கதிர்காமரும்

"பயங்கரவாதத்தை ஒழிப்பதில் அமெரிக்காவுக்கு ஆதரவாக அனைவரும் செயற்படவேண்டும்" எனக் கூறியிருக்கிறார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சிரேஷ்ட ஆலோசகரும் அவரால் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர்.



தென்னாசியாவில் அமெரிக்காவின் பங்குபணிபற்றி குறிப்பிடும் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தை ஒழிக்கவென நடவடிக்கை எடுத்துள்ள அமெரிக்கா குறித்தோ அல்லது ஈராக்கில் கடந்த ஒரு வருடம் இடம் பெற்ற யுத்தம் அதன் சாதக பாதகம் குறித்தோ இங்கு குறிப்பிடவரவில்லை.

ஆனால் லக்ஸ்மன் கதிர்காமர் என்ன அர்த்தத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என்பது குறித்து தமிழீழ மக்களுக்கு நன்கு தெரியும். கதிர்காமரைப் பொறுத்து அவர் குறிப்பிடும் "பயங்கரவாதம்" தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் ஆகும்.

எவரென்றே அறியப்படாதிருந்த கதிர்காமர் சிறிலங்காவுக்கு வந்து இப்பகுதியின் முதற் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளைப் பெறவும், சிங்கள இனவாதிகளால் "தேசப்பற்றாளர்" எனப்புகழப்படவும் காரணமாக இருந்தது தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்க அவர் பூரணமாக ஒத்துழைப்புத்தருவார்/தருகிறார் என சனாதிபதி சந்திரிகாவும் இனவாதிகளும் நம்பியதனாலாகும்.

அதற்கேற்பவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாத நடவடிக்கையாகவும், விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகவும் சர்வதேச நாடுகளை ஏற்றுக்கொள்ளவைப்பதற்கே தனது பதவிக்காலத்தின் முழுப்பகுதியையும் பயன்படுத்தி வந்தார்.

இன்றும்கூட அவர்கள் ஆட்சியில் இல்லாதபோதும் கதிர்காமருக்கு முக்கியமான கட்டத்தில் முக்கியமானதொரு அமைச்சுப்பதவி கிடைத்திருப்பதற்கு அவரது விசுவாசமும் "திறமையுமே" காரணமாகும். தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளுகின்ற இச்சமயத்தில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க ஊடகத்துறையை இவரிடம் கையளித்திருப்பது வெக்கதுக்கமின்றி பிரச்சாரங்களை மேற்கொள்ளக் கூடிய திறமையும் தகுதியும் கதிர்காமரிடம் நிரம்பவே உண்டு என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நன்கு அறிந்து கொண்டமையினாலேயேயாகும்.

இப்பொழுது அரச ஊடகங்கள் தொடர்பாக பல்வேறு அமைப்புகள், தரப்புகளால் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் கதிர்காமர் குறித்த சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் கணிப்பீடு சரியானவையே என்பதை நிரூபித்திருக்கின்றன.

இப்பொழுது இலங்கையில் சமாதான முயற்சிகள் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்படவேண்டும் என மக்கள் விருப்பம்கொண்டிருக்கையில் இவ்வாறான ஒரு முயற்சியை யார் திறமையாக கையாழ்வார்கள்? என சனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் போட்டியொன்று நிலவுகையில் கதிர்காமரின் "பயங்கரவாத ஒழிப்பு" குறித்த குரல் சந்தர்ப்பம் தெரியாமல் ஒலித்துவிட்டது போலத் தெரிகிறது.

அல்லது சனாதிபதி - சந்திரிகாவின் சமாதானம் - யுத்தம் இரண்டையும் சமாந்தரமாகக்கொண்டு செல்லும் வழமையான தந்திரத்தின் குரலோ என்று கூடக்கேள்வி எழுகிறது. "கதிர்காமர் பிழைவிடமாட்டார்" என்ற அடிப்படையில் பார்த்தால் இரண்டாவது தான் சரிவரும் என்றே எண்ணத்தோன்றுகிறது.

ஆனால் கதிர்காமருக்கு மறதி சிலவேளைகளில் இருக்கலாம். அல்லது விசுவாசம் அவரது மூளையை மழுங்கடித்திருக்கலாம். ஏனெனில் சுமார் எட்டுவருடங்கள் அவர் வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் பறந்து பறந்து எடுத்த நடவடிக்கைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் காணாமல் போய் விட்டது.

முன்னர் கதிர்காமர் போய்த் திரிந்த நாடுகள் இப்பொழுது புலிகளை கிளிநொச்சியில் அடிக்கடி வந்து சந்திக்கின்றன. சில நாடுகள் சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடப் புலிகளை அங்கு அழைத்திருக்கின்றன.

புலிகளைத் தடைசெய்திருக்கும் ஒரு சில நாடுகள் தமது தடைக்கு வேறு சில காரணங்களைக் கூறுகின்றன.


இவற்றையெல்லாம் கடந்த இரண்டுவருடங்களுக்கு மேலாகச் சகித்துக்கொண்டிருந்தாலும் வேறும் சில குள்ளவேலைகளை அவர் செய்யாமலும் இல்லை. முக்கியமாக அவர் இந்தியாவுக்கு விடுத்த எச்சரிக்கையைக் குறிப்பிடலாம்.

இப்பொழுது மீண்டும் ஆட்சிபீடமேறி தனது பணியைவிட்ட இடத்திலிருந்து தொடரும் கனவுடன் இருக்கும் கதிர்காமர் இப்பொழுது அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையைத் தொடங்கிவிட்டார்போலவே தெரிகிறது. அவரும் அவரது எஜமானியும் இது சரியான சந்தர்ப்பம் என நினைக்கலாம். ஆனால் மக்கள் அவ்வாறு நினைப்பார்களா? என்பது கேள்விக்குரியதாகும்.

கடந்த 25வருடங்களுக்கும் மேலாக தென்னிலங்கையாட்சியாளர்கள் யுத்தம் நடத்தி வெல்ல முடியாது என முடிவுசெய்தே மக்கள் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறார்கள்.

மீண்டும் "பயங்கரவாதம்" என்பதும் "அமெரிக்கா" என்பதும் "ஒழிக்கவேண்டும்" என்பதும்... அவ்வளவு உசிதமாகப்படவில்லை.

**வேலவன்**




# தேர்தல் நடைமுறை எல்லோருக்கும் ஒன்றே

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருக்கும் மக்கள் வாக்களிப்பது தொடர்பாக ஒரு முடிவுக்கு வரப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக இந்த மக்கள் சுதந்திரமாகத் தமக்குரிய அடிப்படைகளில் ஒன்றான வாக்களிக்கும் உரிமைக்குப் பங்கம் ஏற்படாவண்ணம் அதற்குரிய வசதிகளை செய்துகொடுக்கவேண்டிய பொறுப்புத் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு.

அதிலும் ஓமந்தையில் அமைக்கவுள்ள கொத்தணி வாக்குச் சாவடிக்கும், முகமாலை கொத்தணி வாக்குச் சாவடிக்கும் சென்று வாக்களிக்கவுள்ள மக்கள் மிக நீண்ட தூரங்களிலிருந்து சென்று வாக்களிக்கவேண்டியவர்களாக உள்ளனர்.

அதிலும் ஓமந்தையில் அமைக்கப்படவுள்ள வாக்குச் சாவடிக்குச் செல்லவுள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தேர்தல் நடைபெறும் ஏப்ரல் இரண்டாம் திகதிக்கு முதல் நாளான ஏப்ரல் முதல் நாளே புளியங்குளத்துக்குச் சென்று அங்கு தங்கியிருந்து வாக்களிக்கும் அளவுக்கு இந்த மக்கள் நீண்ட தூரத்திலிருந்து சென்று வாக்களிக்க உள்ளனர்.

இவ்வாறு இந்த மக்கள் வாக்களிப்பதானது நாட்டின் எந்தப் பகுதியிலும் நடைபெற்றதன்று என்பதுடன் உலகில் வேறு எங்கும் இவ்வாறு நடைபெற்றிருக்குமா என்பது சந்தேகமே.

இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் அமைக்கப்படவுள்ள கொத்தணிச் சாவடிகளில் வாக்களிக்கவுள்ள மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் என்ற வகையில் ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அத்தாட்சி அதிகாரம் வேறுபட்ட நடைமுறைகளை அறிவித்துள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத் தேர்தல் அத்தாட்சி அதிகாரி பத்மநாதன் கொத்தணி வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க வரும் மக்கள் சோதனைக்குட்படுத்தப்படமாட்டார்கள் என்பதுடன் அடையாள அட்டை பரிசோதனைகள் எவையும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், இதற்கு மாறாக வவுனியா மாவட்டத் தேர்தல் அத்தாட்சி அதிகாரி கணேஸ் கொத்தணி வாக்குச் சாவடியில் வாக்களிக்க வரும் மக்கள் தேசிய அடையாள அட்டை அல்லது கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் அடையாள அட்டை கொண்டு வரப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் ஏனைய பகுதியிலுள்ள மக்களிலிருந்து வேறுபடும் வகையில் அமையும் ஒரு ஏற்பாடாகும்.

இங்கு வாக்களிக்கப்படும் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அவர்களுக்கு அண்மையில் வாக்குச் சாவடியை அமைக்கப்படாத நிலையை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நாட்டின் ஏனைய மக்களிலிருந்து வேறுபடும் வகையில் எந்த நடைமுறையையும் அவர்கள் மீது திணிக்கப்படக்கூடாது.

இந்த மக்கள் எந்த அற்ப காரணங்களினாலோ அல்லது அவர்களுக்கு ஏதாவது சில அசௌகரியங்களை ஏற்படுத்தி வாக்களிப்பதனைக் குழப்பக்கூடாது. இதனை இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் கவனத்தில் கொள்வது மிக அவசியம்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான ஒரு தேர்தலாக அல்லாமல் தமது கொள்கைக்காக வாக்களிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தேர்தலாகும்.

ஆகவே இந்த மக்கள் தமது அரசியல் உரிமைகளையும், அபிலாசைகளையும் எந்தவித நெருக்கடிகளும் இன்றிச் சுதந்திரமாக வாக்களிக்கும் ஏதுநிலையை ஏற்படுத்தவேண்டும்.

பலவருட கொடிய போரை முகம் கொடுத்து நின்று நிதானித்துத் தம்மையும் தமது அரசியல் வேட்கையையும் எந்தக் கெடுபிடிகளும் இன்றி வழங்க அனுமதிக்கப்படவேண்டும்.

உண்மையில் இலங்கையில் உண்மையான ஒரு அரசியல் தீர்வு எட்டப்படவேண்டுமானால் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிப்பதற்கான ஊக்குவிப்பை சிங்கள அரசுகளே ஏற்படுத்த வேண்டும்.

ஏனெனில் தமிழ்மக்களின் அபிலாசைகளை இதுவரை காலமும் பிரதிநிதித்துவப்படுத்திய, புலிகள் வலியுறுத்திய அரசியல் அபிலாசைகளை ஒரு அமைப்பு சார்ந்த அபிலாசைகள் என்ற வகையில் வரையறுத்தவர்களும் உண்டு.

இந்த நிலையில் புலிகளின் கொள்கைக் கோட்பாடுகளை ஏற்று, வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் முன்வைத்திருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் கோரிக்கைகளையும், ஆதரவையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இதனடிப்படையில் சிங்கள அரசுகள் ஒரு உருப்படியான திட்டத்திற்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

ஆனால், இதனைத் தென் பகுதி சமூகம் விரும்புமா என்றால் இல்லை என்பதாகவே இருக்கும்.

ஏனென்றால் இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு உருப்படியான தீர்வை எட்டுவதனையோ அல்லது தமிழ் மக்கள் தமது அரசியல் வேட்கையை வெளிப்படுத்துவதையோ இலங்கையில் அண்மைய ஐம்பது வருடத்திற்கு மேற்பட்ட அரசியல் வரலாற்றில் அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்தத் தேர்தலில் தமிழ் மக்களுக்கான அரசியல் வாய்ப்பைப் பயன்படுத்தச் சிங்களப் பேரினவாதிகள் விரும்பமாட்டார்கள்.

இந்தவகையில் கொத்தணி வாக்குச் சாவடியில் வாக்களிக்கவுள்ள மக்கள் மீதான நடைமுறைகள் நாட்டின் ஏனைய பிரசைகளோடு ஒத்தவையாக மட்டும் இருக்க வேண்டும்.

**நக்கீரர்**



# தமிழ்த்தேசியத்திற்குப் புத்துயிர் அளித்த தேசியத்தலைவர்

**இ.கபிலன்**

உலகில் கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தே ஆறு முதுமொழிகளுக்குள் தமிழ் மொழியும் ஒன்றாகும். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திருக்குறள் உலகிலே தன்னிகரற்ற மிக உன்னத அறநூலாகத் திகழ்கின்றது.

பிற்பட்ட காலப்பகுதியில் தமிழ்மொழி 17வது இடத்துக்குப் பின்தள்ளப்பட்ட நிலையில் இருப்பதனை மொழி ஆய்வாளர்களின் கருத்துக்கள் எடுத்துக்கூறுகின்றன. தாய்மொழி தமிழ்நாட்டில்கூட புத்துயிர் பெற்றெழ வேண்டியநிலையிலேயே இருந்துவருகின்றது.

சிங்கள மொழி 70வது இடத்தினை வகித்து வருகின்ற போதும் சிறிலங்கா என்கிற நாடு அம்மொழிக்கு உண்டு. அதனால் சிங்கள தேசியம் மேலோங்கி நிற்கின்றது.

ஆனால், தமிழினம் தன் தாய் மொழி, தாய்மண், கலை பண்பாடு, வரலாறு, இனத்துவம் போன்ற தேசிய அடையாளங்களை இழந்துபோகக்கூடிய ஓர் ஆபத்தான நிலையிலேயே அப்போது வாழ்ந்தது.

தமிழ்த் தேசிய இவ் வரலாற்று நெருக்கடியான அரசியல் சூழலில், அரசியற் போராட்டங்களை அரசியற் தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்தார்கள். இருந்தபோதிலும் தமிழ்த் தேசியத்தை பாதுகாப்பதில் அதிகம் வெற்றிபெறவில்லை. மாறாகத் தமிழர் என்கிற உணர்வைத் தமிழர்களுக்கு ஊட்டுவதில் வெற்றி பெற்றார்கள்.

தமிழ்த் தேசியத்தைப் பிளந்து அது பற்பல சிறு கூறுகளாகச் சிதறும்படி செய்ய வேண்டுமென்பதே சிங்கள அரசின் நோக்கமாக இருந்தது. அந்த மூல நோக்கத்தை எப்போதும் கைவிடவில்லை.

அதாவது சிங்களம் பேரெழுச்சி பெற்றதும் சிங்களமே அரசகருமமொழியாகியது. அதனால் தமிழ்மொழி ஓரங்கட்டப்பட்டு, ஒதுக்கப்பட்டது.

சிங்களக் குடியேற்றங்களைத் தமிழர் தாயக பூமியில் நிறுவித் தாய்மண் குடைந்தெடுக்கப்பட்டது.

தமிழரின் கலைபண்பாட்டின் சிறப்புப் பண்புகளைச் சீர்குலைக்கும் புதியகளத்தை உருவாக்கியது.

பழங்குடி மக்களாகிய தமிழினத்தை; வரலாற்றுச் சுவடிப்படி மூடிமறைக்கும், வரலாற்றைத் திரிபுபடுத்தும் ஆவணங்களைச் சிங்கள பௌத்த பீடமும், சிங்கள அரசும் தயாரித்தது.

சாதி, மதம், பிரதேசம் ஆகிய சில்லறை வேற்றுமைகளை உருவாக்கிப் பிரித்தாளும் தந்திரோபாயத்தினைக் கையாள்கின்றது சிங்கள தேசியம். இது தமிழரின் இனத்துவத் தனித்தன்மையை இழக்கவைக்கக் கூடிய பேராபத்தாகத் தோற்றமெடுத்தது.

இத்தகையதொரு ஆபத்தான,நெருக்கடியான வரலாற்றுக் காலகட்டத்தில்தான் பேரினவாத சக்திகளை எதிர்த்து நிற்கக் கூடியவாறு தமிழ்த்தேசிய பலத்தை புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்கிற முதற்பணி தமிழினத்திற்கு உருவாகியது.

அப்பணியைப் பொறுப்பேற்ற தமிழ்த்தேசியத் தலைவரான வே.பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார். உயிரற்ற இரும்புக்கு உயிரைக் கொடுக்கவல்ல மனோ தைரியம் அவரிடம் இருந்தது.

சாதி,மதம்,பால்,பிரதேசம் ஆகிய சில்லறை வேற்றுமைகளுக்கு அப்பால் பொது எதிரியை எதிர்த்து நிற்பதற்குத் தமிழ்த் தேசியத்தின் கீழ் ஒன்றிணைந்து போராடும் குறிக்கோளுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தினை அவர் கட்டியெழுப்பினார்.



தமிழ்த் தேசிய உணர்வுக் காலமாக அவரின் காலமாக இருந்து தமிழ்த் தேசிய உணர்வு இங்கு பேரெழுச்சி பெற்றது.

தேசியத் தலைவரின் உறுதியும், கொள்கைப் பிடிவாதமும், போர்க்குணமும் தான் வீரத்தனமான தளபதிகளையும், போராளிகளையும், தமிழ் சமுதாயத்தையும் உருவாக்கியுள்ளது. இன்று பலமான இனமாக உலகில் உயர்ந்து நிற்க வைத்ததும் அதுவே.

இந்திய இலங்கை ஒப்பந்தகாலத்தில் மூத்த தளபதிகளான புலேந்திஅம்மான், குமரப்பா பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் நடைபெற்ற உண்மை நிகழ்வை நினைவு கூருவது இங்கு பொருத்தமானதாகும்.

அதாவது இந்தியத் தூதுவர் ஜே.என். தீக்ஷித் தலைவருடன் கலந்துரையாடும் போது கொள்கை பிடிவாதத்திலிருந்து இறங்கி வரும்படியும், அப்படி இல்லாவிட்டால் இரு தளபதிகளை இழந்து பலவீனமான நிலைக்குத் தங்கள் இயக்கம் தள்ளப்படும் என்னும் கருத்தைத் தெரிவித்து, அச்சுறுத்தி இருந்தார். அதற்குத் தலைவர் பதிலளிக்கையில் ஒவ்வொரு போராளிகளையும் தளபதிகளாகவே வளர்த்தெடுக்கிறேன். அதனால் கொள்கைக்காக இருதளபதிகளை இழப்பதில் விடுதலைப்போராட்டம் பலவீனப்படாது என உறுதிபடக் கூறினார்.

தமிழீழ இலட்சியம் என்ற உயர்ந்த கொள்கைக்காக விடுதலைப் போரில் தளபதிகள், போராளிகள், மக்கள் கொட்டிய குருதியால் புனிதமாக்கப்பட்டுள்ள இந்த தாயகபூமி தியாக கிரீடத்தை அணிந்து கம்பீரமாக இருக்கின்றது.

இது ஒருபுறம் இருக்க, தாய்மண் மானமிழக்கத் துணிந்தவராகக் கருணா தமிழீழக் கொள்கைப் பிடிவாதத்திலிருந்து ஒதுங்கித் துரோகக்கிரீடத்தை அணிந்துள்ளார். இனி இந்தத் தாய்மண்ணில் கருணாவின் நிழல்படுவது கேவலம்.

கருணாவின் துரோகமானது தேசியத் தலைவருக்கு மட்டும் இழைக்கப்பட்டதாக எவரும் கருதிவிடமுடியாது.

கருணாவின் துரோகம் தமிழர்களது விடுதலைப்போருக்கு இழைக்கப்பட்டதாகும்.

கருணாவின் துரோகம் உலகில் வாழும் தமிழினத்திற்கு இழைக்கப்பட்டதாகும்.

கருணாவின் துரோகம் ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசியத்திற்கு இழைக்கப்பட்டதாகும். ஆதலால் தமிழ்த்தேசியம் துரோகத்தனத்தின் வடுக்களை அதிகம் சுமந்தே நிற்கிறது. கருணாவை ஊட்டி வளர்த்த தாயகம் தலைவிரிகோலமாக்கப்பட்டு மானமழியும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத் தூய்மையான இரத்தத்தில் பிரதேசவாதக் கிருமிகளைக் கருணா கலந்துள்ளார். அத்தகைய பிரதேசவாத வெறியர்களையும், துரோகிகளையும் அடியோடு ஒழித்துவிடவேண்டும்.

அது மக்களின் தூரநோக்கப் பார்வையிலும்,விழிப்புணர்விலும், ஒற்றுமையிலும் தங்கியுள்ளது. அதற்கு அப்பால் மக்கள் தற்காலிக நலனுக்காக தமிழ்த் தேசியத்தின் மீதான பிடிவாதத்தையும், பற்றுறுதியையும், சிறிதும் தளரவிட்டுவிடக்கூடாது.

தமிழ்த் தேசியம் நிர்மூலமாக்கப்படவேண்டுமென்பதில் தமிழ் விரோதசக்திகளுடன் சிங்கள தேசியமும், இந்தியத் தேசியமும் தீவிரமாகவே முயன்று வருகின்றது. சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அதற்கான முயற்சியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதே அவர்களது கொள்கையாக இருக்கின்றது.

இவ் அளப்பரிய கஸ்ர காலங்களில் எல்லாம் அழிந்துவிடாமல் தேசியத்தைப் பாதுகாப்பதற்காக எந்த சூழ்நிலையிலும், எந்தவொரு கட்டத்திலும் வளைந்துகொடுக்காத தைரியசாலியாகத் தேசியத் தலைவர் அர்ப்பணிப்புடன் தொண்டாற்றி வருகிறார்.

விடுதலைப்போராட்ட காலங்களில் இடையூறுகள் அதிகமாக இருப்பது உறுதியான வெற்றிக்கு அறிகுறி என்பதே அவரின் அனுபவங்களாகும். அவரின் காலத்தில்தான் தமிழினத்திற்கு புதிய நம்பிக்கை, புதிய உறுதி, புதிய ஒற்றுமை பீறிட்டெழுந்தன.

தமிழர்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்கள் தேசிய கௌரவ உணர்ச்சியின் பிடியில் தளம்பினரோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் அரசியல் அழிவிற்கான நிர்ப்பந்தங்களை அதிகமாகச் சிங்களம் தமிழர்கள் மீது சுமத்தவே செய்தது; செய்யும்.

ஆதலால் தமிழினத்தின் மொழி,மண்,கலைபண்பாடு, வரலாறு,இனத்துவம் போன்றவற்றைமுழுமையாக மீட்டெடுக்கும் விடுதலைப்போரில் தேசியத்தலைவரின் வழிகாட்டலில் இன ஒற்றுமையுடன் மகத்தான போராட்டத்தில் பங்காற்றுவோம்.

ஒரு இலட்சியத்தை அடைய ஒரே இயக்கம்தான் போராடவேண்டும். அந்த இலட்சியத்தை ஆதரிக்கும் சகலரும் அவ்வியக்கப் பணிகளுக்குப் பின்புலப் பலமாக இருக்க வேண்டும். சில்லறை வேற்றுமைகளை மறந்து பகைவர்களை ஏகோபித்து எதிர்க்கும் சக்தியான தேசியத்தலைவரின் கீழ் இன ஒற்றுமையுடன் செயலாற்றவேண்டும்.

தமிழீழதேசம் ஒரு நாளும் அடியோடு வீழ்ச்சியுறாது. அது எப்போதும் உயர்ந்த கம்பீரமான கோபுரமாகவே காட்சிதரும். தமிழீழ தேசத்தை மறப்பவர்கள் தான் வீழ்ச்சியடைவார்கள்.



# ஒரு
# விவசாயிகளுக்கு உதவ இப்போது எவரும் இல்லையா...

ஒரு கிலோகிராம் நெல்லினை ரூபா பதினைந்துக்கு கொள்வனவு செய்யும் புதியவிலை நிர்ணயத்தின்கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்க அதிபரின் ஏற்பாட்டின் கீழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 50,000மெற்றிக் தொன் நெல் முதலில் கொளவனவு செய்யப்படவுள்ளதாகக் கடந்த வாரம் தீமாணிக்கப்பட்டுள்ளது. இதற்கென 100 மில்லியன் ரூபாய்கள் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டபோதும் தற்போது 20 மில்லியன் ரூபாய்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடையே கையளிக்கப்பட்டதாக திருகோணமலை அரசாங்க அதிபர் காமினி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

பதினைந்து ரூபா ஒரு கிலோ நெல்லுக்குரிய அரச உத்தரவாத விலை எனும்போது அது ஒரு மூடைக்கு 1050 என மதிப்பிடப்படுகிறது. அவ்வாறான ஒரு விலை ஸ்திரமாக அமுல்படுத்தப்படும்போது அது எமது மக்களின் பெரும்பான்மையினருக்கு நம்பிக்கை தரும் விடிவெள்ளியாகவே அமையும். எமது மக்கள்குடித்தொகையின் எண்பது வீதத்தினர் நெல்லுற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளாக உள்ளனர். இப்போது இலாபம் தரும் ஒரு தொழிலாக நெல்லுற்பத்தி சிறிலங்காவில் இல்லாமல் போய்விட்டது. உற்பத்தி இடு பொருட்களுக்கும், இழுபொறிக்குமான மானியங்கள் ரத்துச்செய்யப்பட்டமையும் ஒரு முக்கியமான காரணமாகக் கூறப்படுகிறது. ஆயினும், திறந்த பொருளாதாரக் கட்டமைப் பின்கீழ், அரிசியின் விலை நிர்ணயமும் நெல்லின் விலை நிர்ணயமும் தனிப்பட்ட ஆலை உரிமையாளர்களிடமும் இறக்குமதியாளர்களிடமும் சிக்கிக்கொண்டதே இதன் பிரதான காரணமாகும். அரசின் நெற்சந்தைப்படுத்தற் சபை இப்போது செயலிழந்து போய்விட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கையில் வணிகமயமாக்கலின் விளைவே இது.

இப்போ நெல்லின் உற்பத்திச் செலவிலும் பார்க்க, அதன் சந்தை விலை குறைவாக இருக்கின்றமையே பிரதான பிரச்சினையாக இருக்கிறது. இந்த நிலைமையை பாதிக்கின்ற பல்வேறு காரணிகளுள் இது பிரதானமானது, உரம், மற்றும் விவசாய இரசாயனங்களின் விலை அதிகரிப்பே இதன் அடித்தளத்தில் உள்ளது. ஆரம்பத்தில் விளைச்சல் குறைவான நெல் இனங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட போதும் செயற்கை உரம், மற்றும் விவசாய இரசாயனங்களின் பயன் பாடு அறவே இல்லாதிருந்தது. இதன் மூலம் உற்பத்திச்செலவு விற்பனை விலையிலும் குறைவாக இருந்தது. எமக்குரிய சிறு நீர்ப்பாசன முறைகளும், புலவுச் செய்கை எனப்படும் அணைக்கட்டுகள் மூலம் நீரைத் தேக்கி விவசாயத்தில் ஈடுபடுத்தும் முறைகளும், வழக்கொழிந்து போக வைக்கப்பட்டன.

அறுபதுகளில் பிலிப்பைன்ஸ்சில் உருவாக்கப்பட்ட சர்வதேச நெல் ஆராட்சி நிறுவனம் (IRRI) அதிகவிளைச்சல் தரும் நெல்லினங்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தோடு மேற்குலகின் பல்தேசிய நிறுவனங்களின் உற்பத்திகளான, செயற்கை உரம், மற்றும் களைகொல்லி, பீடைநாசினி என்பவற்றையும் அந்த புதிய நெல்வர்க்கங்கள் ஊடே மூன்றாம் உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியது. ஆரம்பத்தில் அரசுகளின் மானியங்களில் சுமக்கப்பட்ட இடு பொருட்களின் செலவுகள் பழக்கப்பட்ட பின் இப்போது விவசாயிகள் மீதே சுமத்தப்படுகிறது. இதுவே இன்று மிகப் பெரும் விவசாயப் பிரச்சினையாக மாறிவிட்டது.

உலகில் சீனா மட்டுமே 'பசுமைப்புரட்சியின்' வலைப் பொறிக்குள் மாட்டுப்பட்டுக்கொள்ளாது தன்னுடைய பாரம்பரிய முறைமைகளுடன், இணைத்துக்கொண்ட பொருத்தமான தொழில்நுட்பப் பிரயோகத்தின் மூலம் தானிய உற்பத்திச செலவை விற்பனை விலையிலும் குறைவாக வைத்துக்கொள்ளும் முயற்சியில் வெற்றியீட்டியுள்ளது.

இப்போ விவசாயிக்கு உதவுவதற்கு யாருமே இல்லை என்கிறார் முன்னாள் விலங்கு விவசாய பிரதிப்பணிப்பாளர் ஐ.என்.ஜி.சில்வா. ஒன்றில் உற்பத்திச் செலவு குறைக்கப்படுவதற்கான மார்க்கம் கண்டு பிடிக்கப்படவேண்டும். அல்லது தங்களுடைய உற்பத்திகளை நேரடியாக சந்தைப்படுத்தும் வழிமுறைகளை விவசாயிகள் கொண்டிருக்கவேண்டும் என்கிறார் சில்வா. இரண்டு அல்லது மூன்று கிராமங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அதன் விவசாயிகள் அனைவரும் கூட்டுறவு அடிப்படையில் அரிசி ஆலைநடத்துவது ஓரளவு விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவரும் என அவர் கருதுகிறார். இது இலங்கை முழுவதுக்குமான பொதுவான பிரச்சினையாக இருக்கின்றபோதும், நாம் கடந்த ஒரு தசாப்தத்துக்கு விவசாய இடுபொருட்களின் உபயோகத்தை பொருளாதாரத்தடை காரணமாக இழந்துபோயிருந்த சமூகமாக இருந்தும் எமக்குரிய பொருத்தமான தொழில் நுட்பப்பிரயோகத்துக்குரிய வளர்ச்சி எட்டப்படவில்லை என்பதும் எமக்குரிய ஒரு பின்னடைவேயாகும்.

அரிசிக்குரிய சர்வதேச ஆண்டாக, 2004 பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாக ஐ.நா.உணவுவிவசாய நிறுவனத் தலைவர் Jacques Diouf தெரிவித்துள்ளார். உலகெங்கும் ஒரு பில்லியன் குடும்பங்கள் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் அரிசி உற்பத்தியையே தமது வாழ்வாதாரத்துக்கான தொழிலாக கொண்டியங்குகிறார்கள் எனத் தெரிவிக்கும் அவர், நெல்லுற்பத்தி உலகில் அதற்குரிய உற்பத்தி நிலமும், நீரும் அருகிப் போனதன் காரணமாகவே நெருக்கடியை சந்திக்கிறது என்றார். 2030 ஆம் ஆண்டளவில் இன்றைய உற்பத்தியைவிட 38 சதவீதம் அதிகம் தேவை எனக்குறிப்பிடும் அவர் நெல்லுற்பத்தி மீது கூடுதலான கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கிறார்.

இது ஒருபுறமிருக்க யாழ். குடாநாட்டில் சிறப்பாக இருந்த விவசாய உற்பத்திகளான சின்ன வெங்காயம், செத்தல் மிளகாய், புகையிலை, வாழை போன்ற பணப்பயிர்களின் உற்பத்தி இன்று வளமிக்க விவசாய நிலங்களை அவகரித்து நிற்கும் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு அப்பால் மௌனமாக நடத்தி முடிக்கப்பட்டுவிட்ட மகாவலி நீருடனான தம்புள்ள உல்வலய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண விவசாயிகளின் விளைபொருட்களுக்கான சந்தைவாய்ப்பும் இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டது. தம்புள்ள பிரதேசத்தில் யாழ்ப்பாணத்தில் உற்பத்திசெய்யப்பட்ட மரக்கறிகள், சின்னவெங்காயம், புகையிலை, வாழை என்பன உற்பத்தி செய்யப்படுவதுடன் இலங்கையின் சகல பாகங்களுக்கும் வினியோகம் மேற்கொள்ளக்கூடியதான விவசாய உற்பத்திப் பொருட்களின் சந்தை ஒன்றும் தம்புள்ளயில் உருவாக்கப்பட்டுவிட்டது. இப்போது நிலைமை எவ்வாறு மாறிவிட்டதென்றால், தம்புள்ளயில் இருந்து மரக்கறிகள் லொறிகள் மூலம், கிளிநொச்சியூடாக, யாழ்ப்பாணத்துக்கே அனுப்பிவைக்கப்படுகிறது என்பதுதான்.

அண்மையில், யாழ்ப்பாணம் திருநெல்வேலிப்பகுதியின் தனியார் மருத்துவமனையில் வைத்திய ஆலோசனைக்காகக், காத்திருந்த போது ஒரு முதியவர் சொன்னார். "இப்போது யாழ்ப்பாணத்தில் இலை தளைச்சருகுகளை கூட்டி முற்றத்தி[illegible]யே எரிக்கிறார்கள். முன்பு என்றா[illegible]ந்த இலைதழைச் சருகுகள் சேர்க்கப்பட்டு விவசாயத்துக்குப் பயன்படுத்தி வியர்வை சிந்தி உழைத்த சமூகம் இன்று வெளிநாட்டில் இருந்து வரும் காசோலைகளில் வாழும் சமூகமாகிவிட்டார்கள்" என்றும் கோபப்பட்டார்.

உண்மையில் மண்ணோடு பிணைந்த உற்பத்தி முறைகள் கைவிடப்பட்ட ஒரு சமூக முறைமை எமது மண்ணில் உருவாகிவருகிறது. யாழ்நகரில் இயங்கும் வணிக வங்கிகள் ஊடே 600 மில்லியன் ரூபாய்கள் மாதம்தோறும் மக்களிடம் வெளிநாடுகளில் இருந்து வந்தடைகின்றன. இது இன்னும் எத்தனை காலங்களுக்கு நிகழும்,

புலம்பெயர்ந்த நாடுகளில் பிறந்து வளர்ந்த தலைமுறை இவர்களுக்கு இவ்வாறு தொடர்ந்தும் பணம் அனுப்பப்போகிறதா என்பது கேள்விக் குறியாய் எழுகிறது விவசாயத்துக்கு அடுத்ததாக எமது குடித்தொகையின் பிரதான தொழில் மீன்பிடியாகும். 1984இல் ஆண்டுக்குரிய மீன் உற்பத்தி 48,776மெற்றிக்தொன்னாக இருந்து 1997இல் 2360 மெற்றிக் தொன்னாகிவிட்டது. இந்த வீழ்ச்சிக்கும், சிறிலங்கா அரசின் கடல் வலயத்தடையும், மீனவர்கள மீதான தாக்குதல்களும் பிரதான காரணமாக இருந்தபோதும், மீன் உற்பத்தியில் மாற்று வழிகளைத் தேடிக்கொள்ளாமையும், புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளாமையும் மீனவர்களை பாதிக்கும் காரணிகளாக இணைந்துகொள்கிறது.

கண்ணைப் பறிக்கும் வண்ணவண்ண கட்டடங்களும், கண்ணாடித்தடுப்புக்களும், கணனி இயந்திரங்களின் செயற்படுகையும் எம்முடைய பொருளாதார வளர்ச்சியை குறித்து நிற்கும் குறிகாட்டிகளாகக் கொள்ளமுடியாது. எமது வளங்கள் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு, விவசாய, மீன்பிடி உற்பத்திகளை அறுவடையின் பின்னான தொழில் நுட்பத்தோடு இணைத்து சிறிய அளவு உற்பத்தி நிறுவனங்கள் பெருமளவில் செயற்பட்டு, இன்றைய திறந்த பொருளாதாரத்தில் அதிகளவு சந்தைவாய்ப்பை பெற்றுக்கொள்ளும்வாய்ப்பை அடையாவிட்டால், எமது தாயகத்தில் எழுச்சிபெறும் தேசிய உருவாக்கத்தின் அத்திவாரம் பாதிக்கப்படும் இது எம் எல்லோருக்குமான சமூகப் பொறுப்பு மிக்க சிந்தனையும் கடமையுமாகும்.

அறுவடைக்குப் பின்னான தொழில் நுட்பப் பிரயோகத்தின் ஊடே உருவாகும் சிறு தொழில் முயற்சிகளே எமது விவசாயிகளின், மீனவர்களின் வாழ்வை மேம்படுத்தும்.

இதற்குரிய உபாயமாக, எமது சமூகத்தில் கூட்டுறவு விருட்சத்தை மார்க்கமாக்கிக் கொள்ளமுடியும். செல்வாக்குடைய சீரிய விவசாயச் செய்கை, சிறப்பான வணிக முறைமை, மக்களின் வளமான வாழ்வு ஆகிய மூன்றையும் குறிக்கோளாகக்கொண்டதுதான் கூட்டுறவு என்கிறார் சேர். பிளற்காட் எனும் அறிஞர். மக்களின் வளமான வாழ்வுக்கான ஊடகமான கூட்டுறவு தமிழர் தாயகத்தேசிய பொருளாதாரத்தின் அத்திவாரமாகவும் அமையும் போது பலமான தேசிய இனமாக நாம் தலைநிமிர முடியும். கூட்டுறவு எமது மக்களுக்கு அந்நியமான ஒன்றல்ல. அதன் தடைகளை உடைத்தெறிய முடியும்.

**அ.அன்ரன் அன்பழகன்**

# நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்

யோ.செ.யோகி

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் ஆயுதப்போராட்டத்தால் இலங்கையில் தமிழ்த்தேசியம் பெருமெழுச்சி கண்டுள்ளது. சாதி, மத, பிரதேச வேறுபாடுகள் எல்லாம் பேரளவு மறக்கப்பட்டு எல்லோரும் நாம் தமிழர்கள், தமிழீழ மக்கள் எனப்பேசும் நிலை உருவாகியது. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையைத் தமிழர்கள் ஏற்றார்கள்.

இந்தச் சூழலில் கிழக்கில் ஏற்பட்ட சலசலப்பால் தமிழீழ விடுதலைப்போராட்டம் சிறு சலசலப்பை அடைந்துள்ளது. இந்தச் சலசலப்பு விரைவில் நீங்கும். தமிழீழப் போராட்டம் புதிய எழுச்சியுடன் தொடரும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் மதியுரைஞர் "பிரபாகரன் வரலாற்றின் உருவாக்கம் அவருடாகவே தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நகர்கின்றது" என அடிக்கடி கூறுவதுண்டு.

தேசியத் தலைவர் பிரபாகரன் தனது நீண்ட போராட்ட வரலாற்றில் கைவிடுகை, துரோகம், இழப்பு ஆகியவற்றைப் பலமுறை சந்தித்துள்ளார். இங்கே கைவிடுகை என்பது நம்பிக்கையாகத் துணை நின்றோர் போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றமையையும், துரோகம் என்பது துணையிருந்தோர் அவரையும், அவரால் கட்டிவளர்க்கப்பட்ட இயக்கத்தையும் அழிக்க முயன்றமையையும், இழப்பு என்பது போராளிகளின் இழப்புக்கள், படைக்கலம், கட்டுப்பாட்டுப் பகுதி போன்றவற்றின் இழப்புக்களைக் குறிக்கின்றது.

புலிகளின் வரலாறு முடிந்தது எனப் பலமுறை எதிர்வு கூறப்பட்டதுண்டு. ஆனால், புலிகள் மீண்டும் மீண்டும் எழுந்தார்கள். அதிக பலம் பெற்று எழுந்தார்கள். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் புலிகளின் ஒவ்வொரு வீழ்ச்சிக்கும் பின்பு அவர்கள் இருந்ததிலும் கூடியபலம் கொண்டு எழுந்ததைக் காண முடியும்.

இந்த எழுச்சிக்கும் பலத்திற்கும் மூலம் தேசியத் தலைவரே ஆகும்.

தமிழீழ வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலும் நமது தேசியத் தலைவரைப் போன்று ஒழுக்கம், கட்டுப்பாடு, விடாமுயற்சி, இடுக்கணழியாமை ஆகியவற்றைக்கொண்ட ஒரு வரைக்காண்பது அரிது. அதே போன்று கொண்ட இலட்சியத்திற்காகப் பெருமிடர்கள் இடையிலும் தொடர்ந்து போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற அமைப்பையும் காண்பது அரிது.

பெருந்தலைவரும் அவரால் கட்டிவளர்க்கப்பட்ட இயக்கமும் உள்ளவரை தமிழர்கள் சலசலப்புகளுக்கு அஞ்சவேண்டியதில்லை.

இன்று தமிழீழமெங்கும் எதிரியை அஞ்சச் செய்யும் நவீன படைக்கலங்களுக்காகச் செலவிடப்பட்ட பணத்தின் பெறுமதி பல நூறு கோடிகளுக்கு மேலாகும். இதனிலும் மேலாக அவற்றை இந்த மண்ணில் கொண்டு வந்து சேர்க்கப் பல போராளிகள் உயிர்தந்தனர். இதேபோன்றே எதிரியிடமிருந்து படைக்கலன்களைக் கைப்பற்ற ஆயிரக் கணக்கில் போராளிகள் உயிர் தந்தனர். இப்படியாகப் பல ஆயிரம் போராளிகளின் உயிர்க் கொடையால் பெறப்பட்ட கட்டுப்பாட்டுப் பகுதியில் நின்று பிரதேசவாதம் பேசுவதோடு நிற்காமல் அவர்களால் பெறப்பட்ட படைக் கலங்கள் குறித்த இரகசியங்களை வெளிப்படுத்தும் ஒரு சோக நாடகம் கிழக்கில் இடம் பெறுகின்றது.

போராளிகளின் உயிர்க் கொடை நவீன படைக்கலங்களின் வருகை ஆகியவற்றால் ஏற்பட்ட எழுச்சி இன்றேல் இன்று முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கணிசமான பகுதிகளையும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் பெரும்பகுதிகளையும் நாம் இழந்திருந்தபோதும், தொடரும் காலங்களில் எல்லா மாவட்டங்களையும் இழக்கும் நிலைக்காளாக்கப்பட்டிருப்போம்.

ஒழுக்கமற்ற, விலை போகும் தலைமைகளால் தன்னையும், தன்படையையும், ஈற்றில் தன்னைச் சார்ந்த மக்களையும் காக்கமுடியாது இவர்களின் கீழ் ஒழுக்கக்கேடும், துரோகமும் உயர்விழுமியங்களாகிவிடும்.

இவர்கள் தங்கள் சிறு நலனுக்காக வெளிச்சக்திகளின் நலனுக்கு இசைவார்கள். வெளிச்சக்திகள் தமது நலன் நிறைவேறும் வரை இவர்களைப் பயன்படுத்தும் பின்பு இவர்களைக் கைகழுவிவிடும்.

வெளிச்சக்திகள் இவ்வாறான நிலையில் குறிப்பாக இரண்டு மூன்று விடயங்களில் கவனம் செலுத்தும். அவை தமக்கு இசைந்து தமது மக்களைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுப்போரை ஓரளவுக்கு மேல் வளரவிடாது. இவர்களைப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்திற்கு தொல்லை தந்து அதனைப் பலம்குன்றச்செய்து அதனை அழிப்பதில் குறியாக இருக்கும். இறுதியில் அவை விரும்பிய தீர்வைத் திணிப்பதில் கவனமாயிருக்கும் வெளிச்சக்திகளுக்கு இசைய மறுப்பதும் அவற்றின் ஆசை வார்த்தைகள் கண்டு மயங்க மறுப்பதும் விடுதலைப்புலிகளின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தேசியத் தலைவர் ஏற்றிருந்தால் வடகிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக வளத்தோடு வாழ்ந்திருக்க முடியும். அவருக்குக் குறுகிய காலத்திற்கு எல்லாவித வசதிகளையும் செய்துதர இந்திய, இலங்கை, உலக அரசுகள் தயாராகவே இருந்தன.

ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம் அதற்கென ஒரு காப்பான தளத்தைக் கொண்டிராது வளரமுடியாது. அதனை எதிர்க்கும் ஒடுக்குமுறை அரசு அதன் தலைமையையும், இயக்கத்தின் படைக்கல வளர்ச்சிக்கான தொடர்பு வழிகளையும் அழிக்க முயலும். இவ்வாறே ஒரு விடுதலைப்போராட்டத்தில் இடம்பெறும்.

போராட்ட வளர்ச்சிக்கான காப்பான தளத்தையும் அங்கிருக்கும் தலைமைப் பீடத்தையும் காப்பதே போராளிகளின் முதற்கடமை. அதனைக் காப்பாக்கிய பின்பு படிப்படியாக மற்றைய பகுதிகளைக் காப்பாக்குதலே ஒரு விடுதலைப் போராட்டத்தில் நடைபெறும். சூரியக் கதிர், ஜெயசிக்குறு, செக்மேற் போன்ற நடவடிக்கைகள் எல்லாமே தலைமைப்பீடத்தையும், இயக்கத்தின் படை, படைக்கல வளர்ச்சிக்கான தளத்தை அழிப்பதையே இலக்காகக் கொண்டவை.

ஒரு போராட்டத்தின் நரம்புகளின் மையத்தைக் காப்பது எனது கடமையல்ல என எந்தவொரு போராளியும் கூறமாட்டான்.

தமிழீழப் போராட்டம் ஓரளவு வளர்ச்சிகண்ட பின்பு வடக்கிற்குச் சுயாட்சி தரச்சிங்களத் தலைமைகளும், உலக அரசுகளும் தயாராகவே இருந்தன.

புலிகள் பிரேமதாசாவோடு பேசிய காலத்தில் பிரேமதாசா பலமுறை "வடக்கைப் பிரபாகரன் ஆள்வதில் எமக்குச் சிக்கல் இல்லை. கிழக்குத்தான் சிக்கல். அங்கு சிங்களவர், முஸ்லிம்கள் உள்ளனர்" எனக் குறிப்பிட்டதுண்டு.

இதை நான் இங்கு குறிப்பிட்டமைக்குக் காரணம் புலிகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்திலோ அல்லது வன்னியிலோ நடத்தப்படும் தாக்குதல் புலிகளைப் பலம்குன்றச்செய்தல் என்பதோடு நிற்காமல் கிழக்கை முழுமையாக வெல்லல் என்ற நிலைப்பாடோடு இணைந்ததாகும்.

அரசுக்கு ஒன்று தெரியும். போராட்டத்தின் மூலத்தைப் பலமிழக்கச் செய்தால் கிழக்கைத் தன் கட்டுப்பாட்டுள் கொண்டுவர நீண்ட காலம் ஆகாது என்பதே.

கிழக்கைப் புலிகள் வென்றால் தமிழர்களுக்கு விடிவு விரைவில் கிட்டும். கிழக்கைச் சிங்களப் பேரினவாதம் வென்றால் அது கிழக்கு வாழ்தமிழ் மக்களின் அழிவோடு தொடங்கி ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்களின் அழிவாக முடியும்.

ஜெயசிக்குறு, அக்கினிச்சுவாலை போன்ற நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்வியும் கிழக்கில் நவீன படைக்கலன்களுடனான புலிகளின் வளர்ச்சியுமே அரசைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரவழைத்தது.


சமாதான காலம் விடுதலைப் போராட்டத்திற்குப் பெரிதும் அச்சுறுத்தலான காலமாகும். இந்தக் காலத்தில் பிற சக்திகளின் ஊடுருவலாலும், சமாதான காலம் தரும் பொய்யான அமைதியால் மக்களிடையே ஏற்படும் போராட்ட உணர்வின் தளம்பலாலும் ஒரு விடுதலை இயக்கம் பலமிழக்கச் செய்யப்படும். இதற்கான எளிமையான வழிகளை இந்தக் காலம் திறக்கும். இப்படியான செயல்வகையின் ஒரு விளைவே கிழக்கில் ஏற்பட்ட சலசலப்பு.

தமிழீழத் தேசியத் தலைவரின் காலத்தில் தமிழினம் ஒருபோதும் ஏமாறவோ, தோற்கவோ தயாராக இல்லை என்பதைப் பலமுறை நிரூபித்துள்ளது.

விரைவில் சல சலப்புக்கள் நீங்கும். தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழீழத் தேசியத்தலைவரின் கீழ் புதிய மேலதிக பலத்தோடு மீண்டும் உலாவரும்.

"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் வரிகளை இங்கு மனதில் நிறுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.








# நிலா இல்லா இரவு

முருகு.பாரிமகன்

நிலா இல்லா அந்த இரவில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாமல் கருமைத்திரை விரிந்திருந்தது. வீட்டில் விளக்குகள் எரிவதில்லை. வாய்கள் பேசுவதில்லை.

மௌனத்தில் மட்டும்தான் வாழ்க்கையில் சுகதுக்கங்கள் பேசப்பட்டன.

தூக்கம் வந்ததோ இல்லையோ இரவு விழித்துக் கொண்டதும் விழிகள் மூடிவிட வேண்டும் என்பது சட்டமாகிவிட்டது.

கிராமமே மனித நடமாட்டமற்ற மயான பூமியாகக் கிடந்தது.

அவர்கள் இன்னமும் இரவு உணவை உண்ணவில்லை. குழந்தைகள் உறங்கத் தொடங்கி விட்டனர்.

வெளியில்

முற்றத்தில்

உணவு பரிமாறப்படுகிறது. உணவைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. பசி தீரவேண்டும் என்பதற்காகச் சாப்பிடத் தொடங்கினார்கள்.

நாய்கள் உறுமுவதும், ஓலமிடுவதுமாக இருந்தன. நாய்களின் சத்தங்கள் அவர்களுக்குப் பழக்கமாகிவிட்டன. அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

எண்ணங்கள் கலைந்து போக மனங்கள் உதறிக்கொண்டன.

“என்ன நடந்தாலும் என்ன செய்வது”

எண்ணங்களுள் சொற்கள் புதையுண்டன.

சப்பாத்துக் கால்களின் ஓசைகள் அண்மையில் கேட்டன. வியர்த்து வியர்வை தள்ளியது. உடல்கள் லேசாக ஆடின. மின்குமிழ் ஒளிபாய்ந்து வந்து முகத்தை நனைத்தது.

யாராக இருக்கும்.

“உஸ்”

சட்டத்தை மீற யாருக்குத் துணிச்சல் வரும்

அவர்கள்தான்.

மனங்கள் எண்ணிக் கொண்டன.

“இனி”?

“என்ன செய்வது”

குழம்பிப்போனார்கள்.

சப்பாத்துக் கால் ஓசைகள் மிக அண்மையில் வந்துவிட்டன.

“அடோ கையை உயர்த்து”

கம்பீரமான குரல்களில் ஆணைகள் பிறந்தன.

கைகள் உயர்ந்தன.

“ஐயோ அடியாதையுங்கோ நான் படிக்கிறன்”

தூக்கம் கலைந்த சிறுவன் அலறினான்.

“அடே கத்தாத படு”

சிறுவனுக்கு நின்மதி. ஆனாலும் உதறல் நிற்கவில்லை.

“அடோ நீ நட”

“ஐயோ அவரை விடுங்கோ ஒன்றும் செய்யாதேங்கோ. அவள் கணவனின் விடுவிப்புக்காக யாசித்தாள்.

எதுவும் பதில் இல்லை.

என்ரை பிள்ளையைக் கொண்டு போகாதையுங்கோ!

தகப்பனின் குரல் கதறியது.

மகனை மறைத்தபடி நின்றார்.

“கதைச்சுப் போட்டு விடுகிறதுதானே”

தகப்பன் விலக்கப்பட்டான்.

“என்ரை பிள்ளை!

நிலத்தில விழுந்தவன் எழவில்லை.

“அவரை விடுங்கோ” அவர் படிப்பிக்கிறவர்.

அவள் ஓவெனக் கதறினாள்.

யாரும் பொருட்படுத்தவில்லை.

அவன் மெல்ல மெல்ல நகரத்தொடங்கினான்.

முதுகுப் பக்கமாகத் துப்பாக்கிக் குழல்

அவன் தன் கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் நகர்த்தப்பட்டான்.

முன்னால் போறவன் யார்? பின்னால் வருபவன் யார் அவனுக்குத் தெரியாது. விலக நினைத்தால் குறிபார்த்துக்கொண்டிருக்கும் துப்பாக்கி உடலைச் சுவை பார்த்துவிடும்.

கால்கள் பின்னலிட நெஞ்சம் விம்மலிட அவன் நடந்து கொண்டிருந்தான்.

“இண்டையோட எல்லாம் சரி”

அவன் தனக்குள் நாள் குறித்துக்கொண்டான்.

அந்த இருண்ட வானத்தில் மின்னும் தாரகைகள் கூட அவனுக்குத் துணை நிற்கவில்லை.

ஆனாலும் நகர்ந்து செல்லும் பாதைகள் அவன் கால்களுக்குப் பரிச்சையமானவை.

ஒரு குச் சொழுங்கை தலையைப் பிடித்து ஒருவன் அமர்த்தி இருக்கும்படி பணித்தான்.

அமர்ந்து இருந்தான். அப்போது தான் அவனுக்கு அருகில் மைத்துனன் ஒருவனும் தம்பி முறையில் ஒருவனும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

மௌன இருப்பு

சப்பாத்துக் கால்களின் சப்தம் மட்டும் அந்தப் படை வீரர்களின் நடமாட்டத்தை உணர்த்திக்கொண்டிருந்தது.

அமைதியைக் கிழித்துக் கொண்டு அழுகுரல்கள், மன்றாட்டங்கள் தங்களை இனங்காட்டும் முறையீடுகள்.

“ஐயோ நான் பிள்ளை குட்டிகாரன்”

“நான் கண்தெரியாதவன்”

“ஐயோ நான் வருத்தக் காரன்”

“எங்களுக்கு ஒண்டும் செய்யாதையுங்கோ”

எந்த வேண்டுதல்களும் அவர்களின் காதுகளுள் நுழையவில்லை.

டமார் டமார்....... என்ற அடி ஓசைகள்.

அடேய் புலி.......

அதிகார அதட்டல்கள்.

அமைதி இழந்துவிட்ட அந்தக் குடிசைகளில் அவல ஓலங்கள்...... மூச்சடங்கிப் போன சிறித்து நேரத்தில்

சப்பாத்துக் கால்களின் ஒலி மீண்டும் டொக்..... டொக்.....

எல்லோரும் நகர்ந்துவிட்டதான தோற்றம். அவன் மூச்சை மெல்ல இழுத்து வெளியே விட்டான்.

நின்மதியா?

ஏக்கமா?

எதுவுமே புரியவில்லை.

அ......அ........

சப்பாத்துக் கால்கள் அவர்களின் முன்னே நின்றன.

அவர்கள் எழுந்து நின்றார்கள்.

ஒருவனின் முரட்டுக் கரங்கள் முதன் நின்ற இவனின் தம்பி முறையானவனின் உச்சி மயிரைப் பிடித்து உலுப்பியது.

“மாஸ்டர்”

“ஐயோ நானில்லை”

அவன் அலறினான்.

ஆளை மாறிப் பிடித்து விட்டான்.

“நான் இஞ்சை நிக்கிறன்”

தம்பியை விடுங்கோ”

இவன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

அவனின் மயிரைப் பிடித்த கை விலகிக்கொண்டது. தம்பி மூச்சை வெளித்தள்ளிய போது மாஸ்டரின் தலைமயிரில் அந்தக் கரங்களின் பிடி இறுகியது.

“சுருளி”

“தெரியாது”

மாஸ்டரின் குரல் உறுதியாக ஒலித்தது.

“தெரியாது”

“தெரியாது”

அந்த முரட்டுக் கரங்கள் விரல்களைப் பொத்தியபடியே மாஸ்டரின் முகத்தைப் பதம் பார்த்தது.

ஒரு கணப்பொழுது.......

கோபத்தில் சிவந்த கண்களையும் தாக்கத் துடித்த கைகளையும் அடக்கிக்கொண்டு மற்றவர்களின் சாவுக்கு நான் காரணமாகி விடக்கூடாது என மாஸ்டர் உறைந்து போனான்.

மீண்டும் துப்பாக்கி முனைகள் முதுகை அழுத்தின.

நடந்தார்கள்.

பூ...... நாறிப் பற்றைகள் உடல்களை உரசப்பள்ளம் மேடுகளில் கால்கள் இடற அவர்கள் நடந்துகொண்டிருந்தார்கள்.

கொஞ்சநேரத்திற்கெல்லாம் வெளிச்சம் பாய்ச்சப்பட்டிருக்கும் இடத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

மக்களின் குடியிருப்பு.

மூவரும் வெளிச்சத்தில் நிறுத்தப்பட்டனர்.

மாஸ்டரின் வாயில் இரத்தக் கசிவு.

ஒரு பல்லைக்காணவில்லை.

எச்சிலோடு எங்கோவிழுந்து விட்டது.

வீட்டு யன்னல்களிலிருந்து எட்டிப் பார்க்கும் தலைகள் தெரிந்தன.

முனகலும், அழுகுரலும் கேட்டன.

“யார்யாரோ எந்த ஊரோ?

அவர்களுக்குத் தெரியாது.

யன்னல்கள் மறைக்கப்பட்டன.

அந்த வீடுகளில் வெளிச்சங்கள் மட்டும் அணைக்கப்பட்டன.

மாஸ்டரின் முகம் வீங்கியிருந்தது.

அவர் கன்னத்தை லேசாக வருடினார்.

அவர் உறுதியானவர்.

கலங்கவில்லை.

நீதி நியாயங்களுக்காக அவன் சாகவும் தயாராக இருந்தான்.

ஒருவன் வந்தான்.

தனக்குத் தெரியாமல் நடந்த சம்பவத்துக்காக மாஸ்டரிடம் மன்னிப்புக் கேட்டான். அவன் இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் என்பதும் அவன் தமிழன் என்பதும் மாஸ்டருக்கு நன்கு தெரியும்.

அடிக்கடி வந்து பழகியவன். அடிக்கடி மாஸ்டரை அழைத்துச் சென்று சிலரைச் சரணடைய வைக்குமாறு கேட்பான்.

அதில் சுருளியும் ஒருவன்.

மாஸ்டர் அதற்குச் சம்மதிக்கவே இல்லை. தேசத்தில் பற்றுறுதியும், போராளிகளின் மீது அன்பும் மதிப்பும் அதிகமாக வைத்திருந்தவர்.

அந்த இராணுவ வீரன் இவரை மிக நேசிப்பது போலவும் மதிப்பது போலவும் காட்டிக் கொண்டான்.

இது இராணுவ யுக்தி என்பதை நன்கு புரிந்துகொண்ட மாஸ்டர். அவனிடம் எந்தவகையிலும் மாட்டிக்கொள்ளவில்லை.

ஆனால், இந்த இரவு.......

சோதனையும் வேதனையுமாக அமைந்துவிட்டது.

“மாஸ்டர் இவர்கள் யார்?

விசாரணை ஆரம்பமானது.

இவன் தம்பி, இவன் மைத்துனன்.

என்ன செய்யுறாங்கள்.

கூலி வேலை.

அப்ப உங்கட தம்பி

சந்திரன்

ஏன் பொய் சொல்லுறியள் நீங்கள் குரு பொய்........

“இல்லை உண்மைதான்”

மாஸ்டர் பேசமுடியாத வேதனையில் ஆத்திரப்பட்டார்.

“அப்ப சுருளி”

அவன் சின்னம்மாவின் மகன்.

சீறிப் பாய்ந்தது வார்த்தைகள்.

அவன் அமைதியாகவே விசாரித்தான்.

“அவன் எங்கை?

தெரியாது.

“பொய் உங்களோடதான் சாப்பிட்டுக்கொண்டிருந்தவன்”

பெரிய குண்டைத் தூக்கிப் போட்டான் புலனாய்வுக்காரன்.

உண்மைதான்.

அவனுக்கு இரண்டு சிப்பாய் நண்பர்கள்.

அவர்கள் முன்பே அறிவித்தபடியால், அவன் நேரத்துடன் போய்விட்டான்.

இந்தச் செய்தி அந்தப் புலனாய்வுக்காரனுக்கு எப்படியோ தெரிந்திருக்க வேண்டும்........

“அவனைப் பிடிக்க வந்து எங்களையோ பிடிக்கிறது மாஸ்டர் ஆக்ரோசத்துடன் கேட்டார்.

“இல்லை அப்படி இல்லை”

அவன் சமாளித்தான்.

“சரி வாருங்கோ”

சிறிது தூர நகர்வின் பின்

நீங்கள் வீட்டை போங்கோ ஆனால், இஞ்சை நடந்ததை ஆருக்கும் சொல்லக்கூடாது.

அப்ப அவங்கள்.

“விசாரித்துப்போட்டு விடுவம். நீங்கள் மாஸ்டர் உங்கட சொல்லுக்கு ஊரே கட்டுப்படும் என்று அறிஞ்சனாங்கள் யோசிச்சுச் செய்யுங்கோ,

அவன் கூறிக்கொண்டே மாஸ்டரைப் பின்தொடர்ந்தான்.

தெருவின் திருப்பு முனையில் அவன் நின்றுவிட்டான்.

போவியளோ ஓமோம்

எங்கும் இருள் சூழ்கொண்டிருந்தது.

மாஸ்டர் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தார்.

“எவனது துப்பாக்கி குறி பாக்குதோ”

நினைவுகளினூடே வீட்டிற்கு வந்து சேர்ந்த போது தான் அவருக்கு ஆறுதலாக இருந்தது.

யாருடனும் எதுவும் பேசவில்லை.

வாயை அலம்பிவிட்டு முற்றத்தில் இருந்தவர்களுடன் ஓரிடத்தில் அமர்ந்தார்.

பேசவும் முடியவில்லை.

விழிகளும் மூடவில்லை.

மெல்ல விடிந்தபோது அறிந்த செய்தியை உறுதிப்படுத்த ஊரே திரண்டு இருந்தது.

அப்போதுதான் அந்த நிலா இல்லா இரவில் பிடிக்கப்பட்ட இருபத்தைந்து இளைஞர்களின் செய்தியும் காதுக்கு எட்டியது.

மாஸ்டர் அசந்து போனார்.

எல்லாரையும் அழைத்துக் கொண்டு முகாமை நோக்கி நடந்தார். ஊரே அவர் பின்னால் நகர்ந்து கொண்டிருந்தது.

# நினைவுகள்



## வல்லினம்

“ அகதிமுகாம்
மழையில்வருகிறது
மண்வாசனை
தமிழீழம்நோக்கி
என்னைத் தள்ளுகின்றன.

நான் பிறந்த நாவற்குடாவையும்
வளர்ந்த அமிர்தகழியையும்
ஒட்டிக்கொண்டு நீளமாக
வானத்தைக் கிழித்து நிலத்தில்
போட்டது போல் அழகான
உப்பேரி.
பொழுது படபட நீலம் இறுகும்.
இரவுகளில் உப்பேரியில் இறங்கி
நீரில் ஓடும் மீன்களோடு கூடவே
தங்க ஒளிக்குழம்பு
இழுபட்டுப்போக ‘கவிர்’ அழகைப்
பார்த்துப் பார்த்து மகிழ்வேன்.
கல்லைத்தூக்கி
ஏரியில்போட்டால்... போட்ட
இடத்தில் தங்கம் தோன்றித்
தண்ணீரில் கரையும்.
எங்கள் ஊருக்கு எதிரில் ஏரியின்
அடுத்த கரை நாவலடி.
கடலை ஒரு புறமும் ஏரியை ஒரு
புறமும் கொண்ட சிற்றூர்.
முழுநிலாக் காலங்களில் ஏரிக்கு
அப்பால் நாவலடிக் கரையில்
வரிசையாக நிற்கும்
தென்னையில் கொஞ்சநேரம்
நிலவு காய்த்துத் தொங்கும்.
எங்கள் ஏரியில் மீன்கள்
பாடுவதுண்டு.
அழகான இரவுகளில் இறால்
பிடிப்பவர்களின் மண்ணெண்ணை
விளக்கு வரிசை
ஏரியின் கருங்கழுத்தில்
மணிமாலை கட்டும்.

நிலா வெளிச்சம்.
தம்பி ஜெயத்துக்குத் தேன்.
தோணியில் நானும் அவனுமாய்
ஏரியில் இறங்குவோம்.
பளபளக்கும் தண்ணீர்
‘சலார்’என்று ஒரு மீன்
தண்ணீரைக் கிழித்துப் பாயும்.
தோணியில் இருந்தபடியே தம்பி
புல்லாங்குழல் இசைப்பான்
காற்று சிலிர்க்கும்.

வாகனேரிக் காட்டில் உள்ளங்கை
போல் ஓர் அழகான குளம்.
கொழுத்த காடு.
சித்தப்பா நீர்ப்பாய்ச்சல்
மேற்பார்வையாளராக
வாகனேரியில்தான்
பணியாற்றினார்.
பிஞ்சுப் பருவத்தில் அந்தக்
காட்டில் ஓரிருநாட்கள்
தங்கியிருந்ததை மறக்க
முடிவதில்லை.
நீண்டு வளைந்த காட்டுவழி
நடந்தே சென்றோம்.
மண்கிழித்துத் தீனி பொறுக்கும்
காட்டுக்கோழி
அச்சத்தால் சிறகுதட்டிப் பறக்கும்.
இலைகள் புதிது தழைத்தாற்போல்
பட்ட மரங்களில் மயில்கள்.

அடர்ந்த காட்டின் நடுவே
பயிர்கள் வளர்க்கப்பட்ட காட்டுக்
கொல்லை ஒன்றில் தங்க
நேர்ந்த ஓர் இரவு நெஞ்சில்
ஆழப்பதிந்திருக்கிறது.
உயரக் கட்டிய பரணில்
யானைகள், பண்றிகள் பயிரை
அழிக்காமல் காவல்
பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
கீழே பட்ட மரக்கட்டைகளில்
நெருப்பு
மூட்டப்பட்டிருக்கிறது.
இரவுமுழுவதும் அவர்கள் கூட்ப்
பரணிலேயே.
மழைக்காலம்.
நெருப்பின் கணகணப்பில்
உடலின் குளிர் பொசுங்கிச்
சாம்பல் ஆயிற்று.
பிஞ்சு மக்காச் சோளத்தைக்
கொல்லையில் முறித்து கீழே
எரிந்து கொண்டிருந்த நெருப்பில்
வாட்டி.
பரண்மேல் உட்கார்ந்து
சாப்பிட்டோம்.
அதற்கு மேல் - தேங்காச்
சிரட்டையில் சுடச் சுடதேநீர்.
பக்கத்தில் யானைகள் காடு
முறிக்கும் ஓசை.
எங்கோ ஒரு மான் கத்தும்.

‘விற்பனை மடு காடு விழிகளில்
நிறைந்திருக்கிறது.
இளைஞனாய் இருந்த காலத்தில்
ஓரிரு நாட்களை இங்கே கழித்த
நினைவு.
பச்சைப் பசேலென்ற பேரெழில்.
மர அணில்கள் கிளைவிட்டுக்
கிளைதாவும் நெடிய மரங்கள்.
கரையாக்கன்பூ இடைஇடையே
சிவப்பு காட்டும்.

எங்கள் காடுகள் அழகானவை.
மரங்களின் பட்டைகளில்கூட
ஓவியங்கள் தோன்றும்.
கிளாப்பழம், துவரம்பழம்,
பாலைப்பழம், நாவல்பழம்... என்று
பறித்து வாயில் போட்டுக்
கொண்டே இருக்கலாம்.

பாசிக்குடா.
மேனாட்டார்களை இழுத்து
மெய்சிலிர்க்கவைக்கும்.
வெள்ளைக் கடற்கரை.
அழகு மணல் வார்ப்பு.
தாழைமரக்குடை.
விரல்கொண்டு எழுத்து
எழுதிப் பழகும் நண்டுகள்.
இராவணன் மீசை ஆங்காங்கே
பூத்துக் கிடக்கும்.
கழுத்துவரை தண்ணீரில் நனைந்து
கொண்டே நீராடிக் களிப்போம்.
கடல்தான் பாசிக்குடாவில்
குளமாய் இருக்கிறது.
ஆழமே இல்லை.
கடலுக்கும் அப்படி ஒரு கனிவு.

தென் தமிழ் ஈழத்தில் மட்டுமன்று
- யாழ் தீவுகளில்-
திருகோணமலை கடலில் -
வன்னிக் காட்டில் - என்
தாய்மண் மடியில் நான் ஆசைதீரக்
கிடந்து உழத்தியிருக்கிறேன்.

காடுகள் இனியவை.
நாங்கள் மட்டுமா நாங்கள்? எங்கள்
மரங்களும் நாங்கள்.
எதிரிகள்
எங்களைத்தாக்கும்போதெல்லாம்
காடுகளோடுதான் கைகோர்த்து
நிற்கிறோம்.
போர்க் காலத்தில் வன்னிக்
காட்டில் இருந்திருக்கிறேன்.
எதிரிகள் காட்டில் நுழைய
நாங்கள் என்றைக்குமே
விட்டதில்லை.
மரங்கள் புண்படக் கூடாது.
போராளிகளின் நிழலில் எங்கள்
மரங்கள்.

நீங்கள் எங்கள் எதிரிகளைப்
பார்த்துத்
தெரிந்துகொள்ளவேண்டும்.
‘போதி’ மரத்தைத்தவிர வேறு
எந்த மரத்திலும் உயிர் இருப்பது
அவர்களுக்குத் தெரிவதில்லை.
தமிழ் மண்ணைக்
காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டே
அவர்களுடைய
போர்விண்ணூர்திகள் தமிழ்
மண்மீது நெருப்பைப்
பொழிகின்றன.
வானில் முகிலைப் போல்
நடிக்கும் குண்டுகளின் புகை
வளையம்.
முற்றிலுமாய் எங்கள் காடுகளை
அழிக்கும் புதிய முயற்சி
தொடக்கப்பட்டுள்ளது.
குருவிகளுக்கு எந்தநாடு புகலிடம்
கொடுக்கும்?
நாங்கள் விடமாட்டோம்.
காடுஎங்கள் தாய். குருவிகள்
எங்கள் பிள்ளைகள்.

எதிரிகளின் நச்சுக்குண்டுகள்
எங்கள் கடலில் கரைகின்றன.
மீன்களின் கருச்சிதைவு.
பாசிக்குடா கடற்கரையில் அந்த
அழகான வெள்ளை நண்டுகள்
படை வெறியர்களின் கால்
செருப்பின் கீழ் நொறுங்கிக்
கொண்டிருப்பதாய் செய்தி.
தெரிந்துதானே-
களத்தில் இறங்கினோம்.
நேற்று கடல் எங்கள் படகுகளைத்
தாங்கியது.
இன்று எங்கள் படகுகள் கடலைத்
தாங்குகின்றன.

கிளை கிடைக்காத சோகம்
அமர்ந்தது புறா
கல்லறைச் சிலுவை.
பஞ்சு நெஞ்சு.
இலையுதிர் காலத்தில் உதிரும்
மரங்களே வெட்டிச்
சாய்க்கப்பட்டால்...?
மூட்டும் நெருப்பில் நான்
கொதிக்கிறேன்.

இந்நேரம்-
வீட்டுக்கு எதிரில்
அழகான எங்கள் உப்பேரியில்
நிலவு செத்து மிதக்குமோ
இருக்காது.
எங்கள் வீரர்களில் எனக்கு
நம்பிக்கை உண்டு.
நம்புகிறேன்.
பிரபாகரன் எங்கள் காவல்.
எங்கள் என்பது
நாங்கள் மட்டுமல்ல... எங்களோடு
வாழும்
பனைமரங்கள்... பச்சைப்
புறாக்கள்...பொன்னி வண்டுகள்...
அருகம்புல் அடுக்குகள்... இன்னும்
இன்னும் எங்கள் மண்ணின்
ஒவ்வொரு உயிரணுவுக்கும்
அவனே வேலியாய்....
ஆம்.
நாளை வானம் வெளிக்கும்.
காட்டில் பறவைகளின் கூடுகளில்
கலகலப்பு உண்டு.
என் கடலில் மீன்கள் கூத்தாடும்.
விடுதலைக் களிப்பு.
நண்டுகளும் குழந்தைகளும்
விளையாடுவார்கள்.
பார்ப்பேன்.
குண்டுகளின் ஓசை தொலைந்து
மறுபடியும் என் உப்பேரிக்
காற்றில் புல்லாங்குழல் இசை
கேட்கும்.
கண்மூடிய என்தம்பி ஜெயத்தை
அப்போது காண்பேன்.
கூடவே-
தளிர்களாய் உதிர்ந்த ஆயிரம்
ஆயிரம் தம்பிகளும் தங்கைகளும்
என் முன்னால். ”

காசி ஆனந்தன்

# நம்பிக்கை...

காற்றைப் போல
ஒரு பறவையினால் முடிகிறது
சுவடற்றுப் பறந்து செல்ல.
சில பூக்கள் சேர்ந்தாலே
முடியும்
ஓர் வண்ணாத்துப் பூச்சியின்
வழித்தடமறிய
நகர்தல் பற்றிய பிரஞ்ஞை அற்றே
இருக்க முடிகிறது
பூக்களால்.
எப்போதோ எடுத்து வைத்த
முதல் அடி தொடக்கம்
சற்று முன் பதித்த
கடைசி அடி வரையும்
நினைத்துச் சிலிர்க்க
என்னாலேயே முடிகிறது.

யோ.கர்ணன்

# நீளும் காத்திருப்பு

உன் பயணத்தின் வேகமும்
இலக்கின் தூரமும்
நான் அறிந்தது தான்.
இருந்தும்...
மேகம் உரசிச் செல்லும் ஒரு
மந்தாரப்பொழுதில்
காற்றை அளைந்து அளைந்து
உன்னைத் தேடுகின்றன விழிகள்.
உன் பரிவின் ஒரு துளிக்காகவும்
கனிவு சுமந்த உன் பார்வையின்
இறுதி மொழிக்காகவும்...
ஒரு காத்திருப்பு நீள்கிறது...
என்னுள் சுரக்கும் உன்மீதான பாசம்
உன் தவத்தைக் குழப்பவல்ல...
உன்னை உந்தித் தள்ளவே...
ஒரு வரலாற்றின் பக்கம்
உன்னை வரைந்து கொள்வதற்காய்
வெண்மையாய்க் கிடக்கிறது...
உன் கருமை உன்னை அதில்
வரைந்து கொள்ளட்டும்...
நீ ஊன்றிய வித்தின்வேரிலிருந்து
வெளிக்கிளம்பும் செடியில்
முகையவிழும் முதல் மொட்டு
உன் திருவுருவின் முன் விரியும் பேறு பெறும்....
எங்கள் தாகம் தீர்க்கும் ஊற்றுச்சுனையை
மூடிக்கிடக்கும் பாறாங்கல் ஒன்றைப்
பெயர்த்த பெருமையுடன் நீ
பிறப்பாய் மீண்டும் என்னுள்...
அதுவரை... கருத்தரிப்பதற்காய்...
ஒரு காத்திருப்பு நீள்கிறது...

ஆதிலட்சுமி சிவகுமார்.




# குழந்தைநாதம்

# தவம் செய்யப் போகிறேன்!

ஒரு கிராமத்தில் கார்த்திகேசு என்கிற விவசாயி இருந்தார். அவருக்கென்று சொந்தமாகச் சிறிய நிலம் இருந்தது. அதில் விவசாயம் செய்து மனைவியையும், ஒரே மகனான மயூரனையும் காப்பாற்றினான்.

மயூரனோ தந்தைக்கு உதவியாகவும் இல்லாமல் வேறு வேலைக்கும் போகாமல் நண்பர்களோடு அரட்டையடித்துப் பொழுதைப் போக்கினான். கார்த்திகேசுக்கு வயதாகிவிட்டதால் வேலை செய்யமுடியவில்லை. உடல்நிலையும் பாதிக்கப்பட்டுப் படுக்கையில் இருந்தார்.



ஒரு நாள் மகனை அருகே அழைத்து " மயூரா இனிமேல் என்னால் வேலை செய்ய முடியாது. நீ தான் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும்'' என்றார்.

"என்ன வேலை செய்கிறது?" என்று கேட்டான் மயூரன்.

"இதென்ன கேள்வி? எங்கள் நிலத்தில் விவசாயம் செய்" என்றார் கார்த்திகேசு.

''இல்லை நீங்களும் தான் பல வருடம் விவசாயம் செய்தீங்கள். என்ன பயன்? வரும் பணம் சாப்பாட்டுக்கே சரியாப் போச்சு. ஓலைக்குடிசையில ஏழையாகவே இருக்கிறோம்.''

"அப்போ வேற என்ன வேலை செய்யப்போகிறாய்?"

''வேலை செய்யப் போவதில்லை. தவம் செய்யப் போகிறேன்'' என்றான் மயூரன்.

"என்ன மயூரா சொல்கிறாய்?" என்று புரியாமல் கேட்டார் கார்த்திகேசு.

"முனிவர்கள் எப்படிக் கடும் தவம் செய்து இறைவனிடம் வரம் வாங்கினார்களோ அதுமாதிரி நானும் காட்டுக்குப் போய் தவம் செய்து இறைவனிடம் நிறையப் பொற்காசுகளைப் பெற்றுவருவேன். பிறகு நாம் வசதியாக வாழலாம்'' என்றான் மயூரன்.

"மயூரா இதெல்லாம் நடக்கிற காரியமா? தவம் செய்வது சுலபமில்லை. நீ தவம் செய்யப்போய்ட்டா வயதான எங்களுக்கு யார் துணை? அதனால வேண்டாம்" என்றாள் தாய்.

"அதெல்லாம் பார்த்தா வசதியா வாழமுடியுமா? நான் காட்டுக்குப் போகத்தான் போகிறேன். தவம் செய்யத்தான் போகிறேன்'' என்று உறுதியாகக் கூறினான் மயூரன்.

இருவரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்காமல் கிளம்பிவிட்டான். ஊரைவிட்டுக் காட்டிற்குள் நுழைந்துவிட்டான். சுற்றிலும் மரங்களாய் தூரத்தில் மிருகங்களின் சத்தமுமாய் இருந்த காடு மயூரனுக்குப் பயத்தை உண்டாக்கியது. எனினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நடந்தான்.

அப்போது எதிரே ஒரு மூதாட்டி தலைமேல் விறகுக்கட்டை சுமந்துகொண்டு வந்துகொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் "யார் தம்பி நீ?" என்று கேட்டாள்.

''என் பெயர் மயூரன்'' என்றவன் தன்னைப்பற்றியும் தனது நோக்கத்தைப்பற்றியும் கூறினான். அதைக் கேட்டுவிட்டுப் பாட்டி கலகலவெனச் சிரித்தாள்.

"பாட்டி எதுக்கு சிரிக்கிறாய்?' என்று கோபமுடன் கேட்டான் மயூரன்.

"சிரிக்காம என்ன செய்யறது? சரி, நான் கேட்கிறதுக்குப் பதிலைச் சொல். நீ எதுக்காகத் தவம் செய்யப்போறே?" என்று கேட்டாள் பாட்டி.

''வசதியான வாழ்வு வாழறதுக்கு" என்றான் மயூரன்.

"எத்தனை வருசம் தவம் செய்வே?"

"பத்து வருசம் ஆனாலும் சரி கடவுள் வர்ற வரைக்கும் கடுமையா தவம் செய்வேன்.

"சரி கடவுள் வந்து எவ்வளவு பொற்காசுகள் வேண்டுமென்றால் எவ்வளவு கேட்பே?"

''ஆயிரம் பொற்காசுகள் கேட்பேன்"

" பத்து வருசம் கடுமையாத் தவம் செய்து பெறக்கூடிய காசுகளை அதே பத்து வருசத்தில கடுமையா உழைச்சும் சம்பாதிக்கலாமே. தவத்தில காட்டுற உறுதியை உழைப்பிலேயும் காட்டு. உழைச்சு வர்ற பணத்தில கொஞ்சம் கொஞ்சம் மிச்சப்படுத்தி இன்னும் அதிகமா நிலங்களை வாங்கு. வசதியா வாழலாம். உன்னுடைய அப்பா அம்மாவுக்கும் துணையா இருக்கலாம்'' என்றாள் பாட்டி.

மயூரன் யோசிக்கத் தொடங்கினான்.

"தம்பி உழைப்புத்தான் கடவுள். உழைப்பை நம்பினவர்கள் யாரும் கெட்டதில்லை. இதோ பார் நான் கூட இந்தக் காட்டில் விறகு பொறுக்கி ஊரில் வித்து அதில்தான் வாழ்கிறேன். சந்தோசமாக இருக்கிறேன்'' என்றாள் பாட்டி.

"உண்மைதான் பாட்டி. எனக்குச் சரியான நேரத்துல பாடம் புகட்டினீங்க நான் ஊருக்குப் போய் நிலத்துல உழைக்கிறேன்" என்ற மயூரன் பாட்டியுடன் ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

## வளம்

இயற்கை வளம்
இது எங்கும் நிறைந்த வளம்.
எங்கு திரும்பி அது
உன் விழியில் படும்.
உன்னை விரும்பிச் செல்லும்
உன் கேசம் வருடிவிடும்.
கோபம் வந்தால் சுழன்று அடித்து
உன்னைக் கொல்லும்
"காற்று" அது ஒரு வளம்.

மேடு பள்ளம் தாவிவரும்
காடு மலை தடவி வரும்.
இடிமின்னல் சீற்றத்தோடு வரும்
கோபம் வந்தால் உன்னை
சுழியில் கொண்டு செல்லும்
"நீர்" ஒரு வளம்.

மலையென உயர்ந்தும் பயனென்ன
தாழ்ந்தும் பரந்து நிற்கும்.
என்னை நவரத்தினம் தானியம்
என எமக்கு வாரித்தரும்.
கோபம் வந்தால் நடுக்கி எம்மை
தன்னுள் புதைக்கும்
"நிலம்" ஒரு வளம்.

-அ.நளாயினி
கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி.

அன்றுமல்ல இன்றும் கூட
மாறாமல் மனம் கொண்டவள்
பாரினில் இவள் புகழ்
பாடாதவர் யாருமில்லை.
உயிர் கொடுத்து உன்னத
வாழ்வு அளிப்பவள்.
எம் உதிரம் சிந்தும் வேளையும்
தன் உயிர் கொடுத்துக் காப்பவள்.
அவள் மனதைப் பூஜிப்போம்
என்றும் எம் வாழ்வு
அவள் மனம் போல் மலரும்.

-திபியா பரமானந்தம்
சங்குவேலி.

## நகைச்சுவை

"நம்ம மன்னருக்கு அதிகம் கிரிக்கெட் பைத்தியம்"

"ஏன்?"

"போர் என்று அறிவித்திருக்கும் எதிரி நாட்டு மன்னனிடம் ஒரு நாள் போட்டியாக வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டிருக்கிறார்"



சு. கௌரீஷன்

## வாரம் ஒரு குறள்



உணவின்றி உயிர் வாழ முடியாது உண்மை. ஆனால், அதிகளவில் உணவு உட்கொண்டால் அதுவே உடலுக்கு நோய்களை ஏற்படுத்தி நம்மை நோயாளி ஆக்கிவிடும்.

உணவும் கட்டுப்பாட்டுடன்தான் இருக்கவேண்டும். கட்டாயம் உட்கொண்ட உணவு சமிபாடு அடைந்த பின்னரே மீண்டும் உணவை நாட வேண்டும்.

நாமெல்லாம் உட்கொண்ட உணவு சமிபாடு அடைகின்றதோ இல்லையோ எந்த நேரமும் சாப்பிடுவதில் பிரியர்களாக இருக்கின்றோம். இதனால் நோய்தான் ஏற்படும் என்பது எமக்குப் புரிவதில்லை. ஏனெனில் உணவு என்பது எம்மைப் பொறுத்தவரை உயிர்வாழ வைக்கும் உயிர்நாடி என்பதே எமது நிலை.

ஆனால். குறைவாக உணவை உட்கொண்டால் எமக்கு நோய் ஏற்படாது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது இதனால்தான் போலும். இதனைத்தான்.....

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 28

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | கு | க | ர | ல் | சீ | வ |
| ண் | லை | சா | மா | தோ | ளை | த |
| பா | ன் | ம | ள | ணா | ப் | லை |
| ந | ம் | அ | சி | ல் | வ | சு |
| லி | பி | அ | செ | டு | ம் | ரீ |
| னி | தீ | மு | மி | கை | ப | தே |
| ரா | ம | லி | பு | ல | ன் | வீ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 26 இன் விடைகள்

01. மணல்.
02. கல்.
03. சீமெந்து.

01. தேங்காய்.
02. ஓலை.

### சொற்சிலம்பம் - 26 இன் பரிசுக்குரியவர்

செ.ஜனனி
தரம்-05
உருத்திரபுரம் மகா/வித்தி

### சொற்சிலம்பம் - 26 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ஜெ.தட்சாயினி, 04ஆம் வட்டாரம், கோம்பாவில்.
02. ப.விஜயசர்மிளா, தரம்-06, கிளி/பிரமந்தனாறு ம.வி.
03. ச.தனுசன், தரம்-09, மு/குமுளமுனை ம.வி
04. கி.பிரதீபன், முடக்காடு, கரவெட்டி.
05. தி.லோஜினி, கிளி/இராமநாதபுரம், கிழக்கு, அ.த.க.பாடசாலை.
06. எஸ்.கவினா ஐயன்குளம், அ.த.க.பாடசாலை.

01. கொடிப் பூக்கள்.
01) ....................................
02) ....................................

02. குடும்ப அங்கத்தவர்கள்.
01) ....................................
02) ....................................
03) ....................................


பெயர் :- ....................................

முகவரி :-....................................

....................................

சொற்சிலம்பம் - 28
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

## ஒரேமாதிரியான இரண்டு பொம்மைகளைக் கண்டுபிடியுங்கள்



கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. - தமிழ் பழமொழி

# புரிதலும் தெளிதலும்

## ஊரோடு உறவாடும் இவர்கள் யார்?

பாதைத்திறப்பு,சமாதானவருகை தடை செய்யப்பட்ட பொருட்களின் பாவனை என தளைகளின் முடிச்சுக்கள் பல விடுபட தாயகத்தின் உள்ளே வருகை என்பது விசாலித்து நிற்கிறது.

இப்போது ஒருவருகை எங்கள் செவிகளுக்குள் நுழைந்து நச்சு விதைகளை விதைக்கத் தொடங்கி விட்டது. அதுதான்''ஊரோடு உறவாடு''எனும் வானொலி ஒலிபரப்பு. இதன் வீச்சுஇப்போது தாயகத் தின் எல்லையின் விசாலித்து நிற்கிறது.

யார் இவர்கள்? இன்று ஊரோடு உறவாடு பவர்கள்?

நாம் இவர்களை புரிந்துகொள்வதோடு தெரிந்து கொள்வதும் அவசியம்.

இந்திய இராணுவக்காலத்தில் ஈ.என்,டி,எப் எனவும், த்திரிஸ்டார் எனவும் அழைக்கப்பட்ட தேச விரோத கும்பலின் வானொலியே இந்த ஊரோடு உறவாடு வானொலி ஒலிபரப்பு. இன்று எங்கள் மக்களோடும், ஊரோடும் உறவாட முனைபவர்கள் பரந்தன்ராஜன் என்றுஅழைக்கப்பட்ட இந்தத் திரிஸ்டார்கும்பலின் தலைவனின்கீழ் இப்போது லண்டனிலிருந்து இந்த வானொலி ஒலிபரப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

எமது மக்களால் பெருமளவு மறக்கப்பட்ட இந்த கும்பல் ரி.வி.சி.என்ற பெயரில் பெரிதும் எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்தியலை விதைத்துவந்தனர்.

தற்போது கிழக்கில் ஏற் பட்டிருக்கும் நிலைமை யைத் தமக்குக் கிடைத்த அவலாக இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் தொடர்பாக தாயக மக்களும், புலம்பெயர்ந்த மக் களும் விழிப்பாக இருப்பது அவசியம்.

எமதுவிடுதலைப்போரை அழிப்பதற்கு படையியல் ரீதியாக போரிட்ட அதேசமஅள வாக கருத்தியல் ரீதியாக எத்தனையோ படை எடுப்புக்களைமேற்கொண்டதை தமிழீழமக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

லங்காபுவத்,இராணுவப்பேச்சாளர், கூட்டுப்படைத் தலைமையகம், மக்கள்குரல்,வானம்பாடி, என நீண்ட பட்டியல் உண்டு.

இப்போது இந்த கும்பலிற்கான வரவுகளுக்கு மக் களின் தடைகள் எல்லைகளில் இருப்பதால் வான லைகளின் ஊடே ஊரோடு உறவாட அல்ல ஊரின் உறவைக்கெடுக்க முயற்சித்து வருகின்றனர்.

இத்தகைய ஒலிபரப்புக்கள் தொடர்பாக மக்கள் மிகவும் விழிப்பாக இருப்பது அவசியம்.

ஒரு விடுதலைப்போரின் ஆணிவேரைப் பிடுங்கி யெறிய இத்தகைய களைகளை எப்போதும் விடு தலையை விரும்பாத சக்திகள் பயன்படுத்த முனை வது வழமையே.

ஆனால் தாங்கள் சார்ந்த இனத்தின் விடுதலை யையே இந்த சக்திகள் அடியோடு அழிக்க துணைபோவது வெட்கக்கேடானது.

கருத்தியல் சுதந்திரம் என்பது எல்லோருக்கும் உண்டு. ஆனால் இந்தக்கருத்தியல் சுதந்திரம் என்ற பெயரில் உண்மைக்கு புறம்பான ஒரு பொய்மை யான மாய உலகிற்குள் மக்களைத் தள்ளிவிட முயல்வது மிகப் பெரிய மக்கள் விரோத செயல் என்பதை எவரும் புரிந்துகொள்வர்.

ஆகவே மக்களே இந்த புள்ளுருவிகளின் இந்த ஒலிபரப்புத் தொடர்பாக விழிப்பாக இருப்பது மிக அவசியம்.

ஒரு தெளிவுபெற்ற இனத்தைக்கூட கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழக்கச் செய்யும் வல்லமை பொருந்தியது இந்தகருத்து.

இதில் இந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியில் செயற்படும் ஊடகங்கள் எந்த இலட்சியங்களையும் இலக்கு களையும் வரையறைசெய்யாது ஒரு இனத்தைக் கெடுப்பதையே குறியாகக்கொண்டு இயங்கும் இத்தகைய குழுக்களின் கைகளில் சென்றடைந் திருக்கும் நிலையில் மக்கள் வழிப்பாகவே இருக்க வேண்டும்.

இது இந்த இனத்திற்கு அதிகபாதுகாப்பைத் தரும்.

**வேழினி**

---

### தொடர் - 11

கடைக்கார இளைஞன் கையில் ஒரு பெரிய கூடையைத் தந்துவிட்டுச் சொன்னான் 'ஃப்ரண்ட்' உங்களுக்குப் பிடித்தவற்றையெல்லாம் எடுத்து இதில் போட்டுக்கொண்டு வாருங்கள். பிறகு விலைபேசலாம். நீங்கள் பேரம் பண்ணலாம். எவ்வளவு கனக்க எடுக்கிறீர்களோ, அவ்வளவு மலிவாய்த்தருவேன்!...' இதைக்கேட்டதும், விட்டஆசை மீண்டும் தொட்டுக்கொண்டது. கூடை கொள்ளாமல், பிடித்தது எல்லாம் அள்ளிப்போட்டுக்கொண்டு முன்னால் வந்ததும், அவன் கணக்குக்கூட்டி, பிறகு கழிவும் சேர்த்து, சொன்னவிலை தலையைச்சுற்றியது. பத்தாயிரத்துச்சொச்ச ஷில்லிங்! எங்கள் காசில் கிட்டத்தட்டப் பதினைந்தாயிரம் ரூபாய்! ஒவ்வொன்றாய் மாற்றிமாற்றிக்கணக்குப்போட்டு, கடைசியில் மூன்று வாழைப்பட்டைச்சித்திரங்களையும் ஒரு கையளவு சிலையையும் இரண்டாயிரம் ஷில்லிங்கில் ஒரு மாதிரி கொண்டு வந்து நிறுத்தினேன்.



# (கென்யப் பயணக்கட்டுரை)

# காட்டு வெளியிடை

**சாந்தன்**

'எல்லா ரூரிஸ்களுக்கும் சொல்கிற விலையைத்தான் அவன் எங்களுக்கும் சொல்லியிருக்கிறான்! என்றார் விமுக்தி, பிறகு நாங்கள் போய்க்கொண்டிருக்கும் போது, ஆனால் இப்படியான வெவ்வேறு கடைகளில் விலைகள் மிகவும் மாறுபட்டதையும் பின்னர் நாம் அறிய முடிந்தது. இதே வாழைப்பட்டைச்சித்திரம் ஒன்று நறொக் அருகில் ஒரு கடையில் பாதிவிலைக்கு இருந்தது. எப்படியோ, கடைக்கார இளைஞன் ஒவ்வொருவரையும் 'ஃப்ரெண்ட்' 'ஃப்ரெண்ட்' என்று சந்தோஷமாகவே வழியனுப்பி வைத்தான். ஆனால் ஒன்று கென்யாவில் நாம் சந்திக்க நேர்ந்த சுதேசிகள் எல்லோருமே தடங்கலின்றி ஆங்கிலம் பேசினார்கள். கடைக்காரர்கள், விடுதிப்பணியாட்கள், ட்றைவர்கள், ஏன் மஸாய் இனத்து மாடு மேய்கிற சிறுவர்கள் கூட நன்றாக ஆங்கிலம் பேசினார்கள். அறுபதுகள் வரை பிரிட்டனின் குடியேற்ற நாடாயிருந்ததும், இப்போதும் ஆங்கிலம் ஸ்வாஹிலியுடன் கூட ஒரு உத்தியோக மொழியாக இருப்பதும் காரணங்களாக இருக்கவேண்டும். விசேஷமாகக்குறிப்பிடவேண்டிய இன்னுமொரு விஷயமென்னவெனில், அவர்களின் உச்சரிப்பு, அநேகமாக இலங்கையிலுள்ளவர்களின் ஆங்கில உச்சரிப்புப் போலவே இருந்ததுதான்.

கென்யாவில் ஆங்கிலமும், ஸ்வாஹிலியும் உத்தியோக மொழிகளாக இருப்பினும், ஸ்வாஹிலிக்கு 'தேசியமொழி' என்ற அந்தஸ்தும் மேலதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிந்தது. 'ஸ்வாஹீலீ' என்பது தொடக்கத்தில் ஒரு அரேபிய கிழக்காபிரிக்க கலப்புக்கலாசாரத்தைக்கொண்ட மக்கள் குழுக்களைக்குறிப்பிடப் பயன்பட்ட பெயராயினும் பின்னர் அவர்களுடைய மொழியின் பெயராக ஆகிற்று. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே முக்கியத்துவம் பெற்ற ஸ்வாஹிலி, இன்று கென்யாவில் மட்டுமன்றி, ஏனைய கிழக்காபிரிக்க நாடுகளிலும் வழக்கிலுள்ள ஒரு மொழியாகவும் அவர்களின் இணைப்பு மொழியாகவும் ஆகியுள்ளது. இன்று ஐந்துகோடி மக்களால் பேசப்படும் ஸ்வாஹிலியில் பல கிளைமொழிகளுமிருப்பதாகக் கூறுகிறார்கள். முன்னர் அரவிலிபியில் எழுதப்பட்ட இம்மொழி இன்று ரோமன் லிபியிலேயே எழுதப்படுகிறது. ஸ்வாஹிலி, ஆங்கிலத்திற்களித்த ஒரு முக்கியமான அதிகம் பயன்படுத்தப்படும் சொல், 'ஸஃபாரி' வேட்டைப்பயணம் அல்லது இலக்கு நோக்கிய பயணம் என்பது. கென்யாவைப்பொறுத்தளவில் அங்கு சரளமாக ஆங்கிலம் பேசிக்கொண்டிருந்தவர்களின் பேச்சில் கூட அவ்வப்போது ஒரு ஸ்வாஹிலித் தொடர்வலு சாதாரணமாக வந்து விழுந்துகொண்டிருந்தது. 'ஹகுணா மட்டாட்டா!' அதன் பொருளை அயூப் கூறியபோது இந்திய 'அமைதிப்படை'யின் நினைவு வருவதைத் தடுக்க முடியாதிருந்தது: நோ ப்ரொப்ளம்!

ஸ்வாஹிலியை விட, கிக்கியு, மற்றும் ஏனைய குழு மொழிகளும் கூட அங்கு பேசப்படுகின்றன. கென்யாவின் பெரிய இனக்குழுவான கிக்கியு, தேசியத்தலைவர்கள், மாவ்மாவ் புரட்சியாளர்கள் என்று பலர் மூலம் பரவலாக வெளியுலகில் அறியப்பட்டிருப்பினும் பின்னர் அதனை மீண்டும் உலக அரங்கின் கவனத்திற்குக் கொண்டு வந்தவர் எழுத்தாளர் ங்குகி வா தியங்கோ. ஏலவே ஆங்கிலத்தில் எழுதி உலகப்புகழ் பெற்றிருந்த தியங்கோ, பின்னர் ஆங்கிலத்தை விடுத்துத் தம் தாய்மொழியில் எழுதத்தொடங்கியதன் மூலம் இதனைச்செய்தார்.

இரண்டாயிரம் ஷில்லிங்குக்கு வாங்கிய பொருட்களைப்பத்திரமாய்ச்சுற்றி வைக்கும் போது கொஞ்சம் வருத்தமாய்த்தானிருந்தது, இவ்வளவு விலை கொடுத்தோமே என்று! இந்த விலைகள், ஐரோப்பிய, அமெரிக்க சுற்றுலாப்பயணிகளுக்குத்தான் கட்டுப்படியாகுமென்று தோன்றியது. ஆனால், விமுக்தி குறிப்பிட்டது போல, நாங்களும் சுற்றுலாக்காரர்கள் என்றே பார்க்கப்பட்டதால் போலும் இந்தக்கென்ய விலைவாசி எங்களை மிரட்டிக்கொண்டே வந்தது. மூன்றாவது நாள், மஸாய் மாறாவில், செல்வா ஒரு பல்துலக்கும் தூரிகை வாங்க வேண்டியிருந்த போது 385 ஷிலிங் கிட்டத்தட்ட 600 ரூபாய் சொன்னார்கள்! நறொக்கில் ஒரு புகைப்படச்சுருளை 450 ஷில்லிங்குக்கு வாங்க வேண்டியிருந்தது. கணக்க ஏன், மேலே குறிப்பிட்ட சாலையோரக்கடையில் தண்ணீர்ப் போத்தல்களை, ஒன்றரை லீற்றர் 150 ஷில்லிங் படி வாங்கினோம்: அதாவது ஒரு லீற்றர் எங்கள் காசில் 150 ரூபாய்!

'அதோ, அங்கே இருக்கிறது கென்ய மலை' அயூப் காட்டினார். தொடுவான் வெளியில் மேகங்கள் மட்டுமே தெரிந்தன, எங்களுக்கு ஆபிரிக்காவின் இரண்டாவது அதி உயர மலையை நோக்கிப் போவதென்றால், இன்னும் அதை அடைய ஒன்று, ஒன்றரை மணி நேரமே மீதமிருக்கும் இவ்வேளையில் ஒரு மலைப்பிரதேசத்தில் நாம் புகுந்திருக்கவேண்டுமே? ஒரு பக்கம் கிடுகிடு உயரங்களும், இன்னொரு பக்கம் திரும்பிப்பார்த்தாலே தலையைச்சுற்ற வைக்கும் அதல பாதாளங்களும், அடிக்கடி திரும்பும் கொண்டை ஊசி வளைவுப்பாதைகளும் ஏன் இன்னுந்தென்படவில்லை?

'நிச்சயமாக நாங்கள் கென்ய மலைக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறோம். இன்னும் ஒரு மணித்தியாலத்தில் அங்கிருப்போம். என்றார் அயூப். ஆனால் பிறகு, அந்த ஒரு மணித்தியாலம் கூட எங்களை ஏமாற்றித்தான் விட்டது. கென்யத் தரைஅமைப்பு அப்படி! ஏறுவதே தெரியாமல் ஏறியிருந்தோம். இலங்கை மலைநாட்டைக்கற்பனையில் கொண்டிருந்த எமக்கு, இது அதிசயமாக இருந்தது. ஆங்காங்கு சிறு குன்றுகளும், கூர்ந்த முகடுகளும் தென்பட்டனதான். என்றாலும் கென்யமலைகள் பெரும்பாலும் தலையணைகளை திண்டுகளை அருகருகே மெல்ல மெல்ல உயர்த்தி அடுக்கியமாதிரித்தான் தெரிந்தன. பெருமரங்கள், பாறைகள் என்றில்லாமல், மணலைக்குவித்து, கையால் தட்டி மழுப்பியமாதிரி ஒரு அமைப்பு! மலை முகட்டிலிருந்து எல்லாப்பக்கமும் ஒரே சீராய் சரிகிற மாதிரி. வானிலேயே அந்த உச்சியில் ஏறிவிடலாம் மாதிரியும், பிறகு இறங்கி, அந்தச்சரிவில் அப்படியே இறங்கி ஓடிவரலாம் போலவும் ஆசையைத் தூண்டும் மலைகளே எல்லையற்று எங்கும் பரந்து கிடந்தன. இந்த அமைப்பை நாங்கள் போன நக்குறு, நறொக், மஸாய் மாறா, நய்வாஷா, என்ற எல்லா இடங்களிலுமே பின்னர் அவதானிக்க முடிந்தது. என்றாலும், கென்ய மலையில் உயரப்போகையில் இது கொஞ்சம் மாறவே செய்தது. சிறு பற்றைகள், புற்றரைகள் மறைந்து, பெருமரங்கள் தோன்றத்தொடங்கின-தோப்புகள் போல, காடுகள் போல இடைக்கிடை சோள வயல்கள், அன்னாசித்தோட்டங்கள், கோப்பித்தோட்டங்கள் என்றும் வந்து போயின.

(தொடரும்)

# இனிய தமிழே வாழ்க



முத்தமிழே உனக்கு முதல் வணக்கம்,
மூவேந்தர் போற்றி வளர்த்த இறைத் தமிழே வாழ்க!
பாவேந்தர் பாவால் உனைக் காத்த நற் தமிழே வாழ்க!
கலப்பில்லாமல் தனித்துவமாய் நிமிர்ந்து வளரும் இனிய தமிழே வாழ்க!
குறளமுதாய் தித்திக்கும் தேன் தமிழே நீ வாழ்க!
இறை குறை காணாத செந்தமிழே வாழ்க!
எதற்கும் இணையான தமிழே!
எம் மொழிக்கும் முதன் மொழியான
இனிய தமிழே வாழ்க! - உனை
அழிக்க நினைக்கும் கயவரால் எத்தீங்கெட்டாமலும்
பொங்கு தமிழாய் நீ உயர வாழ்கவே!
உன்மேல் எனக்கோர் துடிப்பு - அதனால்
என்றுமே அழியாத உன் நினைப்பு
எப்போதும் உனக்கு வரும் தனிச் சிறப்பு
எவ்வெப்போதும் உனக்குண்டு அழியாத மதிப்பு.

ந.நவலோகன்
இராமநாதபுரம்.

# சமாதானம் நிலைக்குமா

தாய்மடியில் பிறக்கின்ற மழலைகள்
தலைநிமிர்ந்து வாழ்ந்திட.....
துயர்நிறைந்த வாழ்க்கையில்
துடிக்கின்ற தமிழினம்
துளிர்விட்டெழுந்து புதுயுகம்
படைத்திட.....
சுகத்தோடு சுதந்திரமாய்
தமிழ் நெஞ்சங்கள் வாழ
சமாதானம் நிலைக்குமா....
பட்ட துன்பம் பறந்தோடி
பௌர்ணமி எம் வாழ்வில் தோன்ற
சமாதானம் நிலைக்குமா.......


தமிழ்மதி.க.முருகானந்தன்
உடையார்கட்டு.

# தாய்

மலர் பொய்கையில்
மலர்ந்தவள்
மாதங்கள் பத்து
எம்மைச் சுமந்தவள்
பாலூட்டி எமைக் காத்தவள்
மலர் தூவி
வணங்க வேண்டியவள்.
மறு பிறவி எடுக்க முடியாதவள்.
(தாய்)

சி.மகேந்திரகுமார்
கிளிநொச்சி.

# வெறும்* மேடைப்* பேச்சு




சாதி இரண்டென்று சாற்றிய பலரை
நான் மேடையில் தான் கண்டேன்.
ஓதியோதியே உட்பகை வளர்த்து
உருக்குலைந்த சமூகங்கண்டேன்.
நாதியற்ற இம்மாந்தரிடை
நாறுமிச் சாதி கண்டேன்.

பாதிக் காதல் பலபேரிடையே
சாதியாலழியக் கண்டேன்
பேசிடும் திருமணத்தில் தரகர்
முறையாய் கூறிடும் சாதி கண்டேன்.
ஏசிடும் வாய் சண்டையிலே
அதிர ஏசி வரும் சாதி கண்டேன்.
விருந்துக்குப் போயின் அறிந்திட
முன்
அருந்திடாச்சாதி கண்டேன்.

இத்தனையும் நான் கண்டேன்
எங்களிச் சமூகங்களுள்
அத்தனையும் நோக்கின் ஈர்பத்து
சாதிதேறும்-மேடையில்
சாற்றிடுமச் சாதியிரண்டுமெங்கே??

சுபா ஜெகநாதன்.

# மலரட்டும் மண்வளம்



பசுமை நிறைந்த அந்த நாட்கள்
பாடித்திரிந்த அந்தப் பொழுதுகள்
கூடிப்பழகிய அந்த நினைவுகள்
மண்ணிலே ஆழமாய் வளரும் விருட்சங்களே.

மழையாகிப் பொழிகின்ற மழை நீரும்
அலையாகி வந்து ஆதரிக்கும் கடல்நீரும்
சிந்தனையினை மயக்கும்-கண்ணீரும்
ஒரு போதும் பணிவாக எம்மிடம்
வருவதில்லை.

பலதுணைகள் இருந்தாலும்-ஒரு
நேரப் பசியினைத்தான் போக்க முடியும்.
ஆனால்
நம் கரமுள்ளவரைக்கும் மண்வளம்
செழிக்கும் வரைக்கும் நாம்
பணிவாக உழைத்திடுவோம்
உழைக்கட்டும்-உங்கள் கரம்
மலரட்டும் தமிழன் சுதந்திரம்
விடியட்டும் மனித கரங்கள்.

சு.நிலா

## சுதந்திரம்

இதுவரை
என் உண்டியலில்
விழாத செல்வம்.

## கண்ணீர்

மிதித்த
பாவங்கள்
கழுவும் கங்கை.

## நினைப்பு

தும்மித் தும்மி
இழைத்துப் போகிறேன்.
இரக்கமில்லா
அவள் மனசு.

## பெண்கள்

திரியைத் தொலைத்த
விளக்குகள்.

கு.தவசீலன்

# ஊக்கமாத்திரை

ஊக்கமாத்திரைப் பகுதியில் வெற்றி, வெற்றி தொடர்ந்து எழுதப்படுகிறதே, இந்த வெற்றி எதைக் குறிக்கிறது, நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

நிச்சயமாக யோசித்திருப்பீர்கள்.


படிப்பில் முன்னேறிப் பட்டம் பெறுவது, பதவியில் மேலோங்குவது, விளையாட்டில் சாதனை புரிவது, ஏதாவது ஒரு துறையில் புகழ் ஈட்டுவது, பெரும் பணக்காரன் ஆவது, நினைத்ததை நிறைவேற்றுவது இப்படி எல்லாம் யோசித்திருப்பீர்கள்.

இவைதானா வெற்றி?

இல்லை என்று நான் சொன்னால் நீங்கள் சண்டைக்கு வரக்கூடும். ஆம், இவை வெற்றிகள்தான். ஆனால், இறுதி வெற்றியின் இலக்கு இவைகளல்ல.

## வெற்றி என்பது எது?

வாழ்வில் உண்மையான வெற்றி என்பது ஆனந்தமயமான, அமைதியான வாழ்க்கைதான். இதிலே கிடைக்கும் நிம்மதியும், சுகமும் தான் வாழ்வில் பூரண வெற்றியை நிர்ணயிக்கிறது. ஆம்! வாழ்வில் எதை அடைகிறோம் என்பதை விட, நாம் அடைந்தவை நமக்கு இன்பம் அளிக்கிறதா என்பதுதான் முக்கியம்.



வாழ்க்கை என்பது ஒரு கலை. கலை இலக்கிய வடிவங்களைப் போலவே அழகுணர்வு வாழ்க்கைக்கு இன்றியமையாதது. எமது வாழ்வை ரசிப்புள்ளதாக, அழகுள்ளதாக அமைத்துக்கொண்டால்தான் வாழ்வு இன்பத்தைக் கொடுக்கும்.

நாம் எதைச் செய்தால் எமது வாழ்வு வசந்தமாய் இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ளாமல் வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது. இல்லாவிட்டால் திராட்சைப் பழத்திற்கு எட்டி எட்டிப் பார்த்த நரியாகிவிடுவோம்.

வாழ்க்கையின் வெற்றி என்றுஎதை நினைக்கிறீர்கள்? ஆம்! மகிழ்வான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதுதான் வாழ்க்கையில் இறுதி வெற்றியாகும். மனநிறைவே வெற்றியின் அளவுகோல்.

எமது வாழ்க்கைக்கு எமது ஆற்றலை அறிந்து நாமே எல்லை வகுத்துக்கொண்டால், வாழ்வு சுவையாகும். தவறான இலக்கை ஏற்படுத்திக்கொண்டால் வெற்றியை எட்டாமல் விரக்தி ஏற்பட்டு வாழ்வில் தோல்வியடைகிறோம். ஆம்! வாழத்தெரியாத காரணத்தினாலேயே பலர் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டு விடுகிறார்கள்.

பெரும் பணத்தை ஈட்டி நிம்மதியும் ஓய்வுமின்றி வாழ்வதைவிட, ஒரு சாதாரணமான ஏழைக்குடியானவனாக குடும்பத்தோடு கூடிக்குலாவி மகிழ்வாக அன்பைப் பொழிந்துகொண்டு இன்பமாய் வாழ்வது மேலானது.

இன்று எமது இளைய தலைமுறையினர் பலர் மனைவி மக்களைப் பிரிந்து தூர தேசம் சென்று ஓய்வு ஒளிச்சலின்றிப் பணம் ஒன்றே குறிக்கோளாக வாழ்வது வாழ்வின் வெற்றி அல்ல. இவர்கள் எல்லாம் பணத்திற்காக வாழ்வின் வெற்றியைத் தொலைத்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். இப்படி வாழ்வது என்ன வாழ்க்கை? இதற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? கொஞ்சம் சிந்தியுங்கள். வெற்றி எதுவென்று தெரியும்!

—டாக்டா.ச.முருகானந்தன்

# குறுக்கெழுத்துப்போட்டி - 63

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | |
| | 09 | | | | | 14 |
| 15 | | | | | | |
| | 23 | 24 | | | 27 | |
| | | | 32 | | | |
| 36 | | | 39 | | | |
| | | 45 | | | | |

பெயர்:-.......................................
முகவரி:-.......................................
...............................................
...............................................

**இடமிருந்து வலம்**

01. தற்போது நினைவுகூரப்படும் தியாகி.
09. காடு.
15. நிலா குழம்பியுள்ளது.
23. பிழை.
27. பசுவில் இருந்து பெறப்படுவது.(மாறியுள்ளது)
32. தந்தையின் பெண் சகோதரி (மாறியுள்ளது.)
39. பாதை.
45. நீர் அள்ளப் பயன்படுவது.

**மேலிருந்து கீழ்**

01. மன்னன்.
06. சூழ்ச்சி தலைகீழாக உள்ளது.
09. சீதனம்.
14. தேர்தலில் போட்டியிடுபவர்.
24. திசைகளில் ஒன்று.
36. அநீதிக்கு எதிரானது..

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

## குறுக்கெழுத்துப்போட்டி இல.61 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஆபரணம்.
09. கிழமை.
13. ஈகை.
16. அரவம்.
26. அலை.
30. கணபதி.
43. பூ.
46. விமானம்.

**மேலிருந்து கீழ்**

01. ஆண்டவன்.
02. பகிரங்கம்.
07. தங்கை.
17. வண்ணம்.
33. விபூதி.
32. பழம்.
41. மாதா.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.63
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.61 இன் பரிசுக்குரியவர்**
**சி.சாந்தகுமார்,**
**இல, 111/1,**
**ஐயனார்புரம்,**
**வன்னேரிக்குளம்.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.61 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

01. வே.தமிழ்ச்செல்வி, மு/புதுக்குடியிருப்பு, மகாவித்தியாலயம்.
02. த.சங்கீதா, கந்தரோடை, சுன்னாகம்.
03. இரத்தினசிங்கம் மேகலா, மு/பாரதி வித்தியாலயம், விசுவமடு.
04. லா.விஜயசேகரன், இல.65, அண்ணாவீதி, தோணிக்கல், வவுனியா.
05. ஆசீர்வாதம் அகிலா வலையன் மடம், முல்லைத்தீவு.
06. வே.குமாரசுவாமி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

# துயரம் தோய்ந்த கதைகளின் வெட்கம்

# பாடசாலை நூலகங்கள்

**"வளரும் பயிரை முளையிலேயே தெரியும்;**

என்பார்கள் பாடசாலைக் 'காலத்தில் ஒருபிள்ளை எப்படியெல்லாம் இயங்குகின்றது என்பதைவைத்தே அப்பிள்ளையினுடைய இயல்பையும் எதிர்காலத்தையும் ஓரளவுக்கு கணித்து விடலாம் என்பார் என்நண்பரான ஆசிரியர் ஒருவர்.

பலருடைய வாழ்வில் சந்திக்கின்ற நல்ல ஆசிரியர்கள் அவர்களுடைய வாழ்வைச் செம்மையாக உருவாக்கிய நல்லறிஞர்களாகவே இருக்கின்றனர்.

கற்பித்தலுக்கு அப்பாலான-பாடத் திட்டத்திற்குள் மட்டும் நில்லாது விரிந்த அறிவையும் பரந்த உலகையும் நல்லாசிரியர்கள் மாணவர்களுக்கு காண்பிக்கிறார்கள். இதில் ஓரம்சம் அல்லது முக்கியமானது. மாணவர்கள் நூலகத்தைச் சரியாகவிளங்கிக்கொள்ள உதவுவதும் அதனை சரியாகப்பயன்படுத்த உரியமுறையில் வழிகாட்டுவதும்தான்.

நூலகத்தின் சிறப்பையும் அதனைப் பயன்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் ஒருஆசிரியர் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களை அதில் ஈடுபடவைத்தால் அந்த மாணவர்கள் பின்பு தன்னியல்பாகவே அறிவியற் தளத்தை நோக்கி நகரத்தொடங்கிவிடுவார்கள்.

வாழ்வில் அறிவியற்தளத்தில் இயங்கிய பலருடைய அனுபவங்களையும் திறன்களையும் பார்த்தால் அவர்கள் இளமையிலோ அல்லது பின்னரோ நூலகங்களை சரியாகப் பயன்படுத்தியவர்களாகவே இருப்பதைக்காணலாம்.

எந்தத்துறையில் பிரகாசித்தவருடைய வாழ்வைக்கவனித்துப் பார்த்தாலும் நூலகம் என்பது பலருடைய திறன் வெளிப்பாட்டிற்குக் கணிசமாக உதவியதைத் தெரியலாம்.

அநேகமானவர்கள் பாடசாலைக் காலத்திலேயே நூலகங்களைப் பயன்படுத்தி தங்களுக்குரிய சரியான திசையையும் தெளிவான வழியையும் கண்டுவிடுகின்றார்கள்.

ஒரு ஆய்வு கூடத்துக்கு நிகரானதும் அதனைவிடப்பல அம்சங்களிலும் விரிவும் ஆழமும் கூடியதுமாகஇருக்கிறது ஒரு நூலகம்.

இதனால் தான் உலகெங்கிலுமுள்ள பாடசாலைகளில் நூலகத்தை அமைக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள் எல்லோரும்.

எங்களின் பாடசாலைகளில் அரைவாசிக்குக் கிட்டத்தட்ட நூலகத்தையும் கொண்டிருக்கின்றன. அரைவாசிக்கு கிட்டவானவை நூலகம் இல்லாதவை.

என்னதான் நியாயங்களையும் காரணங்களையும் எவர்தான் சொன்னாலும் நூலகம் இல்லாத பாடசாலைகளை நாம் வைத்திருப்பது வெட்கக்கேடானதே. அறிவை வளர்க்கும் நோக்கை பாடசாலைகள் கொண்டிருப்பதென்றால் அதில்முக்கியமானது நூலகம்.

ஒருவகுப்பறையில் கற்பிக்கப்படும் விடையங்களைவிட ஒருநூலகத்தில் கற்கும் விடையங்கள் அதிகமானது. அதேவேளை நூலகத்தில் சுயாதீனமாகவும் சுயதேர்வின் அடிப்படையிலும் கற்கும் சுதந்திரவெளி நூலகத்தில் வாய்க்கிறது.இதனால் அறிவின் விரிகோடு மிக நன்றாக விரிந்து அகலித்துச் செல்கிறது.


ஒருமாணவர் அதிகளவு நேரத்தை நூலகத்தில் செலவழிக்கிறார் என்றால் நிச்சயமாக அவர் தனக்குரிய எதிர்காலத்தை பிரகாசமாக்கத் தொடங்கியிருக்கிறார் என்றே கூறவேண்டும்.

அரைவாசிக்கு மேலான நூலகங்கள் இருக்கும் பாடசாலைகளில்கூட ஒழுங்காக அந்த நூலகங்கள் இயங்குவதில்லை இதற்கு சான்றுகளாகவும் உதாரணங்களாகவும் நிறைய நூலகங்களை எல்லாப்பிரதேசங்களிலும் காணலாம்; காட்டலாம்.

பலபாடசாலைகளில் 'நூலகம்' என்று ஒன்றிருக்கிறது என்ற உணர்வே அந்தப் பாடசாலையில் இருக்கும் பொறுப்பானவர்களுக்கோ மாணவர்களுக்கோ இருப்பதில்லை.

எப்போதாவது மாகாணசபையின் கல்விஅமைச்சில் இருந்தோ அல்லது யுனிசெப் ஜி.ரி.சற் போன்ற தொண்டர் நிறுவனங்களிலிருந்தோ அல்லது ஆர்வமுள்ள பிறரிடமிருந்தோ வழங்கப்படும் புத்தகங்களை சம்பிரதாயமாக வாங்கி நூலகமொன்றை உருவாக்கிவிட்டு அப்படியே அதைப்பிறகு கைவிட்டு விடுகிறார்கள்.

சிலபாடசாலை நூலகங்களில் தனியாகவும் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இது பாராட்டப்படவேண்டியது. இவ்வாறுகொள்வனவு செய்யப்படும் புத்தகங்கள் எல்லாம் நல்லதேர்வுக்குரியவையா; பெறுமானமுள்ளவையா என்று நீங்கள் யாரும் கேட்கக்கூடும் எல்லாம் சரியென்று சொல்லமுடியாவிட்டாலும் ஓரளவுக்கு இதனைப்பாராட்டலாம்.



ஆனால் அதை-அப்படி கண்டதையெல்லாம் கொள்வனவுசெய்து நிரப்பும் செயலை தொடர்ந்தும் அனுமதிக்கக்கூடாது.

பல பாடசாலைகளின் நூலகங்களில் நூலகப்பதிவின்படி புத்தகங்கள் இருப்பதில்லை சில பாடசாலை நூலகங்களில் பதிவுகளே ஒழுங்காக இல்லை . இவ்வளவுக்கும் நூலக உத்தியோகத்தர்கள் அங்கெல்லாம் இருக்கிறார்கள். இதனை விடப்பட்டதாரித்தராதரத்துடன் நூலகப் பதவிக்கு விண்ணப்பங்கள் கேட்கப்பட்டு அந்த நியமனங்கள் சிலருக்கு கிடைத்திருப்பதாகவும் தகவல். இவ்வாறு பட்டதாரி நூலகர் பதவியிலுள்ளவர்களுக்கு பிரத்தியேகமாக நூலகர் பயிற்சி நெறி உருவாக்கப்படும் என்று கடந்த வருடத்தில் ஒரு பகிரங்க அறிவித்தல்கூட வந்திருந்தது.

அரசின் இந்தத் திட்டம் நூலகங்கள் பாடசாலைகளில் சிறப்பாகவும் செழிப்பாகவும் இயங்கவேண்டுமென்பதையே காட்டுகிறது. தவிர பட்டதாரி நூலகர்களில் தேர்வுசெய்யப் படுபவர்களுக்கு வெளிநாடுகளின் நூலகப் பயன்பாட்டையும் அங்கே சில மாதப் பயிற்சிகளையும் இத்திட்டத்தில் அறிமுகப்படுத்துவதெனவும் கல்வி அமைச்சின் அறிவித்தல் இருந்தது.

ஏற்கெனவே உள்ள நூலக உத்தியோகத்தர்கள் இப்போது இருக்கும் நுலகங்களையே சரியாக இயங்கவைக்கமுடியாமல் திணறுகிறார்கள். சிலருக்கு நூலகத்தின் பெறுமதியோ நூலகத்தைப்பற்றிய அறிவோ கிடையாது. மன்னிக்கவும் இது உண்மைநிலை.

**வெளிவாசல் பாலன்**

ஏனெனில் ஆர்வமுள்ளவரின் கையில்-பொறுப்பில் ஒருநூலகம் இருந்தால் அந்த நூலகம் அப்பாடசாலையின் மிகப்பெரும் பெறுமதிமிக்க சொத்தாக இருக்கும். அத்துடன் காலத்தைக்கடந்த, நீட்சிபெற்ற பங்களிப்பை வழங்கியவராக அந்த நூலகரும் அந்த நூலகமும் இருக்கும்.

சில நூலகங்களும் சில நூலகர்களும் இப்படி எங்கள் சமூகத்தில் இருக்கிறார்கள். ஏன் சிலர் இன்னமும் அப்படி ஓரிரண்டு இடங்களில் இன்னும் இருக்கிறார்கள்தான்-ஒரு வழிகாட்டியாக, திசையறி கருவியாக மூன்றாவது கண்ணாக.

ஒழுங்கற்ற முறையில் சிதைந்து கிடக்கும் நூலகங்களில் புத்தகங்கள் தொலைந்து விட்டன. சிலநூலகங்கள் திறக்கப்படாமலேயே இருக்கின்றன நூலக உத்தியோகத்தர்களில்லாத பாடசாலைகளிலுள்ள நூலகங்களுக்கு அப்பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் ஒருவர் பொறுப்பாக இருக்கின்றார். இது ஒரு பொது வழமை அப்படியான நூலகங்களும் திறக்கப் படுவதில்லை.

இவ்வளவுக்கும் நூலகங்களை திறம்பட இயங்கவைப்பதற்கு புத்தகங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. புத்தக அடுக்கிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இடவசதிகூட ஓரளவுக்குச் செய்யப் பட்டுள்ளது. தனியாக உத்தியோகத்தரும் உண்டு.


இந்த உத்தியோகத்தர்களை சில பாடசாலைகளில் அலுவலக எழுதுவினைஞர்களாகவும் அலுவலக உதவியாளராகவும் தட்டெழுத்து தெரிந்திருந்தால் தட்டெழுத் தாளராகவும் வைத்திருக்கிறார்கள்.

வன்னியில் கடந்த மூன்றாண்டுகளில் நடாத்தப்பட்ட நூலகம் பற்றிய கருத்தமர்வில் ஒரேயொரு தடவை மட்டும் -மல்லாவியில் நடந்த கருத்தமர்வில் மட்டும்-நூலக உத்தியோகத்தர்களாகிய தாம் கலந்துகொண்டோம் மற்ற எதற்கும் தமக்கு அழைப்பிருக்கவில்லை என்றார். ஒருபாடசாலையின் நூலக உத்தியோகத்தர்-கவலையுடன்.

பின்னர் நடந்த கருத்தமர்வுக்கு யாராவது ஒருஆசிரியரைப் பிடித்து அனுப்பி விடுகிறார்கள் என்று குறைபட்டார் இன்னொரு நூலகர்.

பல சிரமங்களின் மத்தியில் தாங்கள் முயன்று நூலகத்தை மேம்படுத்தினாலும் பாடசாலையில் ஏனைய தரப்பினர்களால் அதற்கு எந்த உதவியும் ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை என்பதும் இந்த நூலக உத்தியோகத்தர்களின் கவலை.

பிள்ளைகள் பாடசாலையைவிட்டு வெளியேறும்போதும் இடம்மாறும்போதும் நூலக உத்தியோகத்தருக்கும் அறிவித்தால் சிறப்பு.




ஒருபிள்ளை நூலகமொன்றில் எடுத்த புத்தகங்களைத் திருப்பி ஒப்படைக்காமல் எந்தப் பொறுப்புமின்றி அனுப்பப்படுவதால் புத்தகங்கள் தொலைந்துபோகின்றன.

நூலக அபிவிருத்தி தொடர்பான கருத்தமர்வுகளுக்கு தாம் சென்று வந்தால்தான் தம்மால் இன்னும் இன்னும் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நூலகத்தைப் பராமரிக்கமுடியும். என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் நூலக விஞ்ஞானம் பற்றிய கல்வியில் பயிலுவதற்கு தனிப்பட்ட ரீதியில் முயற்சித்தபோதுகூட அதற்கு அனுமதியோ ஒத்துழைப்போ வழங்க மறுத்து விடுகிறார்கள் என்று சில ஆர்வமுள்ள நூலகப்பணியாளர்கள் சொன்னார்கள்.

இவற்றைவிட நூலகத்திற்கு வாங்கிப் போடும் புத்தகங்களில் 'பாஸ்பேப்பர்'களும் அடங்கிவிடுகின்றன. பெரும்பாலும் பாஸ்பேப்பர்களைத்தான் நூலகங்களுக்கான முக்கியமான நூல்களாகக் கருதும் போக்கு இருப்பதையும் கவனிக்கவேண்டும். பாஸ் பேப்பர் தவறினால், பயிற்சிப் புத்தகம் இருக்கும். இது திரும்பத் திரும்ப ஒரு சுற்று வட்டத்துள் வாசிக்கும் மாணவர்களைத் தேக்கியே வைத்திருக்கும். இவ்வாறான குறுகிய நோக்கங்களினால் தான் இந்தப் பிள்ளைகள் வளர்ந்த பிறகும் கூட குறுகிய மனப்பாங்குடனும் வெளியறிவு குறைந்தும் வாழவேண்டியிருக்கிறது.

பொது வாசிப்புக்கு ஒரு பிள்ளை போகுமென்றால் அது அந்தப் பிள்ளையின் பரீட்சைப் பெறுபேறுகளைப் பாதித்துவிடும் என்ற தப்பெண்ணம் சில ஆசிரியர்களிடமும் அநேகமான பெற்றோரிடமும் இருக்கிறது. ஆனால், உண்மையில் தேர்ந்த பொது வாசிப்பு என்பது ஒருவரை எந்த இடத்திலும் வெற்றியாளனாகவே வைத்திருக்கும். பன்முக அறிவும் ஆளுமையும் அனுபவச் செறிவும் அதனூடாக ஒருவருக்குக் கிடைத்துவிடுவதால் அவர் எப்போதும் வெற்றியாளனாகவே இருக்கிறார். நற்பண்பும் நல்மனவிரிவும் இவருக்கு வாய்த்து விடுகிறது.

கல்விக்கு முதன்மையளிக்கும் பெரு விருப்பம் கொண்ட சமூகமாக இருக்கும். நாம், மெய்யாகவே அறிவு விருத்தியை விரும்புவோமாக இருந்தால் அதன்முதல் அடையாளமாக எங்கள் சூழலில் உள்ள நூலகங்களை துலங்கவைப்போம்.

பிள்ளைகளுக்கு அன்பளிப்புப் பொருட்களாகவும் ஞாபகப் பொருட்களாகவும் எவ்வளவையோ எவையெவையெல்லாவற்றையுமோ வாங்கிக்கொடுக்காமல் புத்தகங்களை வாங்கிக் கொடுப்போம். ஒவ்வொருபிள்ளையும் தன் சர்பாக ஒவ்வொரு நூலை நூலகத்துக்கு வழங்கினாலேயே நூலகம் வளம்பெற்றுவிடும்.


நூலக உத்தியோகத்தருக்குரிய அறிவையும் அவருக்குரிய பொறுப்புக்களைச் செய்வதற்குரிய ஒழுங்குகளையும் செய்தாலேயே பல படிகளைத்தாண்டி முன்னே சென்றுவிடுவோம்.

நல்லறிஞர் நூல்கள், சுயசரிதைகள், துறைசார்ந்த புத்தகங்கள்,இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம், தத்துவம், வரலாறு, அரசியல் என்றெல்லாம் எத்தனையை ஒரு மனிதன் தன் வாழ்வில் சந்திக்கவேண்டியிருக்கிறது. அதை அவனுக்கு வழங்குவது நூலகங்களே..

அகிம்சை, பலவீனமானவர்களின் ஆயுதமல்ல; வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம். - மகாத்மாகாந்தி

# அமெரிக்க உயர் தொழில்நுட்பத்துக்கு பலியான ஹமாஸ் அமைப்புத் தலைவர்

புலிகளைவெல்வதற்கு எந்தச் சாத்தானுடனும் கூட்டுச்



சேரத்தயார்" என்று ஜே.ஆர். கூறிய பொழுது அவர் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேலை மனதில் வைத்துத்தான் கூறினார். "பத்து பொதுமக்களை கொன்றால் ஒரு புலியாவது சாவான்" என்று ஜே.ஆருக்கு "ஓதிக்கொடுத்ததும்" இதேஇஸ் ரேல் தான். ஆனால் இன்றைக்கு இதிலிருந்து பலபடி முன்னேறி அரபு தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களை துல்லியமாக தேடி அழிப்பதன் மூலம் பயங்கரவாதத்தை ஒழிக்க இஸ்ரேல் உறுதிபூண்டிருப்பது போல்தெரிகிறது.

2004ஆம் ஆண்டு மார்ச் 23ம் திகதி திங்கள் அதிகாலை காஸா நகரில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் இருந்து ஒரு வெள்ளைநிற முச்சக்கர நாற்காலி மெதுவாக வெளியே வருகிறது. சிறுவயதில் நிகழ்ந்த விபத்தில் ஊனமுற்று சக்கர நாற்காலியிலேயே தன்வாழ்வைக் கழித்த ஒருவர் அதில் அமர்ந்திருக்கிறார். திடீரென அந்த நாற்காலியை நோக்கி மூன்று ஏவுகணைகள் சீறி வருகின்றன. அவை வெடித்து கிளம்பிய தூசும் புகையும் அடங்கிய போது, அந்த நாற்காலியில் அமர்ந்தபடி வந்துகொண்டிருந்த அந்த 67 வயதுக்காரர் பிணமாக கிடந்தார். குருதிதோய்ந்த அவரது சக்கர நாற்காலியின் பகுதிகள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அந்த பெரியவருக்கு மெய்ப்பாது காவலர்களாக வந்த இருவர் உள்ளிட்ட மேலும் நால்வரும் உயிரற்றுக்கிடக்கின்றனர். 15பேருக்கு மேல் அப்பாவிப் பொதுமக்கள் காயங்களுடன் முனகிக்கொண்டிருந்தார்கள்.

இறந்துகிடந்த அந்த ஊனமுற்ற முதியவரின் பெயர் ஷேக் அஹமட் யாசீன். அவர் தான் ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர்.

ஷேக்யாசீரில் படுகொலையை பயங்கரவாத அமெரிக்க நிர்வாகம் பச்சைக் கொடி காட்டாமல் சியோனிஸவாதிகள் நடத்தியிருக்கமாட்டார்கள் என்று முழங்கியிருக்கிறார் ஹமாஸ் இயக்கத்தின் காஸாபகுதி அரசியல் தலைவர் அப்துல்லா ஸிஸ் ரண்ரிஸி "இந்த கொலைகாரருடன், இந்தக் குற்றவாளிகளுடன் ,இந்தப் பயங்கரவாதிகளுடன் இப் போதிருந்தே போர்ப் பிரகடனம் செய்யப்படுகிறது. இது பழிவாங்கல் அல்ல. இது ஒரு திறந்தபோர்" என்று அவர் கூறியிருப்பதற்கு சிகரம்வைத்தால்போல், ஹமாஸ் இயக்கத்தின் ஆயுதப்பிரிவான எஸெடீன் அல்குவாசாம் பிறிகேட்டினர், பதிலடியாகநூற்றுக் கணக்கான இஸ்ரேலியர்களை கொல்லப் போவதாக சபதம் எடுத்திருக்கிறது.

இஸ்ரேலுக்குள் இடம் பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பின் இஸ்லாமிய தீவிரவாதிகளை தேடி அழிக்கும் முயற்சியை தீவிரப்படுத்தப் போவதாக இஸ்ரேல் அறிவித்திருந்தது.


2000ம்ஆண்டு செப்ரெம்பரில் பலஸ்தீனர்களின் 'இன்றிபாடா' எதிர்ப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டபின் நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதில் ஷேக் யாசீன் வகித்த பங்குக்காக அவர் கொல் லப்பட்டது நியாயம் தான் என்று இஸ்ரேலிய பிரதிபாதுகாப்பமைச்சர் ஸீவ் பொய்ம் இப்படுகொலையை நியாயப்படுத் தியிருக்கிறார். பலஸ்தீனிய தலைவர்கள் மீது மேலும் தாக்குதல்கள் நடக்கும் சாத்தியம் உள்ளது என்று கூறியிருக்கும் அவர், "எந்தப் பயங்கரவாதத் தலைவரும் தப்பமுடியாது'' என்றும் சூளுரைத்திருக்கிறார்.

சாதாரணமாக ஒரு ஹெலி தானாக இலக்கெடுத்து தாக்கும் பொழுது இவ்வளவு துல்லியத்தன்மையுடன் தாக்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். அப்பிடியானால் இந்தத் துல்லியத் தன்மை எப்படி எட்டப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. அமெரிக்க உயர் தொழில் நுட்பத்தின் வெற்றி இது. சில மாதங்களுக்குமுன் இதேபாணியில் ஏவுகணைகள் மூலம் இன்னுமொரு ஹமாஸ் இயக்கத்தலைவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி வெளியான தகவல்களை ஆராய்ந்தால் இந்தத் துல்லியத் தன்மை ஒன்றும் ஆச்சரியம் தருவதாக இருக்காது.

அந்தச் சந்தர்ப்பத்திலே துரோகி ஒருவன் பெரும் தொகை கொடுத்து வாங்கப்பட்டிருந்தான் அவனிடம் (அனேகமாக அமெரிக்காவில் தயார் செய்யப்பட்டிருக்கக் கூடிய) கண்ணுக்குத் தெரியாதமை கொடுக்கப்பட்டது. குறித்த தலைவர் தன் அலுவலகத்திலிருந்து வெளிவந்து ஏறப்போகும் காரின் மேற்பகுதியில் அந்த துரோகி தனக்கு தரப்பட்ட மையைப் பூசிவிடுகிறான்.

அந்தப்பகுதிமீது பறந்து கொண்டிருந்த ஒரு செய்மதி யின் உணரிகள் அந்த மையின் மீது குவியம் கொள்கின்றன. அந்த மையினுடைய ஆள் கூறுகள் தாக்குதலுக்காக வந்து கொண்டிருந்த அமெரிக்க தயாரிப்பு அப்பாச்சே ஹெலிகளுடன் செய்மதியிலிருந்து தொடர்புபடுத்தப்படுகின்றன. ஹெலிகள் அணுகிவரும் ஓசையை மறைக்க இரண்டு பயணிகள் ஜெற்விமானங்கள் எதிரெதிராக அப்பிரதேசத்தின் மீது பறக்கின்றன. ஹெலியிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் அந்த மைபூசப்பட்ட பகுதியை இலக்கு வைத்துப் பாய்கின்றன. பிறகென்ன. துல்லியமானதாக்குதலில் அந்தக் காரும் அதனுள் இருந்தவர்களும் சின்னாபின்னமாகின்றனர்.

"எந்த பயங்கரவாத தலைவரும் தப்பமுடியாது" என்று இஸ்ரேலிய பிரதிபாது காப்பமைச்சர் கித்தாய்பாய் கூறியிருப்பது எப்படி என்பது இப்போது புரிகிறதல்லவா? ஆக, இதில் இஸ்ரேல் பெருமைப்படுவதற்கான துல்லியத் தாக்குதல் எதுவும் இல்லை. வேண்டுமானால் இந்த உத்திக்காக அமெரிக்கா பெருமைப்பட்டுக் கொள்ளலாம். வழமை போலவே தன் பேரழிவு உத்திகளை ஆசிய, அராபிய, ஆபிரிக்க நாடுகளில் ஒன்றில் 'சனநாயக' அமெரிக்கா பரீட் சித்திருக்கிறது அவ்வளவுதான். போயும் போயும் ஒரு ஊனமுற்றவர் மீது அதைப்பிரயோகித்திருப்பதுதான் உலகப் பெரும் சோகம். கொல்லப்பட்ட, காயப்பட்ட ஏனையவர்களின் "மனித உரிமைகள்" இற்கு யார் வகை சொல்வது'.




**அனபாயன்**

## படித்ததில் பிடித்தது

### விருந்து

கடும் விஷம் தோய்த்த
வாளைப்போல்...
இன்று...
காதல்
என் இதயத்தை
இரண்டாய் பிளக்கிறது

வேலைப்பாடு செய்த
கிண்ணத்திலே
என் குருதியை நிரப்புகிறேன்
ஒரே ஒரு அதிதிக்கான
இந்த விருந்திலே
கொடுப்பதற்கு
என்னிடம் ஒன்றுமில்லை
என் குருதி தவிர...

நிலவு காயும் இரவு
வெள்ளிக் கடலாய்
பாலைவனத்தை
ஆக்கி விட்டிருக்கிறது

மழைகாலக்
குளிர் வானில்
வேகமே இல்லாமல்
மிதந்துவரும் கழுகாக
இரவு வேளையில்
நினைவுகள் மிதக்கின்றன

தொலைதூரக் கடலொன்றின்
ஏதோ ஒரு தீவில்
கோட்டைச் சிறை அறையின்
பலகணி வழியே
தாரகையை பார்க்கும்
கைதியைப் போல்
நான் கடந்து செல்லும்
ஒவ்வொரு கண்ணாடியிலும்
நான் பார்க்கிறேன்
கனவுகளின்
மென்மையான ஒளியில்
உன் நிமிர்வாண வடிவம்
ஒளிர்கின்றது.

உப்புக் கனத்த
உணவை உண்டவன்
தாகத்தில் தவிப்பதுபோல்
உனக்கான எனது தாகம்
உக்கிரமடைகிறது

எதிர்பார்த்திருப்பதோ
ஒரு அதிதியை மட்டுமே
பரிமாற
வேறு எதுவும் இல்லை
வைரங்கள் இழைத்த
கோப்பையில் நிரப்பிய
என் குருதி தவிர...

கடும் விஷம் தோய்த்த
வாளாய்
இன்று
காதல்
என் இதயத்தை
இரண்டாய் பிளக்கிறது.

மலையாளத்தில் - பாலச்சந்திர சுள்ளிகட்
ஆங்கிலத்தில் - கமலாதாஸ்
தமிழில் - வின்செனற் புளோறன்ஸ்
மூலம் - TheLttle Magazine
நன்றி - த ஸண்டே ஐலண்ட் 02.03.2003

# பொருண்மை வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

### சிதம்பரதிருச்செந்திநாதன்

எமது சூழல் தொடர்பான அக்கறை எமது மக்களுக்கு வெகு குறைவாகவே உள்ளது. அதன் காரணமாகவே எமது தனிப்பெரு வளங்களான காட்டு வளத்தையும், நீர்வளத்தையும் வீணாக்குவதிலும் சூழல் மாசடைதல் தொடர்பான செயற்பாடுகளைச் செய்வதிலும் முன்னிலையில் உள்ளார்கள்.

முன்னோடிகளாகச் செயற்படவேண்டியவர்களே இவ்வாறு ஈடுபடுகையில் அவர்களின் வாரிசுகளான மாணவர்களின் நிலை எப்படி



இருக்கும்.

எமது வளங்களைப் பாதுகாப்பதிலும், பேணுவதிலும் சூழல் தொடர்பான அக்கறையைக் காப்பாற்றுவதிலும் தொடர்ச்சியான ஈடுபாட்டினை மக்கள் காட்டவேண்டுமென்றால் இவை தொடர்பான அவசியத்தை அவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

இதுவும் தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் மூலமே செய்யவேண்டும். அவ்வாறே மாணவர்களுக்கும் சூழல் தொடர்பான பெறுமதியை விளங்கவைக்க செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதன் மூலம் மாணவர்களின் சுற்றாடல் தொடர்பான அறிவு வளம்பெறும். சுற்றாடலைப் பாதுகாப்பதன் அவசியத்தை அவர்களால் புரிந்துகொள்ளமுடியும்.

## குப்பை கூழங்களைக் கூட்டெருவாக்குங்கள்!

சமையல் அறைக் கழிவு தொடங்கி தோட்டக் கழிவு வரையான குப்பை கூழங்களைத் தகுந்த முறையில் சேர்ப்பதன் மூலம் 3-3½ மாதத்தில் சிறந்த பசளையைப் பெற்றுவிடலாம். மாட்டெருவைவிடப் பலமடங்கு போசனைப் பெறுமானமுள்ள பசளை உங்களுக்குக் கிடைக்கிறது.

வீடுகளில் உள்ள கழிவுப் பொருட்களை வீதிகளில் கொட்டாமல் கூட்டெருவாக மாற்றுவதன் மூலம் நோய்கள் தொற்றுதல், இலையான், நுளம்பு, கொசு பெருகுதலைத் தடுக்கலாம். இதனால் சுகாதாரம் பாதுகாக்கப்படுகிறது. கூட்டெரு இடுவதால் மண் வளம்பெறுகிறது. இரசாயன உரங்களை இட்டுக் காய்கறிகளையும், பழங்களையும் நஞ்சாக்குவதில் இருந்து விடுபடவும் இது உதவுகிறது. உங்கள் வீடுகளில் கூட்டெரு தயாரியுங்கள். பயனற்ற கழிவுகளிலிருந்து பயனுள்ள பசளையைப் பெற்றுக்கொள்ளலாம்.

வீதியோரங்கள், ஒழுங்கைகளில் அமைந்திருக்கும் வேலிகளில் நாட்டப்பட்ட பூவரசு, கிளிசறியா, வேம்பு போன்ற மரங்களின் கழிவுகளான இலை குழைகள் தேடுவாரற்ற நிலை யில் சிதைந்து வீணாக மக்கிப் போகிறது. இவற்றையெல்லாம் கூட்டி அள்ளிக் கூட்டெருவாக்கலாம் அல்லவா.

சுகாதாரச் சீர்கேடு விளைவிக்கக் கூடியவாறு தெருவோரங்களில், சந்தைபோன்ற பொது இடங்களில் கிடைக்கும் கழிவுகளை நகரசபையோ அல்லது பிரதேச சபைகளோ பெரிய குழிகளை அமைத்துக் கூட்டெருவைத் தயாரித்து மக்களுக்கு விநியோகிப்பதன் மூலம் அதிக இலாபம் பெறலாம் அல்லவா! தனிப்பட்ட விவசாயிகள் கூட மாட்டெருவை விற்பனைசெய்து வருமானம் பெறுவதுபோல் வீட்டில் சேரும் கழிவுகளைக் கூட்டெருவாக்கி ஏனைய விவசாயிகளுக்கு விற்று வருமானம் பெற்றுக்கொள்ளலாம்.

வீணாகும் கழிவுப் பொருட்களில் இருந்து சிறப்பான பசளையைப் பெறக்கூடியதாக இருக்கிறது. எமது மண் வளம் குறைந்த மண்ணாக மாறி வருகிறது. இந்தநிலை ஏற்படாமல் இருப்பதற்கு உங்கள் வீடுகளில் கூட்டெரு தயாரித்து தோட்டங்களுக்கு இட்டு மண்ணை வளமாக்குங்கள்.

பாவிக்கப்படாத கட்டடங்கள், பாழடைந்த வீடுகள், ஒதுக்குப்புற வீடுகள் என்பவற்றில் வெளவால் எச்சம் அதிகமாகக் காணப்படும். இது போசனைப் பெறுமானம் அதிகமுள்ள செறிவான சேதனைப் பசளையாகும். இப்பசளையை மண்ணுக்கு இடுவதன் மூலம் கூடிய பயன் பெறலாம். கோழி எச்சமும், ஆட்டெருவும் சிறந்த பசளையாகும். மிருக எலும்புகளில் இருந்து பொஸ்பரசு பசளை தயாரிக்கலாம். உலகில் முதல் முதலில் பயன்படுத்திய பொஸ்பரசு எலும்புகளை அரைத்து மாவாக்கிப் பெறப்பட்ட எலும்புப் பசளையாகும்.

நெல் வயல்களுக்கு உமி இடுவதன் மூலம் சேதனப் பசளை கிடைக்கிறது. 1 ஹெக்டெயருக்கு நிலப்பரப்புக்கு 5-8 மெற்றிக் தொன் உமி இடவேண்டும். நெல்வயல்களுக்குக் கூடிய அளவு பாவிக்கப்பட வேண்டும். உவர் வயல்களுக்கு உமியை இடும்போது பயிரின் வேர் வலயத்திலுள்ள உப்புத்தன்மையைக் குறைக்கிறது. அரிசி ஆலைகளில் எரித்துச் சாம்பலாக்கும். உமியும் விசேடமானது. நிலக்கடலைக் கோது கூட பசளையாகப் பயன் படுத்தலாம்.

நெல் வயல்களுக்கு வைகோலும் முக்கிய பசளையாகும். நெற்பயிர்களால் உறிஞ்சப்படும் பொட்டாசியத்தின் 90% பகுதி வைக்கோலில் காணப்படுகிறது. சிபார்சு செய்யப்பட்ட பொட்டாசியத்தைவிட 6 மடங்கு அதிகமாகப் பொட்டாசியம் உள்ளது. ஆகவே உங்கள் வயலில் கிடைக்கும் வைக்கோலை வயல்களில் இட்டால் பொட்டாசியம் வயல்களுக்குத் தேவையில்லை. இதேபோன்று 75% சிலிக்காவும் கிடைக்கிறது. வைக்கோலை எடுத்துப் போடுவது சிரமமாக இருக்குமானால் எரித்துச் சாம்ப லாக்கியும் வயல்களுக்கு இடலாம். இப்படிச் செய்வதால் நைதரசனும் சல்பரும் இழக்கப்படும். பொட்டாசிய மும் சிலிக்காவும் இழக்கப்படு வதில்லை.

வைக்கோலை மண்ணுடன் கலந்து உழுதுவிடலாம். நான்கு மெற்றிக்தொன் வைக்கோலை வயலுக்கு இடுவோமாகில் 24 கிலோ நைதரசனும், 3 கிலோ பொஸ்பரசும் 72 கிலோ பொட்டாசியமும் கிடைக்கின்றது. வயல்களுக்கு வைக்கோல் இடமுடியாத பட்சத்தில் நெல் அறுவடை முடிந்த பின் உடனே உழுதுபுரட்டி விடுங்கள் நெல் அடிக்கட்டைகளும் பசளையாகக் கிடைக்கும்.

❖ ❖ ❖



பாக்குநீரிணையை நீந்திக்கடந்து சாதனை புரிந்தவர் யாழ்.தொண்டமனாறைச்சேர்ந்த முருகுப்பிள்ளை நவரத்தினசாமி அவர்கள். அவர் அச்சாதனையை நிகழ்த்தி 50 ஆண்டுகள் இன்றுடன் நிறைவுறுகிறது.

## ஐம்பது ஆண்டுகளின் நிறைவில் சாதனை மனிதனின் நினைவு

1954ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி- சாதனை ஒன்றைப் படைக்கும் நோக்குடன் யாழ் தொண்டமனாறைச்சேர்ந்த தமிழ் மகன் ஒருவன்பாக்கு நீரிணையில் குதித்தார். அவர்தான் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி. வல்வெட்டித்துறை துறைமுகத்தில் இருந்து கோடிக்கரை வரையான 31 1/2 மைல் தூரத்தை இடைவிடாது நீந்திக் கடக்கும் நோக்கத்துடன் இவர் தனது சாதனைப் பயணத்தை அன்று பிற்பகல் 2.30மணிக்கு ஆரம்பித்தார்.

இவரை வழியனுப்ப வந்த பெருமளவான மக்களிடமும் தனது மூன்று பிள்ளைகளிடம் விடைபெற்று தனது சாதனையை நிலைநாட்டப் புறப்பட்ட அவ்வீரர் கடலில் சிறிது தூரம் சென்றதும் மக்களிடம் கைகாட்டி விடைபெற்றார். வைத்திய அதிகாரிகள் மற்றும் சில அதிகாரிகளும் படகுகளிலும் கட்டுமரத்திலும் பின்தொடர சமுத்திரத்தைக் கிழித்துக்கொண்டு வேகமாக சோர்வின்றி நீந்திக்கொண்டு கோடிக்கரை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். எவ்வித களைப்புமின்றி நீந்திக்கொண்டிருந்த அவருக்கு கோடிக்கரையை அடைய ஏழுமைல்கள் மட்டுமே இருந்த வேளையில் இயற்கையின் சோதனை ஏற்பட்டது.

கடும் மழையினால் எழுந்த பேரலை அவருக்கு பெரும்தடையாக அமைந்தது. மோட்டார் படகுகளும், கட்டு மரங்களும் தாக்குப்பிடிக்காது பின்வாங்கத்தொடங்கின. எனினும் இந்நிலையிலும் எவ்வாறாயினும் சாதனை புரிந்தே தீருவேன் என்ற திடசங்கற்பத்துடன் நீந்திய அவரை கடலில் ஏற்பட்ட கடுமையான நீரோட்டம் பின்நோக்கித்தள்ளியது. அவர் நீந்தி முன்னேறிச்சென்ற தூரத்தைக்கூட தாண்டிபின்னோக்கிவரவேண்டியதாயிற்று இதனால் அவர் தனது 23 1/2 மணிநேர முயற்சியைக் கைவிட்டு கட்டுமரத்தில் ஏறவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் நீந்திச் சாதனை செய்யநினைத்த தூரத்திலும் பார்க்கக்கூடுதலாக - 35 மைல்தூரத்தை நீந்திக்கடந்திருந்தார்.

ஆனால் "பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தே தீருவேன் அன்றேல் என்பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் கடப்பான்" என இந்த முயற்சியின் பின் நவரத்தினசாமி அவர்கள் உறுதிபடக்கூறினார்.

அவர் கூறியது போலவே ஒரு வாரத்தின் பின்னர் அதாவது 25ஆம் திகதி பிற்பகல் 4.10 மணிக்கு மீண்டும் தனது சாதனை முயற்சியை ஆரம்பித்தார். இச்சாதனை வீரரை வழியனுப்பிவைக்க வாழ்த்தவென முன்னரிலும் பார்க்க கூடுதலான மக்கள் கரையிலே திரண்டனர். இவர்களின் வாழ்த்துகளுடன் தனது இரண்டாவது முயற்சியை ஆரம்பித்த சாதனை வீரர் இடைவிடாது பாக்கு நீரிணையை ஊடறுத்து நீந்தி 26ஆம் திகதி இரவு ஏழுமணிக்கு கோடிக்கரையில் கொடியேற்றி தனது சாத னையை நிலைநாட்டினார். இந்த வீரர் இச்சாதனையைப் புரிந்தபோது அவரது வயது 45என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(19ஆம் பக்கம் பார்க்க)



☞ பிறரை அடக்கி ஆள விரும்புபவன், முதலில் தன்னை அடக்கி ஆளப்பயில வேண்டும். - ஃபிலிப் மேஸ்ஸிங்கர்

# விரைவாக முடிவெடுக்கும் ஆற்றலை விளையாட்டு மட்டுமே வழங்கும்

**-அரச அதிபர் இராசநாயகம்-**

சரியான தீர்மானங்களை விரைவாக முடிவெடுக்கும் திறனை விளையாட்டு மட்டுமே வழங்குகிறது. எனவே அறிவை வழங்கும் கல்வியோடு விளையாட்டும் இணைத்துக் கொள்ளப்படும் போது மட்டுமே கல்வியும் முழுமைபெறும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.தி.இராசநாயகம் தெரிவித்தார்.



கிளித்தட்டுக்கான லெப்.கேணல் புலேந்திரன் வெற்றிக்கேடயம்.

கடந்த மூன்றாவது தமிழீழ தேசியப் பெருவிளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற கிளித்தட்டு வீரர்களைப் பாராட்டும்போது அவர் தெரிவித்தார். கிளிநொச்சியில் அமைந்துள்ள இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் தலைமைப் பணிமனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பாராட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் திரு.ராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர்மேலும் உரையாற்றுகையில்; கல்வியினூடாக அறிவைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் விளையாட்டும் மிக முக்கியமான அங்கம் என்பதை பெற்றோரும், கல்விச் சமூகமும் உணர்ந்துகொண்டு செயற்படவேண்டும் என்றார். மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் எமது மக்களின் பொருளாதாரவிருத்திக்கான நடவடிக்கைகளுடன் விளையாட்டு அபிவிருத்தியும் இணைந்து ஏற்படுத்தப்படவேண்டும் என்றார். இதே போன்று சிறந்த கோல் காப்பாளராக எமது மாவட்டத்தைச் சேர்ந்த வசந்தீபன் தெரிவுசெய்யப்பட்டதையும் பாராட்டிய அவர் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள் ஊடாக எமது மாவட்ட உதைபந்தாட்ட அணியும் உயர்வடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர் தொடர்ந்தும் இப்பயிற்சிகள் நடத்தப்பட்டு மேலும் மேலும் சிறப்புடைய அணியாக திகழவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மாவட்ட தாச்சி அணியில் இடம்பெற்ற பாரதிபுரம் மாலதிவிளையாட்டுக்கழகம், உதயதாரகை விளையாட்டுக்கழகம் என்பவற்றிற்கான மைதான வசதிகள், மற்றும் உபகரணங்கள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.



பாராட்டுவைபவத்தில் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், மாவட்டவிளையாட்டு உத்தியோகத்தர், சு.கனகராஜா, தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம.பத்மநாதன், செயலாளர்.அ.அன்ரன் அன்பழகன், கிளிநொச்சிமாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் ராஜா ஆகியோருடன் அணிவீரர்கள்.

எதிர்காலத்தில் விளையாட்டமைச்சின் மாகாண மட்டப் போட்டிகளில் 'கிளித்தட்டும்' இணைத்துக் கொள்ளப்படுவதற்கான வேண்டுகை மாகாண விளையாட்டுத் திணைக்களம் ஊடாக, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சுக்கு விடுக்கப்படும் என மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சு.கனகராஜா தெரிவித்தார். தமிழீழ விளையாட்டுத் துறைத் தலைவர் திரு.ம.பத்மநாதன், செயலாளர் திரு.அ.அன்ரன் அன்பழகன் ஆகியோரும் பாராட்டுரைகளை வழங்கினர். இளந்தென்றல் நிறுவனம் இவ்வீரர்களுக்கான கௌரவிப்பை வழங்கியிருந்தது.



சிறந்த வீரருக்கான கௌரவமும், விருதும் .

**அ.அ.அ**

### வெற்றிபெற்ற அணி வீரர்கள்

01. புண்ணியராசு இந்திரன்
02. சுப்பிரமணியம் மரியதாஸ்
03. கந்தசாமி கலையமுதன்.
04. கைலாசபிள்ளை மோகனகாந்தன்.
05. சக்திவேல் ஜெயசீலன்.
06. சக்திவேல் ஜெயசிலன்.
07. சக்திவேல் யோகசீலன்.
08. கோவிந்தன் சிவகுமார்.
09. மணிவேல் அன்பழகன்.
10. ஞானசேகரம் பிரபாகரன்.
11. சிவனு சிறீதரன்.


## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்கள்

கடந்த 12ஆம் திகதி வெள்ளிமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்களில் கீழ் வரும் பதவிகள் தவறப்பட்டுள்ளதென்பதனை அறியத்தருகின்றோம்.

**07. வரவேற்பாளர் :-**

க.பொ.த.(சாதாரண தரம்) சித்தியுடன் நல்ல பேச்சுவன்மை இருத்தல் வேண்டும். வயதெல்லை 18 – 25 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**08. மொழிபெயர்ப்பாளர் :-**

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**09. சாரதி :-**

இலகு/கனரக வாகனம் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். சாரத்தியத்தில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும் வயதெல்லை 20 – 30வரை.

**10. மெக்கானிக் :-**

மோட்டார் சைக்கிள் /டீசல் இயந்திரங்கள் திருத்துதலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு உணவு, தங்குமிடம், மருத்துவவசதி, போக்குவரத்துவசதி மேலதிகமாக வழங்கப்படும்.

பொறுப்பாளர், ஆளணிப்பிரிவு,
(சி-9327) காவல்துறை,தமிழீழ விடுதலைப்புலிகள்.



30-03-2004 இல் ஆரம்பமாகின்றது
250க்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்கேற்பில் பிரமாண்டமான மேடை அமைப்பில்

## திருமறைக்கலாமன்றம்
தயாரித்து வழங்கும்

## காவியநாயகன்

மனிதம் எமது பாடல் — மனிதம் எமது தேடல்

[திருப்பாடுகளின் காட்சி]
காலம்:- மார்ச் 30,31,01,03,04 - 2004
[ செவ்வாய்,புதன்,வியாழன்,சனி,ஞாயிறு]
- ஐந்து நாட்களுக்கு -

மன்ற அரங்கில் — மாலை 7.00 மணி

குறிப்பு:-
★ பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் - ஆசனப்பதிவு 30 ரூபா
★ தூர இடங்களில் இருந்து வரும் பார்வையாளர்கள் முன்னதாகவே உங்கள் ஆசனங்களை பதிவு செய்யுங்கள் இறுதி நேர ஏமாற்றத்தைத் தவிர்க்க இது உதவும்.
★ ஆசனங்களுக்கான பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ளலாம்.

இறைமகன் இயேசுவின் கல்வாரி நோக்கிய பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238,பிரதானவீதி, யாழ்ப்பாணம்,
T.P/Fax : 021 222 2393,
E.Mail : CpaJaffna @ sltnet - lk
Website: www.Cpateam.org
(4326) திருமறைக் கலாமன்றம்



## இலக்கியப் படைப்பாளிகளே...

உங்களிடமிருந்து வெள்ளிநாதம் எதிர்பார்ப்பது-

தரமான





இன்னும், இன்னும் உங்கள் எண்ணங்களில் தோன்றும் வண்ணங்கள்... உங்கள் படைப்புகளின் பரப்புகள் போராட்டம், சமூகம் என விரிந்த பார்வையாக இருக்கட்டும்.

படைப்புக்கள் அனுப்பப்பட
வேண்டிய முகவரி- ஆசிரியர், வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



## MOTHER BOARDS
Mercury @ MICRO PC SYSTEMS

Intel, VIA, SiS chipset - solution to P4/Celeron/AMD - Athlon, Duron




யாழ்.. கிளிநொச்சியில் உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்

Motherboardsக்கு கிடைத்த சர்வதேச விருதுகள்
VAR India's Award for Motherboards — IT Nation Channel Champion — Most admired company for motherboards from CRN

MICRO Pc மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

கிளிநொச்சி: கணனிமையம் (TCC) கந்தசாமி கோயிலடி.
யாழ்ப்பாணம்: 175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலை 021-2225893

DREAM STATION

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

1909ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி பிறந்த அவருக்கு இவ்வாறு ஒரு சாதனையைப்புரிய வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியது ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடந்த ஒரு வெள்ளையரின் சாதனையாகும். இவர் கல்விகற்கும் காலத்தில் ஆசிரியர் ஒருவர் இச்சாதனை குறித்து எடுத்துக் கூறியபோது தான் எவ்வாறாயினும் பாக்கு நீரிணையை நீந்திக்கடக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்து அதற்காக விடாப்பிடியாக முயற்சிகளை எடுத்தார்.

தனது கல்வியின் பின் விவசாய திணைக்களத்தில் சேர்ந்து கடமையாற்றிய அவ்ர் அங்கும் தனது நுண்மதியினால் விதைதூவும் இயந்திரம் போன்றவற்றை வடிவமைத்து அதற்கான அங்கீகாரம்பெற்றார்.

குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தநிலையிலும் தனது குறிக்கோளை எவ்வாறாயினும் நிறைவேற்றியே தீருவதென இடைவிடாது முயற்சியை மேற்கொண்டுவந்தார்.

தனது சாதனையை நிலைநாட்டுவதற்காக 18வருட காலம் அவர் பயிற்சிகளை மேற்கொண்டார். தனது வீட்டிலிருந்து கிளிநொச்சி வரையான எண்பது மைல்கள் தூரத்தை ஈருருளி மூலம் கடந்து சென்றும் மணற்குவியல்கள் உள்ள இடங்களில் 10மைல் தூரத்தை நடந்தும் தனது உடலை உறுதிப் படுத்திக்கொண்டார். கடலில் பல மைல்கள் தினமும் நீந்திப்பயிற்சி எடுத்தார். இரவும் பகலும் நீந்தவேண்டியேற்படும் என்பதால் கடலில் அசைவின்றி படுக்கும் பயிற்சியை பலமணி நேரங்கள் எடுத்தார்.

இவ்வாறு ஓய்வு ஒழிச்சலின்றி அவர் எடுத்த பயிற்சியும் விடாமுயற்சியும் அவரைச் சாதனை மனிதனாக்கியது. இவரது சாதனை குறித்த செய்திகிடைத்ததும் தமிழ் மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். இதனை பெருவிழாவாகவே அவர்கள் நடத்தினர்.

அவ்வேளையில் அவ்ருக்கு வரவேற்பளிக்கவென வல்வெட்டித்துறை துறைமுகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு நின்றனர்.

அவ்வேளையில் அரசாங்கமும் அவருக்கு பலபாராட்டுகளையும் பரிசில்களையும் வழங்கியதுடன் பிரிட்டிஸ் மகாராணிக்கும் கோமகனுக்கும் அறிமுகம் செய்துவைத்துக் கௌரவித்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர் 50ஆண்டுகளுக்கு முன் புரிந்த சாதனையை அவர் மறைந்து 35வருடங்களுக்கும் மேலான போதும் கூட கௌரவிக்க இன்னமும் அவரது மக்கள் விழா எடுப்பது அவருக்கு கிடைக்கும் மிகப்பெரிய கௌரவமாகும்.


### தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வ.இல:- 121/2003,
தன்மை:- காணி
பெறுமதி:- 300000

வழக்காளி
*********

சுப்பிரமணியம் அரியபுத்திரன்,
இல-240,ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

எதிர்
****

1) சின்னப்பு கதிரவேலு,
2) பசுபதிப்பிள்ளை நல்லம்மா,
மே/பா.ம.தவராசா,
247,ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

- எதிராளிகள் -

## பகிரங்க அறிவித்தல்

குறித்த 1ஆம் எதிராளிக்கு,

மேற்குறித்த வழக்கினை, வழக்காளி, இந்நீதி மன்றில், உமக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளார். உமக்கான அழைப்புக்கட்டளையை முறைநிறைவேற்றுனர் மூலம் சேர்ப்பிக்க முயன்றபொழுது, நீர் அம்முகவரியில் இல்லாமையால், உமக்குரிய அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முடியவில்லை. எனவே, நீரோ அல்லது உமது நலனில் அக்கறை உடையோரோ, இப் பகிரங்க அறிவித்தல் வெளியாகிய அன்றில் இருந்து 15 நாட்களுக்குள், ஏதும் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்காதுவிடுமிடத்து, இவ் அறிவித்தலை நீவிர் ஏற்றதாகவே கொள்ளப்படுவீர் என்றும், உமக்கு எதிராக ஒரு முகவிளக்கம் மேற்கொள்ளப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள், மேற்கொள்ளப்படும் என்பதனை இதனால் உமக்கு அறியத்தரப்படுகின்றது.

இந்த 2004ஆம் ஆண்டு, பங்குனி 9ஆம் திகதி.

வழக்காளிசட்டவாளர்,
தா.இ.குலசங்கர்,
டிப்போச்சந்தி, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

மன்றின் கட்டளைப்படி
கிளிநொச்சி.

(4309)



விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வெள்ளி நாதத்தில்
வி.பி.யோசப்பின் புதிய மொழியாக்கத் தொடராக வெளிவருகின்றது
மூடுபனிக்குள் ஒரு தேடல்
ஆவலோடு எதிர்பாருங்கள்



"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறையின்"
நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டெட்
NORTHERN TECHNOLOGY(PVT)LTD

- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை
- வவுனியா,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த சகல அரச,தனியார் நிறுவன ஊழியர்களும் இலகு தவணைக்கட்டண முறையில் கணனிகளைப்பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

(சி-9273)


## படத்திற்கு மெருகூட்டுங்கள் -61



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் -61

.................................................
.................................................
.................................................
.................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -60



செ.கௌதமன்,
533/11,
தர்மபுரம்.

### பரிசுக்குரிய வரிகள்

*அரவணைக்கும் உன் தாயை அந்நியன்*
*கொன்றுவிட்டதால் - தனிமரமாய்த்*
*தவிக்கின்றாயா கவலையைவிடு*
*நாளைய தமிழீழத்தில் உனக்காய் தமிழன்னை.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*உண்ண உணவு இருந்தும்,*
*உறங்க பஞ்சணை இருந்தும்*
*உந்தன் வதனத்தில் சலனம் ஏன்?*
*உறவுகள் தொலைந்து விட்டனவோ.*

ம.கலைநிலா,
புதுக்குடியிருப்பு.

அன்னைமடி தெரியா அருந்தக் கற்றுக்கொண்ட
அன்புத் தம்பியே.... அள்ளி உண்ணும் போது
அடுத்த சிந்தை எங்கு செல்கிறது? அயல்நாட்டில் இருந்து
அன்னை மண் பக்கமா?

இரா.மாலா
றெட்பானா.

*நீ உண்ணுவது தமிழர் வியர்வைதானே*
*நீ உறங்குவது வன்னி மன்னில்தானே*
*நீ வளர்ந்திடுவாய் உன்நாட்டிற்காக*
*நீ வாழ்வளிப்பாய் உன் மக்களுக்காய்.*

செ.ஜக்சன்,
கிளிநொச்சி.

*பாச உணர்வோடு உன்னைப் பெற்றவள்*
*பாதிவழியில் பிரிந்து போனதால்*
*பிஞ்சு வருந்தாதே கண்ணே பின்னாளில் உலகை*
*விஞ்சும் வீரனாய் நீ வருவாய்.*


இ.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*கண்ணா கஞ்சி அருந்தும் போதும்*
*கண்ணீர் வடிக்கின்றாயே!*
*இனவெறியனால் கொல்லப்பட்ட-உன்*
*அன்னையை இன்னுமா மறக்கமுடியவில்லை.*

ச.வாமதீஸ்,
புதுக்குடியிருப்பு.


இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.


இயற்கையின் அற்புதப் படைப்புகளில் ஒன்று குடும்பம். - ஜார்ஜ் ஸாந்தாயனா




இவரைப்பார்த்தவுடன் சதாமின் ஞாபகம் உங்களுக்குவருகிறதா.

இவர் அவர் இல்லை. ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் ஆன்மீகத்தலைவர் செயிக் அகமட் யசீன் தான் இவர்.

இவர் அண்மையில் தொழுகையை முடித்துக் கொண்டு தமது இருப்பிடத்தை நோக்கி சென்று கொண்டிருக்கையில் இஸ்ரேலியப்படையினரின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இவர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்ற வரைபடத்தையும் இங்கே காணலாம்.
















இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.